NL 736

# வரலாறு

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 8



சமூக விஞ்ஞானத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

# தரம் 08

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

**(2009 ஆம் ஆண்டிலிருந்து 08 ஆந் தரத்துக்கானது)**

சமூக விஞ்ஞானத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாறு**
தரம் 08
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதலாம் பதிப்பு:- 2008

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN: 978-955-654-243-1

பதிப்பாசிரியர்கள் : கலாநிதி உ.நவரத்தினம்
பணிப்பாளர், சமூக விஞ்ஞானத்துறை
திரு. ச. கருணாகரன்
உதவிச் செயற்றிட்ட அதிகாரி, சமூக விஞ்ஞானத்துறை

சமூக விஞ்ஞானத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம

அச்சுப்பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

புத்தாயிரமாண்டில் முதலாவது கலைத்திட்டச் சீர்திருத்தம் இன்றைய பாடசாலைக் கல்வி முறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சிந்திக்கும் ஆற்றல்களும் சமூக ஆற்றல்களும், தனியாள் ஆற்றல்களும் நலிவடைவதால் இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டும், அதற்கான காரணங்களை ஆராய்ந்தும், அவ்வாறான நிலைமைகளை வெற்றி கொள்ளத் தேவையான பின்னணிகளை உருவாக்கியும் இக்கலைத்திட்டச் சீர்திருத்தம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளுடன் ஒப்பிடும்போது இதற்கு முன்னர் எமது நாடு கல்வியில் முன்னணி வகித்தது. ஆனால் இன்று இவ் வலயத்தின் அநேக நாடுகள் இலங்கையை விட கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளன. தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கெனவே முடிவு செய்தவற்றைக் கற்பதிலும் இருக்கும் விடயங்களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதிலும் கல்வியியலாளர்கள் அண்மைக்காலமாக ஈடுபட்டமை இதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் சிலவாகும்.

இவ்விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து ஒரு தெளிவான கோட்பாட்டின் கீழ் புதிய கலைத் திட்டத்தை உருவாக்குவதில் தேசிய கல்வி நிறுவகம் முயற்சித்துள்ளது. தெரிந்தவற்றை மாற்றியமைத்தும், புதியவற்றைக் கண்டறிந்தும், எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை உருவாக்கியும் நாளைய வெற்றிக்காக தயார் நிலையில் இருக்கக்கூடிய மாணவர் குழுவை உருவாக்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நிலையை வெற்றி கொள்ள ஆசிரியர் வகிபாகத்தில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் புதியதாகக் கூறவேண்டியதில்லை. இதுகாலவரை எமது வகுப்பறைகளில் நிலவி வந்த அறிவைக் கடத்தல் வகிபாகம், பரிமாற்ற வகிபாகம் என்பவற்றுக்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சிமைய, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கி புதிய ஆசிரியர் வகிபாகத்தில் பயிற்சி பெறவேண்டிய நிலை இன்றைய ஆசிரியர் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய நிலைமைகளுக்கு இசைவாக்கம் அடைவதற்கான பல அறிவுறுத்தல்களும் அடங்கிய இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி விளைதிறன்மிக்க ஆசிரியராக புத்தாயிரம் ஆண்டில் வருவதற்கு உதவும் என நாம் நம்புகிறோம். இந்த அறிவுறுத்தல்களைப் பரிசீலிப்பதன் மூலம் அன்றாடக் கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்றே மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் இலகுவாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கெனத் தரப்பட்டுள்ள தேடலுக்கான அறிவுறுத்தல்கள், தரஉள்ளீடுகள், ஆசிரியர் செயற்பாடுகளை இலகுவாக்கும் என்பது திண்ணம். அத்துடன் நேர ஒதுக்கீட்டின்போதும் வளப்பங்கீட்டின்போதும், உள்ளக மேற்பார்வையின்போதும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்க பல தகவல்களை அதிபர்களிடம் கொண்டு செல்வதற்கு இவ்வழிகாட்டி உதவும்.

பாடசாலை மட்டத்திலான மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு மட்டுமின்றி வெளியக மேற்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடும் பல்வேறு தரத்திலான அதிகாரிகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் இவ்வழிகாட்டியைத் தயாரிப்பதில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த விஞ்ஞான தொழினுட்ப பீடத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி (திருமதி) ஐ. எல். கினிகே அவர்கள் உட்பட நிறுவன உத்தியோகத்தர்களுக்கும், பல்வேறு வழிகளில் சேவை செய்த வளவாளர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பணிப்பாளர்நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007ஆம் ஆண்டிலிருந்து, நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும், ஆசிரியர் வழிகாட்டற் கோவையும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயன்முறையின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத் தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றற் கலாசாரம் ஒன்றைக் காண முடியும். இதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்க. இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தற் செயலொழுங்கின் போது மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர், சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்-இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள, கற்றல் கற்பித்தல் செயன்முறையை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல்-கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதுடன் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறைச் சூழல் என்பனவற்றையும், புதிய கற்றற் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர்நாயகம்,
மொழிகள்,மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

அரசினால் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடநூல்கள் வழங்கப்படுவதுடன் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் வழங்கப்படுகின்றன. கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி மட்டங்களை அடையும்பொருட்டு மாணவர்களை வழிநடத்துபவர் ஆசிரியரேயாவர். இப்பணியைத் திறம்பட மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ள உங்களுக்கு பயனுறுதிவாய்ந்த கற்றல் - கற்பித்தலை மேற்கொள்ளவும் பாடநூல்களிலிருந்து அதிகூடிய பயனைப் பெறும் முறை தொடர்பாக மாணவர்களை வழிகாட்டவும் போதிய அறிவுரைப்புகளை இந்நூல் வழங்கும்.

தற்கால உலகின் சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் மாணவர் குழாத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உங்களால், இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் கற்பித்தல் செயற்பாட்டில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

**டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர்
நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
'இசுருபாய'
பத்தரமுல்ல
16. 09. 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்தலைவரின் செய்தி

புதிய கல்விச் சீர்த்திருத்தங்களுக்கு அமைவாக எட்டாந் தரத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மூன்று பகுதிகளைக் கொண்டுள்ள இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதலாம் பகுதியானது பாடத்திட்டத்தையும் இரண்டாம் பகுதியானது கற்றல் கற்பித்தல் முறையியினையும் மூன்றாம் பகுதியானது கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைமைகளையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கிணங்க முதலாம் பகுதியில் எட்டாந் தரத்திற்குரிய வரலாற்றுப் பாடத்துக்கான பாட உள்ளடக்கமும் இரண்டாம் பகுதியில் அப்பாட உள்ளடக்கங்களுக்குரிய மாணவர் செயற்பாட்டுக்கான கற்றல் கற்பித்தல் முறையியலும் முன்மொழியப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினூடாக எதிர்பார்க்கப்படும் கற்றற் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கான கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகளும் இடம் பெற்றுள்ளது.

இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், பாடத்திட்டத்திற்குரிய பாட உள்ளடக்கம் முழுமையாக பூர்த்தி செய்யப்படும் வகையில் செயற்பாடுகள் தயாரிக்கப்பட வில்லை என்பதாகும். ஒவ்வொரு அலகுகளுக்குமாக மாதிரிச் செயற்பாடுகள் இரண்டு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. அம்மாதிரிச் செயற்பாடுகளை உதாரணமாகக் கொண்டு முழுப் பாட உள்ளடக்கத்தையும் உள்ளடக்கும் வகையில் செயற்பாடுகளை தயாரித்துக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மூன்றாம் பகுதியிலுள்ள கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளை கட்டாயம் பயன்படுத்துதல் வேண்டும். ஏனெனில் அவை தவணைப் பரீட்சைகளுக்கு கட்டாய வினாக்களாக அமையும். ஆகவே வரலாறு பாடத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதுடன் புதிய உலகிற்குப் பொருத்தமான பிரசைகளை உருவாக்குவதற்கு மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு இவ்வழிகாட்டி தொடர்பாக தங்களது அபிவிருத்தி சார் அபிப்பிராயங்களை தேசிய கல்வி நிறுவகத்தின் சமூக விஞ்ஞானத்துறைக்கு அறியத்தருமாறு வேண்டுகிறோம்.

**பாடத்தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளவாளர்கள்

**ஆலோசனைக் குழு:**

| | | |
|---|---|---|
| பேராசிரியர் ஜே.டப்ளியூ. விக்ரமசிங்ஹ | - | பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம் |
| திரு.விமல் சியம்பலாகொட | - | உதவிப் பணிப்பாளர் நாயகம் தேசிய கல்வி நிறுவகம் |
| பேராசிரியர் மாலனி அந்தகம | - | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் யூ.பீ. கருணாநந்த | - | களனிப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி கே.எம்.பி. குலசேகர | - | களனிப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்ன | - | களனிப் பல்கலைக்கழகம் |

**வழிகாட்டல்:**

| | | |
|---|---|---|
| கலாநிதி உ. நவரத்தினம் | - | பணிப்பாளர் சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி. |

**இணைப்பாளர்கள்:**

| | | |
|---|---|---|
| திருமதி. டி.எச்.சந்திமா நிஸானி தர்மபால | - | செயற்றிட்ட அதிகாரி (வரலாறு) சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி. |
| திரு. ச.கருணாகரன் | - | உதவிச் செயற்றிட்ட அதிகாரி சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி. |

**எழுத்தாளர் குழு:**

| | | |
|---|---|---|
| திரு. பீ.எல்.ஆர். ரோஹண குமார | - | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. சீ.எஸ். ஜயசிங்ஹ | - | ஆசிரியர் நிலைய முகாமையாளர் - ஹோரன |
| திருமதி. ஏ. இந்திராணி | - | இர/ குழந்தை இயேசு கன்னியர்மடம், தேசிய பாடசாலை இரத்தினபுரி |
| திரு. கன்சன ஜனப்பிரிய | - | றுகுணு பல்கலைக்கழகம் |
| திருமதி. ஈ.எம். சீலவதி மெனிக்கே | - | வலயக் கல்விக் காரியாலயம், குளியாப்பிட்டிய |
| திருமதி. ஆர்.டபிள்யு.எஸ். தேல | - | கம்/ மசனட் வித்தியாலயம் - கந்தானை |
| திரு. எஸ்.எம். தயானந்த | - | முன்னாள் செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |
| திரு. வீரரத்ன | - | வலயக் கல்விக்காரியாலயம், மாத்தறை (ஓய்வு பெற்ற) |
| திரு.என்.சிதம்பரநாதன் | - | முன்னாள் பணிப்பாளர் - தே.க.நி. |
| திரு.சிபர்தீன் மரிக்கார் | - | பாரதி ம.வி., வத்தேகம |
| திருமதி.எஸ்.பாலசுந்தரம் | - | முன்னாள் பிரதி ஆணையாளர் இலங்கை பரீட்சைத் திணைக்களம் |
| திரு.என்.எம்.எம். மொஹிதீன் | - | முன்னாள் ஆசிரிய ஆலோசகர் |

**கணினி வடிவமைப்பு:**

| | | |
|---|---|---|
| செல்வி. எம்.என்.எப். ரிஹானா நயீம் | - | தேசிய கல்வி நிறுவகம் |

**ஏனைய உதவிகள்:**

| | | |
|---|---|---|
| திரு. ஆர்.எம்.ரூபசிங்ஹ | - | தேசிய கல்வி நிறுவகம் |
| செல்வி.சந்தியா அத்தபத்து | - | தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி. ஷிரானி சமரக்கொடி | - | தேசிய கல்வி நிறுவகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பக்கம்

முகவுரை iii

உதவிப் பணிப்பாளர்நாயகத்தின் செய்தி iv

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி v

பாடத்தலைவரின் செய்தி vi

வளவாளர் பெயர்ப்பட்டியல் vii

பாடத்திட்டம் (முதலாம் பகுதி)

1.0 அறிமுகம் 02

2.0 தரம் 8 இற்கான பாடத்திட்ட நோக்கம் 03

3.0 பாடத்திட்டம் 04

4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் 09

கற்றல் - கற்பித்தல் செயன்முறை(இரண்டாம் பகுதி) அறிமுகம் 11

மாதிரிச் செயற்பாடுகளும் உத்திகளும் 14

8.1 கண்டி இராச்சியம் 16

8.2 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி 37

8.3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை 53

8.4 இலங்கையும் ஒல்லாந்தரும் 71

8.5 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் 87

கணிப்பீடும் மதிப்பீடும் 105

கற்றல் - கற்பித்தல் விரிவுபடுத்தற் செயன்முறை கருவிகள் 107




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பகுதி

# பாடத்திட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

வரலாற்றைக் கற்பதென்பது, மனித நாகரிக வளர்ச்சியில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசாரத் துறைகளில் வெளிப்படும் பிரச்சினைகளினதும் வெற்றிகளினதும் பல்வேறுவிதமான இயல்புகளையும் நடுநிலையாகவும் விமர்சன ரீதியாகவும் புரிந்து கொள்வதற்காகும். அது சுற்றாடலையும் தேசிய மரபுகளையும் பாதுகாத்து, சகல இனங்களையும் சேர்ந்த மனிதர்கள் ஒன்றாக வாழக் கூடியவாறான சிறந்த சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் புதிய கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாக 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான வரலாறு பாடசாலைக் கலைத்திட்டத்தில் கட்டாய பாடமொன்றாக சேர்க்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைக் கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். (அதன்படி 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை வரலாறு கலைத்திட்டம் திட்டமிடப்பட்ட போது இனங்காணப்பட்ட பாடத்தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டது).

8 ஆந் தரத்திற்கான இப்பாடத்திட்டமானது 2009 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து தலைப்புகளினாலான இப்பாடத்திட்டத்தில் இலங்கை மற்றும் இலங்கை தொடர்பாக தாக்கம் விளைவித்த உலக வரலாற்றுச் சம்பவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி எட்டாம் தரத்துக்காக கண்டி இராசதானி, போர்த்துக்கேயரின் இலங்கை வருகை, ஒல்லாந்தரின் இலங்கை வருகை, ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் 17 ம், 18ம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய முக்கியமான நிகழ்வுகள் எனும் தலைப்புகள் கற்றலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதே போன்று 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான கலைத்திட்டத்தைக் கற்பதன் மூலம் கீழ்வரும் தேர்ச்சி மட்டங்களை மாணவர் அடைதல் வேண்டும்.

- வரலாற்றின் பரம்பலையும் முக்கியத்துவத்தையும் விசாரணை செய்வார்.
- நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்காக இறந்தகாலம் பற்றிய அறிவைப் பயன்படுத்துவார்.
- தேசியப் பிரச்சினையை ஒப்பீட்டு ரீதியில் நோக்கிச் செயற்படுவார்.
- முக்கியமான வரலாற்று நாயகர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- தேசியத்தின் தனித்துவத்தை அறிந்து, அதனை மதித்து நடப்பார்.
- வரலாற்று அனுபவங்களை நிகழ்கால நன்மைக்காகப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவார்.
- ஆய்ந்தோய்ந்தும் விமர்சன ரீதியாகவும் நோக்கும் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- வரலாற்றுத் தகவல்களினூடாக இடங்களை அறிந்து கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0 8 ஆந் தரத்துக்குரிய பாட நோக்கங்கள்

- கண்டி இராசதானியின் வரலாற்றைக் கற்பதன் மூலம் தேசிய கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்க முன்வருதல்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விசாரணை செய்தல்.
- போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் அதிகாரத்தை நிலைநாட்டிய பின்னர் இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள்.
- இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரின் அதிகாரப் பரவலையும் அவை இலங்கையில் ஏற்படுத்திய விளைவுகளையும் பற்றி விசாரணை செய்தல்.
- 17 ஆம் , 18 ஆம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிகரமான சக்திகளைக் கற்பதன் ஊடாக அவை உலக வரலாற்றை மாற்றியமைப்பதிற் பங்களிப்புச் செய்த விதத்தை விசாரணை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 பாடத்திட்டம்

### 8.1 கண்டி இராசதானி

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | | **8.1 கண்டி இராசதானி** | |
| • இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளிலேற்பட்ட அரசியல் நிகழ்வுகளை விசாரணை செய்து அதிலிருந்து பெற்றுக் கொள்ளும் படிப்பினைகளை எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்காகப் பயன்படுத்துவார். | • கண்டி இராசதானியின் ஆரம்பம், பரம்பல் பற்றிய தகவல்களை விசாரணை செய்வார். | 8.1.1 ஆரம்பமும் பரம்பலும் | 02 |
| • இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளிலேற்பட்ட சமூகப் பொருளாதார கலாசாரப்போக்குகளை விளங்கிக் கொண்டு தேசிய அருஞ் செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார். | • கண்டி இராசதானியின் நிர்வாகக் கட்டமைப்பை விசாரணை செய்வார். | 8.1.2 நிர்வாகக் கட்டமைப்பு | 02 |
| | • கண்டி இராசதானியின் சமூக பொருாளதார, கலாசாரத் தகவல்கள் தொடர்பில் விசாரணை செய்து தேசிய அருஞ்செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார். | 8.1.3 பொருளாதார முறை | 02 |
| | | 8.1.4 சமூக ஒழுங்கமைப்பு | 02 |
| | | 8.1.5 சமயம், இலக்கியம், கலைகள், கல்வி | 04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.2 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| • உலக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பியச் சக்திகள் தொடர்பில் விசாரணை செய்வார். | | **8.2 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி** | |
| | • ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்த வரலாற்றுப் பின்னணியை விசாரணை செய்வார். | 8.2.1 மறுமலர்ச்சியின் பின்னணி<br>• ஆரம்ப காலந்தொட்டு நடைபெற்று வந்த கீழைத்தேச, மேலைத்தேச வர்த்தகத்திற்கு தடைகள் ஏற்பட்டமை.<br>• பல்கலைக்கழகங்களின் தோற்றம் | 02 |
| | • மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மறுமலர்ச்சிக் காலத்தில் கலை, அரசியல், பொருளாதார ஏற்பட்ட மறுமலர்ச்சியும் உலகில் அது வரை நிலவியவற்றை மாற்றியமைப்பதில் பங்களித்த விதத்தினை விசாரணை செய்வார். | 8.2.2 கலைத்துறை மறுமலர்ச்சி<br>• கலைத்துறை மறுமலர்ச்சி<br>• கலைகள் (ஓவியம், சிற்பம், செதுக்கல்) | 02 |
| | | 8.2.3 அரசியல் எழுச்சி | 02 |
| | | 8.2.4 பொருளாதார எழுச்சி | 02 |
| | • புதிய கடல்மார்க்க வர்த்தகப் பாதைகள் பற்றிய விபரங்களையும் அவற்றைக் கண்டறிந்தமையால் உலகில் தனித்துக் காணப்பட்ட நாடுகள் உலகிற்கு அறிமுகமான விதத்தையும் தேடியாராய்வார். | 8.2.5 புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் | 06 |
| | • நாடுகாண் பயணங்களைக் காண்பிக்கும் உலகப் புறவுருவப்படத்தில் பிரதான பாதைகள், நாடுகள், இடங்களைக் குறித்துப் பெயரிடும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார். | 8.2.6 புதிய கடல் மார்க்க வர்த்தகப் பாதைகளைக் கண்டறிதல் | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| • இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரணை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார். | | **8.3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை** | |
| | • ஐரோப்பியர் கீழைத்தேசத்துக்கு வருவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தேடியறிவார். | 8.3.1 ஐரோப்பியரின் கீழைத்தேச வருகை<br>• வருகைக்கான காரணங்கள்<br>• வருகை தந்த இனத்தவர். | 01 |
| | • ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்டவர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தைப் போர்த்துக்கேயரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விசாரணை செய்வார். | 8.3.2 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை<br>• போர்த்துக்கேயர் வரும்போது இலங்கையின் அரசியல் பின்னணி | 02 |
| | | 8.3.3 போர்த்துக்கேயர் கோட்டை இராசதானியிலே தமது அதிகாரத்தை நிலைநாட்டல்.<br>• சீதாவாக்கை இராசதானியுடனான உறவுகள்<br>• யாழ்ப்பாண இராசதானியுடனான உறவுகள் | 02 |
| | | 8.3.4 போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண அரசுக்குமிடையிலான தொடர்பு | 01 |
| | • போர்த்துக்கேயர் ஆட்சியிலே கரையோரத்தில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றித் தெளிவுபடுத்துவார். | 8.3.5 போர்த்துக்கேயரின் கீழ் இலங்கை கரையோரப் பிரதேசங்களில் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார நடவடிக்கைகள் | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.4 இலங்கையும் ஒல்லாந்தரும்

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| • இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலுடன் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரணை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார். | | **8.4 இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தர் தமது அதிகாரத்தை நிலை நாட்டல்.** | |
| | • ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்டவர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தை ஒல்லாந்தரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விளக்குவார். | 8.4.1 இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலே ஒல்லாந்தர் தமது அதிகாரத்தை நிலைநாட்டல். | 02 |
| | • ஒல்லாந்தர் ஆட்சியிலே இலங்கையின் கரையோரப் பகுதியில் நிலவிய பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்வார். | 8.4.2 ஒல்லாந்தருக்கும் கண்டி இராசதானிக்கும் இடையிலான தொடர்புகள் | 03 |
| | | 8.4.3 ஒல்லாந்தர் ஆட்சியில் இலங்கையின் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார நடவடிக்கைகள். | 05 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகள்

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| • மனித இனத்தின் வரலாற்றின் முன்னேற்றத்தில் முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகர சக்திகளை விசாரணை செய்வார். | | **8.5 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகள்.** | |
| | • மன்னனின் அதிகாரங்கள் குறைவடைந்து பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வளர்ச்சியடைவதற்கு இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த விதத்தை விளக்குவார். | 8.5.1 1688 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சி<br>- 1688 இற்கு முன் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள்<br>- 1688 புரட்சியின் பின்னணி<br>- 1688 புரட்சி உலகில் முன்மாதிரியானது | 04 |
| | • காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அமெரிக்க சுதந்திரப் போராட்டமும் அவர்களின் அரசியலமைப்பும் உலக வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதை விளக்குவார். | 8.5.2 அமெரிக்க சுதந்திர போராட்டம்<br>- குடியேற்றங்கள் உருவாதல்<br>- சுதந்திரப் போருக்கான பின்னணி<br>- சுதந்திரம் பெறலும் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றலும் | 03 |
| | • தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் மேற் கொண்ட புரட்சி மனித இனத்தின் வரலாற்றில் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களித்த விதத்தை விசாரணை செய்வார். | 8.5.3 பிரான்சியப் புரட்சி<br>- புரட்சியின் பின்னணி<br>- விளைவுகள் | 03 |
| | • கையால் செய்த வேலையை இயந்திரங்களால் செய்த கைத்தொழில் புரட்சியானது உலகின் வரலாற்றுப் பாதையில் ஏற்படுத்திய மாற்றத்தை விசாரணை செய்வார். | 8.5.4 கைத்தொழில் புரட்சி<br>- ஆரம்பமும் பரவலும்<br>- விளைவுகள் | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வரலாற்றுப் பாடத்தின் உள்ளடக்கக் கருத்துக்களை வெற்றிகரமாகவும், செயற்றிறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்குபற்றலை விருத்திசெய்யும் விதமாகப் பாடசாலை வேலைத்திட்டம் வழங்கப்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வேலைத்திட்டம் மாணவர்களின் வாழ்க்கைக்கும், அவர்களது சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

இங்கு அவ்வாறான ஆலோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கண்காட்சிகள், சஞ்சிகைகள், சுவர்ப் பத்திரிகைகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்தல் வேண்டும்.

- வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான முன்னேற்பாட்டுடன் காலத்திற்குக் காலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கு, கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல் முக்கியமானது.

- இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர்களை அழைத்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் பயனுள்ளதாகும்.

- தொல்பொருள்கள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய காலகட்டத்தில் பிரதேசத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவமுள்ள இடங்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாக்கவும் பாடசாலை மற்றும் மக்களது பங்குபற்றலுடனான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

- வரலாற்றுப் பாடத்திற்குரிய ஓவியங்கள், சிலைகள், ஏனைய பொருட்கள் என்பவற்றை அவதானித்து அறிக்கை தயாரிக்கக் கூடியவாறு அருங்காட்சியகத்தைப் பார்வையிடும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தல் உகந்தது.



3. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பகுதி

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு கற்பித்தலுக்கான முறையியல்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களிற் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role) பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்திற் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளைக் கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளிற் செய்ய வேண்டிய அபிவிருத்தி சார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக்கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக்கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதன்று.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுற்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார்செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) ஈடுபடுத்தும் படி (Engagement step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான, சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துலையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல், புதிர்கள், விடய ஆய்வுகள் கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment). செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல் தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது. ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு கற்பித்தலுக்கான உத்திகள்

வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் தகவல்களை வழங்குவதை விட தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்கள் ஊக்கம் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால் கற்பித்தல் பணி மிகவும் பயனுள்ளதாகும். எனவே இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலந்துரையாடுதல் மூலங்களைப் பயன்படுத்துதல், அவதானித்தல் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துதல் விரும்பத்தக்கதாகும். வரலாற்றைக் கருத்துள்ள வகையில் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய அருங்காட்சியகம், பிரதேச அருங்காட்சியகம் போன்றவற்றின் மூலம் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ் அருங்காட்சிப் பொருள்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

- மாணவர்கள் பிரதேச வரலாற்றை அறிந்து கொள்ள ஆர்வம் ஊட்டுவதினூடாகத் தேசிய வரலாற்றை அறிய வழிப்படுத்தல்.

- ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறச் சந்தர்ப்பம் வழங்குதல். (வானொலி, தொலைக்காட்சி கல்விச்சேவை.)

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஆர்வமூட்டுதல்.

- ஆதாரமான மூலங்களைப் பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டுதல்.

- மாணவர் தமது ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களை வழங்கும் விதத்தில் செய்திப்பத்திரிகைகள். சஞ்சிகைகள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல், பாடசாலை அருங்காட்சியகத்தை உருவாக்குதல். போன்ற செயற்பாடுகளில் ஈடுபட ஊக்கம் அளித்தல்.

- வரலாற்று ஆசிரியராகிய உங்களால் தற்காலப் பிரச்சினைகளை நடுநிலையாகவும் யதார்த்தமாகவும் நோக்குகின்ற திறனுள்ள குடிமக்களை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும். இதற்கான உங்களது பொறுப்பு மிகப் பெரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.1 கண்டி இராச்சியம்

## அறிமுகம் 12 பாடவேளைகள்

செங்கடகல நகரத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சியத்தின் பாதுகாப்பானது இயற்கையரண்களைக் கொண்டதாகும். தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்களால் பெறும் மழை, மலைத் தொடர்களிலிருந்து பாய்கின்ற ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் என்பவற்றை உள்ளடக்கிய இயற்கையழகு செறிந்ததும் குளிர்காலநிலையைக் கொண்டதுமான கண்டி நகரம் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் மதிப்பையும் விருப்பையும் கொண்டதாகும். மூன்று நூற்றாண்டுகளாகப் பெருமையான வரலாற்றுக்கு உரியதெனக் கூறப்படும் கண்டி இராச்சியம் சுதந்திர ஆட்சி அலகாக இருந்ததுடன் அரசர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழும் விளங்கியது.

சேன சம்பத விக்கிரமபாகு மன்னனிலிருந்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் வரை கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்கள் பற்றியும் நாயக்கர் வம்ச ஆட்சியாளர்கள் பற்றியும், சிங்கள அரசுரிமை பற்றிய பாரம்பரியம் மாறுபாடடைந்த விதம் பற்றியும், கூறும் வரலாற்று விடயங்கள் இந்த அலகில் முன்வைக்கப்படுகின்றன.

அரசன் நாட்டின் தலைவனாக இருந்ததுடன் பிக்குமார்கள், பிரதானிகளின் ஆலோசனைகளுக்கேற்ப ஆட்சி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தான். அரசன் பெற்றிருந்த ஆட்சி அதிகாரம் போன்றே பிரதானிகள், சாதாரண மக்கள் என்போருக்கிடையே இருந்த ஒற்றுமை இராச்சியத்தின் பரம்பலுக்கான முக்கிய காரணமாகும். மக்களிடையே ஒற்றுமை வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்திலேயே வெளிநாட்டு, உள்நாட்டு ஆக்கிரமிப்பினால் கண்டி இராச்சியம் தோல்வியடைந்தது. திறமை மிக்க ஆட்சியாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பின்பற்றிய தந்திரோபாய நடவடிக்கைகளினால் கண்டி இராச்சியத்தின் அதிகாரத்தை விரிவுபடுத்தினர். நூற்றாண்டு காலமாகத் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்த கண்டி இராச்சியம் ஒற்றுமையின்மையினாலேயே வெளிநாட்டு ஆட்சியாளருக்கு அடிபணிய நேரிட்டது.

கண்டி இராச்சியத்தில் நிலவிய தன்னிறைவுப் பொருளாதாரம், சமயம், இலக்கியம், கலை, கல்வி என்பன பற்றிக் கற்றல் மூலம் கண்டி இராச்சியத்தின் மூலம் எமக்குக் கிடைத்த தேசிய பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசியல் நிகழ்வுகளைப் பரிசீலனை செய்வதன் மூலம் அவற்றை முன்மாதிரிகளாய்க் கொண்டு சுதந்திரமான வலுவுடைய இலங்கைப் பிரசையை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி :-**

- இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளிலேற்பட்ட அரசியல் நிகழ்வுகளை விசாரணை செய்து அதிலிருந்து பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் எதிர் காலத்தை வெற்றி கொள்வதற்காகப் பயன்படுத்துவார்.

- இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளிலேற்பட்ட சமூகப் பொருளாதார கலாசாரப்போக்குகளை விளங்கிக் கொண்டு தேசிய அருஞ்செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :-**

- கண்டி இராசதானியின் ஆரம்பம், பரம்பல் பற்றிய தகவல்களை விசாரணை செய்வார்.
- கண்டி இராசதானியின் நிர்வாகக் கட்டமைப்பை விசாரணை செய்வார்.
- கண்டி இராசதானியின் சமூகப் பொருளாதார, கலாசாரத் தகவல்கள் தொடர்பில் விசாரணை செய்து தேசிய அருஞ்செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார்.

**உள்ளடக்கம் :-**

## 8.1.1 ஆரம்பமும் பரம்பலும்

- கி.பி. 1463 இல் சேன சம்பத விக்கிரமபாகு ஆட்சியாளனாக நியமிக்கப்பட்ட போது கண்டி (செங்கடகல) தலைநகரமாகத் தெரிவு செய்யப்படுதல்.
- கண்டி இராச்சியத்தின் ஆரம்பத்திற்கான சிறப்பான காரணம் அதன் இயற்கையான மலைநாட்டு அமைவிடமாகும்.
- சுதந்திர இராச்சியமாக வளர்ச்சியடைந்த கண்டி இராச்சியம் எட்டாம் வீரபராக்கிரமபாகு மன்னின் ஆட்சியில் மீண்டும் கோட்டை இராச்சியத்தின் கீழ் பிராந்திய ஆட்சியாளரின் அதிகாரத்துக்கு உட்படுதல்.
- கி.பி. 1514 இல் இரண்டாம் ஜயவீர கண்டி - பிராந்திய ஆட்சியாளர் பதவிக்கு நியமிக்கப்படல்.
- கி.பி. 1521 இல் கோட்டை அரசர்களின் குடும்பத்தில் ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக கோட்டை இராச்சியம் நலிவுற்றதால் கண்டி இராச்சிய அதிகாரம் வலுவடைதல்.
- கரலியத்த பண்டார கண்டியின் அரசனாதல்.
- சீதாவாக்கை அரசனான இராஜசிங்கன் கண்டியை ஆக்கிரமித்தல்.
- கரலியத்த அரசனின் மகளும் மகனான யமசிங்க பண்டாரவும் போர்த்துக்கேயரை நாடிச் செல்லுதல்.
- சீதவாக்கை இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியம் தொடர்பாகப் பின்பற்றிய குரூரக் கொள்கை.
- கோனப்பு பண்டார போர்த்துக்கேயரிடம் பாதுகாப்பினைப் பெறுதல்.
- யமசிங்க பண்டார, கோனப்பு பண்டார என்பவர்களின் தலைமையில் போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை (கனேதன்ன போர்)
- யமசிங்க பண்டார (தொன்பிலிப்) கண்டி அரசனாதல்
- பௌத்த சமயத்தைத் தழுவிய கோனப்பு பண்டார யமசிங்க பண்டாரவின் அதிகாரத்தை நீக்கி கி.பி. 1592 இல் முதலாம் விமலதர்ம சூரியன் என்ற பெயரில் அரசனாதல்.
- **முதலாம் விமலதர்ம சூரிய மன்னன்** நாட்டின் செங்கடகல இராச்சியத்தின் முதலாவது மன்னனாதல்.
- பெரோலோஜென் த சூசா தலைமையில் கண்டி இராச்சியத்தின் மீது போர் தொடுத்த போர்த்துக்கேயரைத் தோற்கடித்தனர். (1594 தந்துரைபோர்)



4. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தோனா கதரினாவை (குசுமாசன தேவி) சட்ட ரீதியாகத் திருமணம் செய்து கண்டியின் அரசுரிமையை பெறுதல்.
- தாழ் நிலப்பிரதேசங்களின் உதவியைப் பெறுவதற்கு பௌத்த சமயத்தையும் தேசியத்தையும் பயன்படுத்துதல்.
- கி.பி. 1602 இல் அஸிவிடோ தலைமையில் இடம் பெற்ற போரில் போர்த்துக்கேயர் தோல்வியடைதல்.
- கி.பி. 1604 இல் முதலாம் விமலதர்ம சூரியன் மரணமடைதல்.
- **செனரத் மன்னன்**

  செனரத் மன்னனின் ஆட்சிக்காலத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு துறைமுகங்களையும் தவிர ஏனைய அனைத்துப் பிரதேசங்களும் கண்டி இராச்சியத்திற்கு உட்படுதல்.
- செனரத் அரசனின் இறுதிக் காலத்தில் விஜயபால, குமாரசிங்க, இராஜசிங்க (மகா அஷ்டான) என்று மூன்று மகன்மாருக்கும் இராச்சியத்தை ஒப்படைத்தல்.
- செங்கடகல மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களை மகா அஷ்டான (ராஜசிங்க) இளவரசனிடம் ஒப்படைத்தல்.
- செனரத் மன்னின் பின்னர் மகா அஷ்டான இளவரசன் இரண்டாம் இராசசிங்கன் என்ற பெயரில் அரசனாதல்.
- **இரண்டாம் இராசிங்கன்**
  - * இரண்டாம் இராசிங்க மன்னின் காலத்தில் கண்டி இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட போர் தோல்வியடைதல் (கன்னொருவ போர்)
  - * போர்த்துக்கேயரைத் துரத்துவதற்காக ஒல்லாந்தரின் உதவியைப் பெறுதல்.
  - * கி.பி. 1658 ஆண்டளவில் ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை முழுமையாக இந்நாட்டிலிருந்து விரட்டியடித்தல்.
  - * கண்டி இராச்சியத்தின் தன்னாதிக்கத்தைப் பாதுகாத்தல். கைப்பாற்றியிருந்த கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுத்தல் என்ற விடயங்களினால் இராசசிங்க மன்னன் முக்கியத்துவம் பெறுதல்.
  - * இராச சிங்க மன்னின் மகனான இரண்டாம் விமலதர்ம சூரியன் மன்னனாதல்
- **இரண்டாம் விமலதர்ம சூரியன்**
  - * அமைதியான ஆட்சியாளனாக விளங்குதல்
  - * அக்காலத்தில் பிரதானிகள் முன்னரை விடஅதிகளவு ஆதிக்கம் பெறுதல்
- **நரேந்திரசிங்க மன்னனின் மனைவியின் சகோதரனான ஸ்ரீ விஜய ராஜசிங்கன் அரசனாதல்**
  - * நாயக்கர் வம்சத்தவனான இவன் அரச வம்சத்துக்கு உரியவனாதல் மூலம் அரசுரிமை பற்றிய ஒரு புதிய சம்பிரதாயம் உருவாதல்.
  - * ஒல்லாந்தர் தொடர்பாகக் கடுமையான போக்கைப் பின்பற்றுதல்.
  - * அரசனுக்கும் ஒல்லாந்தரின் வர்த்தக எதிர்பார்ப்புகளுக்கும் இடையே முரண்பாடு உருவாதல்
- **கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் அதிகாரம் பெறுதல்**
  - * நாயக்க வம்ச அரசர்களுக்கிடையே முதன்மை பெற்ற அரசனாதல். இவனது ஆட்சிக் காலத்தில் முதல் முறையாக ஒல்லாந்தர் கண்டி மீது படையெடுத்தனர். (வான் எக் இன் படையெடுப்பு)
  - * அரண்மனைக்குள்ளான சூழ்ச்சியிலிருந்து தப்பிக் கொள்வதற்காக 1766 இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்ய முற்படுதல்.
  - * கண்டி இராச்சியத்துக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு நலிவுறல்.
  - * ஒல்லாந்தரைத் துரத்துவதற்காக ஆங்கிலேயரின் உதவியைப் பெறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இராசாதி இராஜ சிங்க மன்னன்**
  * பிரதானிகள் ஆதிக்கம் பெறுதல்
  * கரையோரப் பிரதேசங்களில் ஆங்கிலேயர் உரிமை பெறுதல்.
  * கண்டி இராச்சியத்தின் சுதந்திரம் மேலும் பாதுகாப்படைதல்.
- **ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்க மன்னன் (கண்ணுச்சாமி) (கி.பி. 1798-1815)**
  * அரச சபையில் பிரதானிகள் ஆதிக்கம்
  * பிக்குமார், பிரதானிகள் சாதாரண மக்கள் ஆகியோரின் நம்பிக்கையை அரசன் இழத்தல்.
  * ஸ்ரீ விக்கிரம ராசசிங்க மன்னன் ஆங்கிலேயருக்கு அடிமையாதல்.
  * இலங்கை முழுவதும் பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.1.2 கண்டி இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பு

***அரசன்***

நாட்டின் நிலம் முழுவதும் அரசனுக்கே உரித்துடையதாகும். கண்டி இராச்சியத்தின் ஈடு இணையற்ற ஆட்சியாளனாகவும் அரசன் விளங்கினான். சட்டங்களை இயற்றுதல், நிறைவேற்றுதல், நீதித்துறை பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் அதிகாரங்களும் அரசனுக்கே உரித்தானவையாகும். மந்திரி சபை மற்றும் மகா நாயக்க தேரர்களின் ஆலோசனைப்படி நாட்டின் ஆட்சியை அரசன் நடாத்தினான்.

***மகா அதிகாரம்***

- ❖ அரசனுக்கு மட்டுமே பதில் கூற வேண்டியவர்கள் அரசனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தவர்கள் 'அதிகாரம்' என அழைக்கப்பட்டனர்.
- ❖ அரச சபையில் அமைச்சராகவும், நீதிபதிகளாகவும் போர்க்காலங்களில் பிரதான கட்டளை இடும் அதிகாரிகளாகவும் செயற்பட்டனர்.
- ❖ ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் காலத்தில் மூவர் மகா அதிகாரப் பதவியை வகித்தனர்.

**கண்டி இராச்சிய நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நான்கு முக்கிய துறைகள் இருந்தன.**

**ரட்டவசம**

நிர்வாக நடவடிக்கை களுக்காக அரசுக்குரிய பிரதேசங்கள் 21 ஆகப் பிரிக்கப்பட்டிருந்தன

***திசா 12***

தலைநகரத்திலிந்து தொலை தூரப் பிரதேசங்கள் நிர்வாக அதிகாரி திசாவை.

***திசாவைகள்***

கோறளைகளாக நிர்வாக கோறளை அதிகாரி

***பற்று***

நிர்வாக அத்து கோறளை கிராமங்கள் பல சேர்ந்ததது

***கிராமம்***

மிகச் சிறிய நிர்வாகப் பிரிவு நிர்வாக கமரால அதிகாரி

***சட்ட பிரிவு 9***

- தலைநகருக்கு அண்மையில் உள்ள பிரதேசங்கள்
- முதல்வர் -ரட்ட மகாத்மயா

***வரித்துறை***

வரி சேகரித்தல் இந்த அதிகாரிகளின் பணியாகும்.
பத்த வரி வகைகள் மகா பத்த வரி முதலியன

***மகாவாசல***

- ❖ அரச மற்றும் அரண்மனை நடவடிக்கைகள்
- ❖ பாதுகாப்பு நடவடிக்கைகள்
- ❖ நிதித்துறை நடவடிக்கைகள்
- ❖ போர் நடவடிக்கைகள்
- ❖ பொது நடவடிக்கைகள்
- ❖ அரசக் களஞ்சியம்
- ❖ அரச மாளிகையின் தேவைகள்
- ❖ அரசனின் தனிப்பட்ட தேவைகள் உ-ம்: களஞ்சியத்துறை (கபடா நிலமே)

***விகாரைகள் சொத்து***

- ❖ விகாரைகளின் சொத்து பற்றிய நடவடிக்கைகள்
- ❖ தியவதன நிலமே
- ❖ தேவாலயங்களில் பஸ்நாயக்க நிலமே
- ❖ விகார தேவாலயம் நடத்துதல்
- ❖ புத்தருக்கான பூசைகள் நடத்துதல்
- ❖ ஆண்டுதோறும் பெரஹர நடத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறை

நீதித்துறை அதிகாரம் பெருமளவில் அரசனை மையமாகக் கொண்டு காணப்பட்டது.


- அரசனால் தீர்ப்பளிக்கப்படும் வழக்குகள்
  - * பிக்குமார் தொடர்பானவை
  - * முக்கிய தலைவர்கள் தொடர்பானவை
  - * இராச துரோகம் தொடர்பானவை
  - * அரச விரோத கிளர்ச்சி, கலவரம், சதி முயற்சி தொடர்பானவை

## உயர் நீதிமன்றம் (மகநடுவ)

- நீதிபதிகள்
  அரசனால் பெயர் குறிப்பிட்டப்படும் மகா அதிகாரம், திசாவைமார், ரட்டகாவே ஆகியோர்
- திசாவை, ரட்ட, கோறளை, பற்று மற்றும் கிராமங்களில் வழக்குகள் அவற்றுக்கு பொறுப்பான அதிகாரிகளினால் தீர்க்கப்படும்.

## தண்டனை முறை

- கசையடி வழங்குதல்
  அல்லது
  பூம்பாளையால் அடித்தல்
- கூரிய ஆயுதத்தால் குத்துதல்
- நீரில் முழ்கடித்துக் கொல்லுதல்
- யானையால் மிதிக்கச் செய்தல்
- பலகையில் வைத்து ஆணியறைதல்.



யானையால் மிதிக்கச் செய்தல்




பலகையில் வைத்து ஆணியறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.1.3 பொருளாதாரப் போக்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.1.4 சமூக ஒழுங்கமைப்பு

### கபடாகம்

அரச மாளிகையின் உபயோகத்துக்கென ஒதுக்கப்பட்ட நில மாகும். பயிர்ச் செய்கையில் குறிப்பிட்ட பகுதியை அரச மாளிகைக்கு வழங்க வேண்டும். உ-ம்: குருதெனிய வயல்

### நிந்தகம்

- ❖ உயர் பதவிகள் வகித்த அதிகாரம், திசாவை வகித்த அதிகாரம், திசாவை போன்ற அதிகாரிகளுக்கு அரசனால் வெகுமதியாக ஆவணங்கள் மூலம் வழங்கப்பட்ட காரணியாகும்.
- ❖ அரசனின் தீர்மானத்தின்படி பரம்பரை உரிமை வழங்கப்பட்ட நிந்தகங்கள்
- ❖ நிந்தகங்களில் வாழ்ந்தோர் விளைச்சலின் பெற்ற வருமானம் ஒரு பகுதியை உரிய அதிகாரிகளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

### விகாரைகள், தேவாலயங்கள்

விகாரைகள், தேவாலயங்கள் என்பன வழங்கப்பட்ட காணிகள் ஆகும்.

- ❖ இவற்றை விற்றல், பிறருக்குக் கையளித்தல் என்பவை தடை செய்யப் பட்டிருந்தன.
- ❖ இக்காணிகளில் பயிர் செய்து பெறும் வருமானத்தில் குறிப்பிடப்பட்ட பகுதியை விகாரைகளுக்கு மற்றும் தேவாலயங்களுக்கு வழங்கல் வேண்டும்.

### சாதாரண மக்களின் காணிகள்

சாதாரண மக்கள் பரம்பரை பரம்பரையாக உரிமை பெறும் நிலமாகும்.

- ❖ இந்த இடத்தை அனுபவிப்பதற்காக யாதேனும் சேவையை அல்லது உற்பத்தியில் ஒரு பகுதியை அரசுக்கு வழங்குதல் வேண்டும்.

எல்லா நிலங்களினதும் உரிமை அரசனுக்கேயாகும். செய்யும் சேவைக்கான கூலியாக நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.



அரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கும் தன்னிறைவான கிராம சமூகம் காணப்பட்டது.
- கிராமமானது பலவீடுகள் கொண்டதாக விளங்கியது.

| கிராம வீடுகள் | பிரபுக்களின் வீடுகள் |
|---|---|
| * வரிச்சிகட்டி, களி மண் பூசப்பட்ட சுவர்.<br>* வைக்கோல், தென்னையோலை என்பவற்றாலான கூரை.<br>* விருந்தினர் அமருவதற்கான திண்ணைகள் | * வெள்ளைச் சுண்ணாம்பு பூசப்பட்ட சுவர்.<br>* ஓட்டினாலான கூரை.<br>* கதவு, யன்னல்கள் கொண்ட அழகிய வீடுகள் |

- பதவிகள் சீவனோபாயம் என்பன குல (சாதி) முறையில் தீர்மானிக்கப்பட்டது. பரம்பரையாகத் தொழில் முறை நீண்ட காலமாக நிலவியதால் சிறப்பு ஆற்றல் கொண்ட சமூக அமைப்புகள் தோற்றம் பெற்றன.

  * குயவர் குலம் - கிராமத்துக்குத் தேவையான மட்பாண்டங்கள் உற்பத்தி
  * கொல்லர் - விவசாய உபகரணங்கள்
  * நெசவாளர் - துணிகள் நெசவு
- திருமணங்கள் ஒரு குலத்துக்கு உரியவர்கள் இடையே இடம்பெற்றது.

## திருமண முறைகள்

  * தீக திருமணம் - மணமகளை மணமகன் வீட்டுக்குக் கூட்டிச் செல்லுதல்.
  * பின்ன திருமணம் - மணமகன் மணமகள் வீட்டில் தங்குதல்
  * பல்புருஷ திருமணம்- சகோதரர்கள் பலருக்கு ஒரு மனைவி மட்டும்
- குடும்பம் சமூகத்தின் முக்கிய அலகாகும்.
- தந்தை வழி சமூக முறைமையின் அடிப்படையாக விளங்கியது.

## பன்சல

கண்டி இராச்சிய சமூக முறையிலே சமய நிலையங்களாகவும் கல்வி நிலையங்களாகவும் சமூக சேவை நிலையங்களாகவும் பன்சல விளங்கியமை.

- பிக்குமாரால் நிறைவேற்றப்பட்டவை.
  - அரச நிர்வாகம் தொடர்பாக மன்னனுக்கு ஆலோசனை வழங்குதல்.
  - மங்கல நிகழ்வுகள் அமங்கல நிகழ்வுகள் என்பவற்றில் சமயக் கிரியைகளை நிறைவேற்றுதல்.
  - வைத்தியம்
  - கல்வி
  - சுபநேரங்களைக் கணித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.1.5 சமயம், இலக்கியம், நுண்கலைகள், கல்வி.

- இயற்கையரண் கொண்ட சூழலில் அமைந்திருந்ததால் சுதந்திர இராச்சியமாக விளங்கிய கண்டி இராச்சியம் சிறப்பான கலாசார அம்சங்களைக் கொண்டதாக விளங்குதல்.
- சுதேச கலாசார வளர்ச்சிக்காக கண்டிக் காலத்தில் அரசர்களின் ஆதரவு பெருமளவு கிடைத்தல்.

### சமயம்

#### பௌத்தம்

- மக்களிற் பெரும்பாலானோர் பௌத்த சமயத்தவராக விளங்குதல்.
- பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக
  * அரச அனுசரணை பெறுதல்
  * கிராமங்களைத் தானமாக வழங்குதல்
  * புதிய விகாரைகள் அமைத்தல்
  * பழைய விகாரைகளைப் புனரமைத்தல்.
  * உபசம்பதா சடங்குகள் நிகழ்த்துதல்.
    உ-ம்: முதலாம் விமலதர்மசூரியன், இரண்டாம் இராசசிங்கன் ஆகிய மன்னர்கள்
  * முதலாம் விமலதர்மசூரியன் தலதா மாளிகையை நிர்மாணித்ததுடன் புனிததந்ததாதுவை அங்கு வைப்பித்தான்.
  * வெலிவிற்ற சரணங்கர தேரர் தலைமையில் பிக்குமார்களின் முன்னேற்றம்

#### இந்து சமயம்

- நாயக்க வம்ச அரசர்கள் இந்துக்கள் என்பதால் இந்து சமயம் பரவுதல்
- கண்டியில் நான்கு தேவாலயங்கள் நிர்மாணிக்கப்படுதல்.
- தலதா பெரஹராவுடன் தேவாலயங்களின் பெரஹராவும் இணைக்கப்படுதல்.
- பன்சலைகளில் இந்து விக்கிரகங்கள் நிர்மாணிக்கப்படுதல்.

#### இஸ்லாம் சமயம்

- ஊவா - வெல்லசப் பிரதேசங்களில் முஸ்லிம் கிராமங்கள் உருவாகுதல்.
- வர்த்தகத்துடன் தொடர்புடைய முஸ்லிம்களினால் மலைநாட்டில் இஸ்லாம் சமயம் பரவுதல்.

#### உரோமன் கத்தோலிக்க சமயம்

- கரையோரத்தில் வசித்த கத்தோலிக்கர் சிலர் கண்டிக்கு வந்து அரசர்களின் பாதுகாப்புடன் குடியிருத்தல்.

### இலக்கியம்

இக்காலத்தில் இலக்கியம் தொடர்பான நடவடிக்கைகளில் அரசனைப் புகழும் காவியங்கள் முக்கியத்துவம் பெறுதல்.

- பௌத்த இலக்கியங்கள், தமிழ் மொழி நாட்டார் கதை இலக்கியங்களை முன்மாதிரியாகக் கொண்டு கவிதை வடிவில் கதை கூறுவதில் ஆர்வங் காட்டல்
  உ-ம்: வெஸ்ஸந்தர ஜாதகக் கதைகள், வேதாளக் கதைகள்



5. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்டி இராச்சியக் காலத்திலே கணதேவிஹால்ல பாத்தனிஹால்ல போன்ற நூல்கள் உருவாகுதல்.

## கலைநுட்பங்கள்

- கண்டிக் காலத்தில் கலைநுட்பங்கள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தமையைக் காணலாம். இவற்றுக்கு அரச ஆதரவும் கிடைத்தது.
- பல்வேறு துறைகளிலும் பல்வேறு ஊடகங்களினூடாகவும் வளர்சசியடைதல்.

## செதுக்கல் கலை

- யானைத்தந்தத்தில் செதுக்கல் - யானைப்பல் செதுக்கல்கள் பதிக்கப்பட்ட கதவு நிலைகள்.

  உ-ம்: ரிதி விகாரையின் கதவு நிலைகள்
  யானைத்தந்தம், செதுக்கல் கொண்ட சீப்புகள் வளையல்கள்
  நகைப்பெட்டிகள் முதலியன.


## ஆபரணங்களில் செதுக்கல்

தங்கம், வெள்ளி என்பவற்றால் செய்யப்பட்ட காதணிகள், சங்கிலிகள், வளையல்கள் கொண்டை ஊசி என்பவனவற்றின் செதுக்கல்கள்.

- பித்தளைச் செதுக்கல்கள்
  விளக்கு, சாடி, தட்டுகள், கெண்டி
- மரச் செதுக்கல்
  அன்னாசிப்பூ போன்ற செதுக்கல்களைப் பயன்படுத்த தூண்கள், வளைகள்
- கல் செதுக்கல் - தலதா மாளிகை பிரதான வாயிலுக்கு அருகே சந்திர வட்டக்கல், வாயில் காவற்சிலை
- அரக்கு செதுக்கல் - ஊன்று கோல், நகைப் பெட்டி
- களி மண் செதுக்கல் - கூசா, பூச்சாடி



பித்தளைச் செதுக்கு வேலை



கண்டி தலதா மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரக்கலை

**கண்டி**க்காலத்தின் சித்திரக்கலையைத் தெளிவாக இனங்காணலாம்.

- கட்டங்களாகப் பிரித்துச் சித்திரங்களை வரைதல்
- தாவரங்கள், பாறைகள், மணல் என்பவற்றைப் பயன்படுத்தி வர்ணங்களைத் தயாரித்தல். (சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு ஆகிய வர்ணங்கள்)
- புத்தர் பெருமானின் வாழ்க்கையை ஓவியங்களாக வரைதல்.

  உ-ம்: வெஸ்ஸந்தர ஜாதகக் கதை
- பல்வேறு உருவங்கள், ஆடை அணிகள், இயற்கைக்காட்சிகள் என்பனவற்றை முன்னைய காலப்பகுதியை விட வேறுபட்ட விதத்தில் கண்டிக்கால சித்திரக் கலைஞர் கையாண்டமை.
- அன்னச் சோடி, அன்னாசிப்பூ, மல்யுத்த வீரர் போன்றன செதுக்கல்களிலும் சித்திரக் கலையிலும் காணப்பட்டமை.
- கண்டிக் காலச் சித்திரங்கள் தம்புள்ள, மெதவெல, தெகல் தோறுவ, பம்பரகல, ரிதி விகாரை போன்ற இடங்களிற் காணப்படுகின்றமை.

## கல்வி

- 'பன்சல' முக்கிய கல்வி நிலையங்களாக விளங்குதல்.
- வெலிவிற்ற சரணங்கர தேரரின் கல்விச் சேவை
  அஸ்கிரிய, அம்பிட்டிய, நிந்தவெல, கங்காராமய ஆகிய விகாரைகளுடன் இணைந்த கல்வி நிலையங்களை ஆரம்பித்தல்.
- முதலாம் விமலதர்மசூரியன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆகிய மன்னர்கள் கண்டியுகத்தில் கல்விக்காக ஆதரவு வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :** கண்டி இராசதானியின் நிர்வாகக் கட்டமைப்பை விசாரணை செய்வார்.

**செயற்பாடு 8.1.1 :** கண்டிக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஒழுங்கமைத்துக் காட்டுவோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.1.1.1 படங்கள்
- இணைப்பு 8.1.1.2 செயற்பாட்டுப்பத்திரம்
- பாடநூல்
- மூலாதார நூல்கள்,
  இலங்கை வரலாறு 3 ஆம் பாகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- பிரிஸ்டல் போட்/ டிமை தாள்
- பசை
- பெல்ட் பேனை

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.1.1 :**

- இணைப்பு 8.1.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- அங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பின்வரும் விடயங்களும் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

> - படத்தில் அரச சபை காட்டப்பட்டுள்ளமை.
> - அரச சபையில் முதன்மை பெறுபவர் அரசன்.
> - அரசனுக்கு உதவியாக அதிகாரிகள் இருத்தல்.
> - 'அதிகாரம்' என்னும் பதவியிலுள்ள அதிகாரிகள் பணியாற்றியமை.
> - எல்லா அதிகாரிகளும் பணியாளர்களும் மிகுந்த அர்ப் பணிப்புடன் பணியாற்றியமை.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.1.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்குக.
- ஒப்படைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- தேவையான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பவற்றை வழங்குக.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 8.1.1.3 :**

- தயாரிக்கப்பட்ட பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை முன்வைப்பதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குக.
- முன்வைக்கப்பட்ட தகவல்களின் நிறைவுகளையும் குறைபாடு களையும் எடுத்துக் காட்டுவதற்குக் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் கருத்துக்களை வெளிப்படுத்த இடமளிக்குக. பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கண்டி இராச்சியத்தில் அரசன் எல்லையில்லா அதிகாரத்தை கொண்டிருந்தான்.
> - நிர்வாகத்தில் அரசனுக்கு அடுத்தபடியில் மகா அதிகாரம் எனப்படுவோர் அதிகாரம் பெற்றிருந்தமை.
> - அரசுக்கு உரித்தான பிரதேசங்கள் நிர்வாகத்தை இலகுவாக்குவதற்காக 12 திசாவைகளாகவும் 9 ரட்ட ஆகவும் பிரிக்கப்பட்டிருந்தமை.
> - திசா, கோரளை, பற்று, கிராமம் என்றவாறு நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்டிருந்தன. கிராமமே மிகச் சிறிய நிர்வாக அலகாகும்.
> - அரசுக்காக வரி அறவிடுவதற்காக 'பத்தே நிலமே' என்ற பெயரில் அதிகாரிகள் இருந்தமை.
> - அரச மாளிகையின் நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு பதவிகளை வகித்தோர் காணப்பட்டமை.
> - ஆட்சி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கிய அரச அதிகாரிகளும் இருந்தமை.
> - தியவதன நிலமே, பஸ்நாயக நிலமே எனப்படுவோர் விகாரைகள் தேவாலயங்களின் நிர்வாகத்தை நடத்தியமை.
> - நீதித்துறை நடவடிக்கைகள், தண்டனைகள் வழங்குதல் என்பன சட்டப்படி நிகழ்ந்தமை.
> - மேற்படி சிறந்த நிர்வாக கட்டமைப்பு காணப்பட்டமை.
> - நாட்டின் சிறந்த ஆட்சிக்கு சிறந்த நிர்வாகம் அவசியம்.
> - ஆட்சியாளரின் ஆற்றல்களும் பலவீனங்களுமே ஆட்சியின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும்.

(40 நிமிடம்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கண்டி இராச்சியத்தின் நிருவாக ஒழுங்கமைப்பின் சிறப்பம்சங்களை விவரிப்பார்.
- அரசனிடமிருந்த நிர்வாகத்திறன் நிர்வாக ஒழுங்கமைப்பின் வெற்றிக்கு அல்லது தோல்விக்குக் காரணமாக இருந்ததை எடுத்துக்காட்டுவார்.
- கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பை முறையான ஆக்கமொன்றின் மூலம் எடுத்துக்காட்டுவார்.
- கருமங்களை பகிர்ந்தளித்தல் பல விடயங்களை வெற்றிகரமாகச் செய்ய வழிவகுக்கும் என்பதை ஏற்பார். தலைமைத்துவத்துக்கு மதிப்பளிக்கும் பழக்கத்தைப் பெறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.1.1.1



அரச சபை

## இணைப்பு 8.1.1.2

### *செயற்பாட்டுப்பத்திரம்*

கண்டி இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கமைப்புப் பற்றிப் பின்வரும் விடயங்களின் கீழ் முறையான ஆக்கமொன்றைத் தயாரிப்பது உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியாகும்.

- நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குபவருக்கு உரித்தான கடமைகள்.
- அரசனுக்கு உதவி புரியும் அதிகாரிகளும் அவர்களுக்கு உரித்தான கடமைகளும்
  - மகா அதிகாரம்
  - திசாவை
  - றட்டேறால
  - கோறளை
  - அத்துக்கோறளை
  - கமரால
- பத்தே என்பவருக்கு உரிய பணிகள்
- அரச மாளிகை சேவையாளரின் பணிகள்
  - அரசனுக்கு நிர்வாகத்தில் உதவும் அதிகாரிகளின் பணிகள்
    உ-ம்: திறைசேரி நடவடிக்கைகள், பாதுகாப்புப் பணிகள் போன்றன.
  - அரச மாளிகையில் பணி புரியும் அதிகாரிகள்
    பத்வடன நிலமே
- விகாரைகளின் சொத்துக்கள் - தியவடன நிலமே
- நீதித்துறை நடவடிக்கைகளும் தண்டனை முறைகளும்
- உங்கள் ஆக்கத்தை வகுப்பறையில் முன்வைக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம்** : கண்டி இராசதானியின் சமூகப் பொருளாதார, கலாசாரத் தகவல்கள் தொடர்பில் விசாரணை செய்து தேசிய அருஞ்செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார்.

**செயற்பாடு 8.1.2** : கண்டி இராச்சியத்தின் சமூக, பொருளாதார, கலாசார தகவல்களைத் தேடி அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 200 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.1.2.1 படங்கள்
- இணைப்பு 8.1.2.2 செயற்பாட்டுப்பத்திரம்
- பாடநூல்
- மூலாதார நூல்கள்,
- ஏ4 கடதாசி
- பொருத்தமான படங்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.2.1** :

- இணைப்பு 8.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- அங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பின்வரும் விடயங்களும் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடவும்.

> - தலதா பெரஹரா கண்டிக் காலத்திலிருந்து ஆரம்பிக்கபட்டு இன்று வரை இடம்பெறுகின்றதும் எமக்குக் கிடைத்ததுமான கலாசாரச் சொத்தாகும்.
> - மலையகப் பிரதேசங்களிற் படிக்கட்டு முறையில் நெற் பயிர்ச்செய்கை இடம் பெறுதல்.
> - கண்டிக் காலத்தில் பொது மக்களின் மகிழ்ச்சிக்காக பௌத்த கதைகள் ஓவியங்களாக வரையப்படுதல்.
> - செதுக்கல் கலை பல்வேறு ஊடகங்கள் மூலம் மிகவும் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படல்.

(15 நிமிடங்கள்)

**படி 8.1.2.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 8.1.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்குக.
- ஒப்படைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- படங்களை இணைத்து புதிய ஆக்கமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்குக.

(65 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 8.1.2.3 :**

- தகவல்களை முன்வைப்பதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குக.
- முன்வைக்கப்பட்ட தகலவ்கள் பற்றிக் கருத்துக்களை வெளிப்படுத்த உரிய குழுவுக்கும் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்புகள் வழங்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

| |
|---|
| • கண்டி இராச்சியத்தில் தன்னிறைவுப் பொருளாதாரக் கோலம் நிலவுதல். |
| • காணி உரித்தை அனுபவிப்பதற்கேற்ப நான்கு பகுதிகளாகக் காணிகள் பிரிக்கப்பட்டிருத்தல். |
| • எல்லா நிலங்களுக்கும் அரசனே உரிமை கொண்டிருத்தல். |
| • குல முறைக்கேற்ப தொழில்கள் தீர்மானிக்கப்பட்டிருத்தல். |
| • சமூக தாரதம்மியங்ளுக்கு ஏற்ப வீடுகள், உடைகள் என்பன வேறுபட்டிருத்தல். |
| • மக்களின் முக்கிய சமயமாக பௌத்தம் விளங்குதல். |
| • பௌத்த சமய வளர்ச்சிக்கு அரசர்கள் ஆதரவு வழங்குதல். |
| • கண்டி இராச்சியத்தின் கல்வி நடவடிக்கைகள், பன்சல மற்றும் பிரிவேனா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல். |
| • கல்வி வளர்ச்சிக்கு வெலிவிற்ற சரணங்கரதேரர் அளப்பரிய சேவை செய்தமை. |
| • கண்டி இராச்சியத்தின் இலக்கியங்கள் சிறப்பான அம்சங்களைக் கொண்டிருத்தல். |
| • இலக்கியங்களில் புகழ்பாடுந் தன்மை காணப்படுதல். |
| • கண்டி ஓவியக்கலை சிறப்பான அம்சங்களைக் கொண்டிருத்தல். |
| • செதுக்கல் கலையில் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தியமை. |

(120 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**


- கண்டி இராச்சியத்தின் பொருளாதார, சமூக, கலாசாரம் பற்றிய தகவல்களை விவரிப்பார்.
- கண்டி இராச்சியம் மூலம் பெற்ற தேசிய பாரம்பரியம் தேசிய தனித்துவம் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டுமென ஏற்றுக் கொள்வார்.
- கண்டி இராச்சியத்தின் பொருளாதார சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பு ஒன்றைத் தயாரிப்பார்.
- ஒத்துழைப்பு நல்குவார்.
- தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 8.1.2.1**







6. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.1.2.2

### *செயற்பாட்டுப்பத்திரம்*

***குழு 1***

- கண்டி இராச்சிய காலத்தின் பொருளாதாரம் பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரம் ஒன்றைத் தயாரித்தலே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதில்,
  - விவசாயம்
  - கைத்தொழில்
  - வர்த்தகம் ஆகிய விடயங்களின் கீழ் தகவல்களைச் சேகரிக்குக.
- ஒழுங்குபடுத்திய தகவல்களை வகுப்பறையில் எல்லாக் குழுக்களுக்கும் முன்னிலையில் சமர்ப்பிக்குக.

***குழு 2***

- கண்டி இராச்சிய காலத்தின் சமூக ஒழுங்கமைப்பு பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரம் ஒன்றைத் தயாரித்தலே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதில்,
  - காணி உரிமையும் அனுபவித்தலும்
  - கபடாகம், நிந்தகம் விகாரைகளும் தேவாலயங்களும் (பரவேணி) பரம்பரைச் சொத்து நிலம்
  - கிராம சமூகத்தின் அம்சங்கள்
  - பதவிகளும் சீவனோபாயமும்
  - திருமண நடவடிக்கைகள்
  - 'பன்சல' வும் சமூகமும்

  என்னும் விடயங்கள் பற்றித் தவல்கள் சேகரிக்குக.
- ஒழுங்குபடுத்திய தகவல்களை வகுப்பறையில் எல்லாக் குழுக்களுக்கும் முன்னிலையில் சமர்ப்பிக்குக.

***குழு 3***

- கண்டி இராச்சிய காலத்தின் சமய நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரம் ஒன்றைத் தயாரித்தலே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதில்,
  - பௌத்த சமயம் பற்றிய தகவல்கள்
  - இந்து சமயம் பற்றிய தகவல்கள்
  - இஸ்லாம் சமயம் பற்றிய தகவல்கள்
  - உரோமன் கத்தோலிக்கம் பற்றிய தகவல்கள்
- ஒழுங்குபடுத்திய தகவல்களை வகுப்பறையில் எல்லாக் குழுக்களுக்கும் முன்னிலையிற் சமர்ப்பிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழு 4**

- கண்டி இராச்சிய காலத்தின் இலக்கியம், கல்வி என்பன பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரம் ஒன்றைத் தயாரித்தலே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதில்,
  - கல்வி நிறுவகங்கள்
  - கல்வி, இலக்கியம் என்பவற்றுக்கு ஆதரவு வழங்கிய மன்னர்கள்
  - கல்விக்காகப் பிக்குமார் வழங்கிய சேவைகள்.
  - இலக்கியம் நூல்கள் என்பன பற்றிய தகவல்கள் தொகுக்கப்படல்.
- ஒழுங்குபடுத்திய தகவல்களை வகுப்பறையில் எல்லாக் குழுக்களுக்கும் முன்னிலையில் சமர்ப்பிக்குக.

**குழு 5**

- கண்டி இராச்சிய காலத்தின் கலை நுட்பங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரம் ஒன்றைத் தயாரித்தலே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதில்,
  - சித்திரக்கலை
  - செதுக்கல் கலை பற்றிய தகவல்கள்

  என்பன தொடர்பான படங்களைச் சேகரிக்குக.
- ஒழுங்குபடுத்திய தகவல்களை வகுப்பறையில் எல்லாக் குழுக்களுக்கும் முன்னிலையில் சமர்ப்பிக்குக.

## இணைப்பு 8.1.2.3

### *அறிவுரைகள்*

- மேற்படி செயற்பாட்டிற்காக 5 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- செயற்பாட்டிலீடுபடுவதற்காக 2 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- செயற்பாடுகளை மாணவர் வகுப்பில் முன்வைப்பதற்கு 3 பாடவேளைகள் ஒதுக்கப்படலாம்.
- ஒவ்வொருவின் முன்வைப்பிலுமுள்ள நிறைகளையும், குறைகளையும் கவனயீர்ப்புச் செய்க.
- சில குழுக்களின் கருத்துக்களைக் கேட்டறிக.
- குழுச் செயற்பாட்டிற்கு முதல்நாள் தேவையான தகவல்களையும் படங்களையும் கொண்டுவரும்படிக் கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.2 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

### அறிமுகம் 14 பாடவேளைகள்

மறுமலர்ச்சி எனும் பதம் மீண்டும் எழுச்சி பெறுவதைக் குறித்து நிற்கிறது. 15 ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, சமய, கலை, பல்வேறு கற்கைகள், விஞ்ஞானம் போன்ற சகல துறைகளிலும் புதியதொரு எழுச்சியைக் காணக்கூடியதாயிருந்தது. ஐரோப்பாவில் ஏற்பட்ட இவ்வெழுச்சி ஐரோப்பாவினைப் புதியதொரு பாதையில் இட்டுச் செல்வதற்கு வழிவகுத்தது எனலாம். மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட விருத்தி மற்றும் கண்டுபிடிப்புகள் ஐரோப்பாவின் பண்பாடு மற்றும் சிந்தனை மரபுகளினை புதியதொரு வழியில் இட்டுச் செல்வதற்கும் அத்துறைகளில் நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கும் காரணமாகின. 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் உலகில் ஏற்படுத்திய செல்வாக்கு முறைகள் பற்றி ஆராய்ந்தறிவதே இவ்வத்தியாயத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி :-**

உலக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பியச் சக்திகள் தொடர்பில் விசாரணை செய்வார்.

**தேர்ச்சி மட்டங்கள் :-**

- மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் உலகில் அதுவரை நிலவியவற்றை மாற்றியமைப்பதில் பங்களித்த விதத்தினை விசாரணை செய்வார்.
- புதிய கடல்மார்க்க வர்த்தகப்பாதைகள் பற்றிய விபரங்களையும் அவற்றைக் கண்டறிந்தமையால் உலகில் தனித்துக் காணப்பட்ட நாடுகள் உலகிற்கு அறிமுகமான விதத்தை உசாவுவார்.
- நாடுகாண் பயணங்களைக் காண்பிக்கும் உலகப் புறவுருப்படத்தில் பிரதான பாதைகள், நாடுகள், இடங்களைக் குறித்துப் பெயரிடும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.

**பாட உள்ளடக்கம் :-**

### 8.2. மறுமலர்ச்சி - ஓர் அறிமுகம்


- **பிரதான இரு வரைவிலக்கணங்கள்**
  1. புராதன கிரேக்க - உரோம நாகரிகங்கள் மீண்டும் எழுச்சி பெற்றமை மறுமலர்ச்சி எனப்பட்டது.
  2. 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவினது அரசியல், பொருளாதாரம், சமயம், இலக்கியம், கலைத்துறை மற்றும் விஞ்ஞானத்துறைகளில் ஏற்பட்ட புதியதொரு எழுச்சி மறுமலர்ச்சி எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.2.1 மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு உறுதுணையாக அமைந்த பின்னணி

- ஆரம்ப காலந்தொட்டு நடைபெற்று வந்த கீழைத்தேச, மேலைத்தேச வர்த்தகத்திற்குத் தடைகள் ஏற்பட்டமை.
  - * சிலுவை யுத்தத்தின் காரணமாக, வர்த்தகம் விரிவடைந்தமையால் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி செய்யக்கூடிய நூல்களை தாபிப்பதற்கும் ஓய்வு நேரமுள்ள தனவந்தர்கள் தோன்றியமை.
  - * சிலுவை யுத்தத்தின் பெறுபேறாக 1453 இல் கொன்ஸ்டாந்து நோபிள் நகரம் ஒட்டோமன் துருக்கிகளின் வசமானது.
  - * ஆசிய வணிகப் பொருட்கள் ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லும் தரைவழிப் பாதை தடைப்படல்.
  - * கீழைத்தேய நாடுகளுக்குச் செல்வதற்கான புதிய பாதைகளை கண்டுபிடிக்க வழியேற்படல்.




* கிரேக்க - உரோம, பெறுமதிமிகு இலக்கியங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த நூலகம் கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்தில் அமைவு பெற்றிருந்தமை.

* துருக்கியர் கொன்ஸ்தாந்துநோபிளைக் கைப்பற்றும் போது அங்கிருந்த கற்றவர்கள் நூலகத்தில் இருந்த பெறுமதிமிக்க கிரேக்க - உரோம நூல்களையும் எடுத்துக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லல். பெரும்பாலானோர் இத்தாலி நாட்டிற்குச் சென்றனர்.

* இதன் பலனாக கிரேக்க, ரோம நூல்களினை அதிகம் ஆராய்ந்தறிந்து கிரேக்க, உரோம இலக்கியங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி ஐரோப்பியர்களிடத்தில் ஆர்வம் ஏற்படல்.

* 12 ஆம் நூற்றாண்டில் பல்கலைக்கழகம் நிறுவப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **பல்கலைக்கழகங்களின் தோற்றம்**
  11 ஆம் 12 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றன. அத்துடன் 15 ஆம் நூற்றாண்டளவில் பல்கலைக்கழகங்களின் வேகமான வளர்ச்சி ஏற்படல்.
* இக்காலத்தில் தோன்றிய பல்கலைக் கழகங்கள்
  - பொலொஞ்ஞா, பாதுவா - இத்தாலி
  - பரிஸ் - பிரான்ஸ்
  - ஒக்ஸ்போர்ட் - இங்கிலாந்து
* பரிஸ், பொலொந்தா போன்ற நகரங்களில் அமைவு பெற்ற பல்கலக்கழங்களுக்கு அங்கீகாரம் இருத்தல்.
* பல்கலைக்கழக கற்கைத்துறைகள் மாற்றமடைதல்
  - ஐரோப்பாவின் குறிப்பிட்ட கிறிஸ்தவ நாடுகளின் இறைபோதனைகள் கற்பிக்கப்பட்ட அதே சமயத்தில் இத்தாலிப் பல்கலைக்கழகங்களில் உலக விடயங்களில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.
  உ-ம்: சட்டம், மருத்துவம்
* பல்கலைக்கழகங்களினது தோற்றம் காரணமாக ஐரோப்பாவின் கல்வித்துறையில் மறுமலர்ச்சி வேகமாக ஏற்படல்.

## 8.2.2 கல்விசார் மறுமலர்ச்சி

- புராதன கிரேக்க, இலத்தீன் மொழிகள் புத்துயிர் பெறுதல்.
  * கிரேக்க மற்றும் இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்ட நூல்களை அதிகளவு வாசிப்பதன் காரணமாக அம்மொழிகளிற்கு மறுமலர்ச்சி ஏற்படலும் இலக்கியங்களும் மேலும் மேம்பாடடைதலும்.
- இக்காலத்தில் வாழ்ந்த எழுத்தாளர்கள்
  டான்டே, பெட்ராக், பொக்கேஷியோ, இத்தாலி
  தோமஸ் முவர், பிரான்சிஸ்பேகன, இங்கிலாந்து

### மானிடத்துவம்

- மத்திய காலத்தில் இறைவனை உயர்வாக மதித்தல்.
- நவீன காலத்தில் மனிதனை உயர்வாக மதித்தல்

### கவின்கலைகள்

- உலக இரசனைகளில் ஈர்ப்புக் கொண்ட செல்வந்தர் கவிக்கலைகளின் வளர்ச்சிக்கு அனுசரணை வழங்குதல்.
- சுதந்திரமான ஆக்கங்களினை உருவாக்குவதற்குரிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறல்.
- மத்திய காலத்தில் சமய சிந்தனைகளுக்கு ஏற்ப கலையாக்கங்கள் உருவாக்கப்பட்டதுடன் மறுமலர்ச்சிக் காலத்தின் உலக இரசனைகளிற்கான கலைப் படைப்புகள் உருவாக்கப்படல்.

### அரசியல் எழுச்சி

- தேசிய அரசுகளின் தோற்றம்
- பிரபுக்கள் அதிகாரம் விரிவிடைதல்
- பிராந்திய ஆட்சியாளர்களாகிய பிரபுக்கள் பலவீனமடைதல்
- மத்திய வகுப்பின் தோற்றம்/எழுச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொருளாதார எழுச்சி
  * தன்னிறைவுப் பொருளாதார முறை மற்றும் நிலத்தையடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு ஆகிய முறைகள் வீழ்ச்சியடைதல்.
  * வாணிபத்தின் மேம்பாடும் பணப்பாவனையின் பரம்பலும்
  * நகரங்களின் தோற்றம்
    - வெனிஸ், ஜெனிவா, மிலான், புளோரன்ஸ், பொலெந்தா (இத்தாலி)
    - லண்டன் (இங்கிலாந்து)
    - பரிஸ் (பிரான்ஸ்)
    - லிஸ்பன் (போர்த்துக்கல்)

## சித்திரக்கலை

- புளோரன்ஸ் நகரத்தில் சித்திரக்கலை பிரதான இடம் வகித்தல்.
- நிர்வாண மற்றும் அரை நிர்வாண படைப்புகள் உருவாக்கப்படல்.
- மெசெச்சியோ, பெட்செல்லி, ரபாயல், லியானோடோ டாவின்சி, மைக்கல் அஞ்சலோ போன்ற ஓவியர்கள்.
- மொனலிசா, இறுதி இராப்போசனம்
- இறுதி நீதிபதித் தீர்ப்பு



இறுதி இராப்போசனம்



மொனலிசா

## சிற்பக்கலை

- மத்திய கால கலைகளை விட கிரேக்க, ரோம கலைகளுக்கு ஏற்ப சிலைகளை செய்தல். மத்திய காலத்தில் நிலவிய சமயங்களது தன்மைகளை இவை பெறல். சிலை செதுக்கல் கலை சிற்பக் கலையாக இனங்காணப்படும்.
- பீங்கான், செங்கற்களில் சிலைகளை செதுக்குதல்.
- மைக்கல் அஞ்சலோ - பியெடா, டேவிட் போன்ற படைப்புகள்



பியெடா



டேவிட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டிடக்கலை**

மத்திய காலத்தில் நிலவிய கலைகளுக்கு பதிலாக ரோம, கட்டிட நிர்மாணக் கலைக்கேற்ப கட்டிடங்களை அமைத்தல்.

- ரோம சென் பீட்டர் தேவாலயம்



கோதிக் கட்டிடத்தொகுதியொன்று



சென் பீட்டர் தேவாலயம்

## 8.2.3 புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

- கிரேக்க, ரோம கற்றல்களில் இருந்து பயிற்சிகளைப் பெற்ற அறிஞர்கள் புராதன சமயங்களது எண்ணக்கருக்களை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாது புதிய கண்டுபிடிப்புகளில் கவனஞ் செலுத்தினர்.
- பிரபஞ்சம் பற்றிய புதிய எண்ணக்கருக்கள் தோற்றமடைதல்.

  பிரபஞ்சத்தின் மையம் புவிதான் எனவும் புவியானது சுழலாமல் உள்ளது எனக் கூறிய புவியமையக் கொள்கை காணப்பட்டது.

- **கொப்பர்ணிகஸ்:- (1473-1543)** ஞாயிற்று மையக் கோட்பாடு கொப்பர்னிகஸ் எனும் வானவியல் அறிஞரால் முதன் முதலில் அறிமுகமானது. சூரியனே நாயகன் என்றும் புவி அதனைச் சுற்றிவருகிறது என்றும் கூறினார்.
- **கலிலியோ :- (1564-1642)** தொலைநோக்கியை கண்டுபிடித்தல், ஞாயிற்றுத் தொகுதியின் புதிய கிரகங்களை கண்டுபிடித்தல்.
- **கெப்லர் :- (571-1680)** கோள்கள், சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருதலைக் கண்டுபிடித்தமை.
- **சேர் ஐசக் நியூட்டன்:- (1642-1727)** புவியீர்ப்பு பற்றிய கோட்பாட்டினை முன்வைத்தல்.
- சுவிற்ஸலாந்தைச் சேர்ந்த **பெரசல்சஸ்** என்ற மருத்துவர் பல்வேறு பயணங்களை மேற் கொண்டு பல்வேறு சூழற் தொகுதிகளின் கீழ் நோய் தொற்றுவதற்குரிய காரணங்களையும் பரிகாரங்களையும் ஆராய்ந்தார்.
- **மைக்கல் சர்வேட்ஸ், வில்லியம் ஹார்வே** என்போர் குருதிச் சுற்றோட்டம் பற்றி ஆய்வு செய்தல்.
- அச்சியந்திரம், மாலிமா இயந்திரங்கள் மேலும் முன்னேற்றமடைதல்.
- இத்தகைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நாடுகாண் பயணங்கள் நிகழ்வதற்கு செல்வாக்குச் செலுத்தின.



7. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.2.4 புதிய வர்த்தகப் பாதைகளைத் தேடியறிதல்

- 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாகியதால், கிழக்குத் தேசங்களுடன் காணப்பட்ட வர்த்தகப்பாதைகள் தடைப்படல்.
- கிழக்கில் இருந்து கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கு எகிப்து சுல்தான் அதிக வரியை வசூலித்தல்.
- புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

  - புவி கோள வடிவானது
  - மாலிமா இயந்திரம், திசை காட்டிகள் உற்பத்தி
- தேசிய அரசுகளில் உள்ள மன்னர்களது அனுசரணை கிடைக்கப் பெறல்.

  - போர்த்துக்கேய கடலோடி ஹென்றி இளவரசர்.
  - ஸ்பானியாவின் பெர்ணாட், இசபெலா சோடி
  - இங்கிலாந்தின் ஏழாம் ஹென்றி அரசன்
- நாடுகாண் பயணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர்கள்

  - கிறிஸ்தோபர் கொலம்பஸ்
  - பெல்போவா
  - மகலன்
  - அமெரியோ வெஸ்புருசி
  - பர்தோலமியு டயஸ்
  - கோரிடேஸ்
  - பிரான்ஸிஸ்கோ பிசாரோ
  - ஜோன்கெபோ
- இவர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட தேசங்கள்
  அமெரிக்கா, பிறேசில்

**நாடுகாண் பயணங்களது பயணப்பாதையை காட்டும் தேசப்படம்**

(15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற நாடுகாண் பயணங்களது பயணப்பாதைகளைக் காட்டும் தேசப்படத்தை தயாரித்துக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் வேண்டப்படுகின்றனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.2.1** : ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி உலக வரலாற்றை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் எற்பட்ட புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவியல் மறுமலர்ச்சியில் உலகில் அதுவரை நிலவிய வழிமுறைகள் மாற்றமடைவதற்கு பங்களித்த விதத்தை ஆராய்வார்.

**செயற்பாடு** : "மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட அறிவியல் மலர்ச்சியை தேடியறிதல்"

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1 லியானோடாவின்சியின் "இறுதி இராப்போசனம்" ஓவியம்
- இணைப்பு 2 - செயற்பாட்டுப்பத்திரம்
- பாடநூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.3.1** :

- இணைப்பு 1 இல் உள்ள இறுதி இராப்போசனம் ஓவியத்தை மாணவர்களுக்கு முன்வைத்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்தல்.
  - இவ்வோவியத்தை நீங்கள் கண்டதுண்டா?
  - இது என்ன?
  - இது யாரினால் வரையப்பட்டது?
  - இது எக்காலத்திற்குரிய ஓவியமாகும்?
  - குறிப்பிட்ட காலத்தில் மேம்பாடு அடைந்து இருந்த வேறு துறைகள் எவை?

  போன்ற வினாக்களை மாணவர்களிடம் வினவிப் பாடநூலினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அம்சங்கள் வெளிப்படும் வரை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, சமய, இலக்கிய, கலைத்துறைகள், விஞ்ஞானம் போன்ற துறைகளில் மலர்ச்சி ஏற்பட்டமை.
- இவை ஐரோப்பிய மறுமலர்ச்சி எனப்பட்டமை
- 1453 ஆண்டளவில் ஐரோப்பியரின் மிக முக்கிய நகரான கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாதல்.
- கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் துருக்கியர் வசமாகிய போது அங்கு நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதி மிகு நூல்களை அறிஞர்கள் எடுத்துக் கொண்டு ஐரோப்பாவிற்குத் தப்பியோடியமை.
- ஐரோப்பாவில் உள்ள பல்கலைக்கழக அறிஞர்களால் அந்நூல்கள் ஆய்வுக்குட்படுத்தியதன் காரணமாக கிரேக்க, உரோம நாகரிகங்கள் புத்துயிர் பெற்றமை.
- இதனால் சமயத்தில் இருந்து விடுபட்டு உலக இரசனைகளுக்குரிய கலைகள், கலைப்படைப்புக்கள் உருவானமை.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.2.3.2

- மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- ஒவ்வொரு குழுக்களுக்கும் இணைப்பு 03 இன் செயற் பத்திரத்தை வழங்குக.
- பாடநூலில் உள்ள குறித்த அலகினை கற்றபின் செயற்பத்திரத்தினை செய்யும் வகையில் மாணவர்களை செயற்பாடடில் ஈடுபடுத்துக.
- தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குக.

(30 நிமிடங்கள்)

படி 8.2.3.3 :

- குழுக்களினால் தயாரிக்கப்பட்ட தகவல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு வாய்ப்பை வழங்குக.
- ஒவ்வொரு குழுக்கள் மூலம் முன்வைக்கப்படும் தகவல்களை திருத்தம் இருப்பின் அவற்றை திருத்துவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பினை வழங்குக.
- குழுக்களில் முன்னேற்றகரமான நிலையினை பாராட்டுவதுடன் பிழைகள் இருப்பின் அவற்றை திருத்துவதற்கான தேவையான வழிகாட்டல்களை வழங்குவதுடன் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- மத்திய காலத்தில் புராதன கிரேக்க உரோம நாகரிகங்களில் காணப்பட்ட கிரேக்க உரோம நூல்களை பாதுகாப்புடன் கொன்ஸ்தாந்திநோபிள் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.
- ஐரோப்பிய பல்கலைக்கழக அறிவியல் மலர்ச்சிக்கு இது வழி வகுத்தது.
- கிரேக்க கலைகளின் மலர்ச்சியில் புராதன கிரேக்க லத்தீன் மொழிகளது புத்துயிர் குறிப்பிடத்தக் விடயமாக இருந்தது.
- லத்தீன் மொழி சமய மற்றும் சட்டங்களிற் பயன்படுத்தப்பட்டிருப்பினும் கிரேக்க மொழி வழக்கொழிந்து போயுள்ளது.
- மறுமலர்ச்சிக்கான பேறாக மட்டுமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் மொழி இலக்கியங்கள் மலர்ச்சி பெற்றன.
- டான்டே, பெட்ராக், பொகேசியோ, தோமஸ்முவர், பிரான்சிஸ் பேகன் போன்ற எழுத்தாளர்கள் இக்காலத்தில் ஐரோப்பாவில் வாழ்ந்தனர்.
- இக்காலத்தில் மனிதனை முதன்மைப்படுத்திய மானிட வாதம் போன்ற கருத்துக்கள் காணப்பட்டிருந்தன.
- மத்திய காலத்தில் கடவுளே உயர்ந்தாக கருதப்பட்டிருந்தது.
- சுயாதீனமான கலைப்படைப்புகளை ஆக்குவதற்கு சந்தர்ப்பங்கள் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதற்கு முன்னர் அநேக கலைத்துறைகள் சமய சார்பாக காணப்பட்டமை.
- ஐரோப்பிய காலத்தில் உலக இரசனைகளுக்குரிய வகையில் கலைப்படைப்புகள் உருவானமை.
- இதுவரை கலை நடவடிக்கைகள் கிறிஸ்தவ ஆலய அனுசரணையிலேயே இடம் பெற்றமை.
- மறுமலர்ச்சிக்காலத்தில் இவை சுயாதீனமாக இடம் பெற்றமை.
- லியானோடாவின்சி, போட்செல், ரபாயல், மைக்கல் அஞ்சலோ போன்ற படைப்பாளிகள் அனேகம்பேர் இருந்தமை.
- மோனலிசா, இறுதி தீர்ப்பு, இறுதி இராப்போசனம் போன்ற ஓவியங்கள் முக்கியம் பெற்றமை.
- ஓவியங்கள் மற்றும் சிலை படைப்புகளில் நிர்வாண மற்றும் அரை நிர்வாண ஓவிய படைப்புகள் தோற்றம் பெற்றமை.
- மத்திய காலத்தில் நிலவிய சமய சார்ப்பு போதிக் கலைக்கு பதிலாக கிரேக்க உரோம கலைகளிறிகு ஏற்ப சிலைகள் உருவாக்கப்படும் நிலை உருவாதல்.
- பீங்கான் கற்கள் கொண்டு சிற்பக்கலைக் காலம் தோன்றியது.
- மைக்கல் அஞ்சலோ ஒரு சிலை செதுக்கும் சிற்பியாவர்.
- லொரென்சோ மெட்ச் மற்றும் பியேடா சிலைகள், சிற்பக்கலையின் முக்கிய படைப்புகளாகும்.
- மறுமலர்ச்சி காலத்தில் கிரேக்க, உரோம படைப்புகளிற்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டப்படும் நிலை தோன்றியமை. வில்வளைவு வடிவ கட்டடங்கள், கூம்பு வடிவான மாடிகள் மற்றும் பிரமிட் வடிவ முகடுகளுக்கு பதிலாக அரைக்கோள வடிவ முகடுகள்
- கலைத்துறைகளின் எழுச்சியுடன் இருட்டில் இருந்த ஐரோப்பா படிப்படியாக வெளிச்சத்தை நோக்கிப் பயணித்தமை.
- ஐரோப்பா புதியதொரு பாதையில் செல்வாக்கு இது வழி அமைந்தது.
- தற்போதைய உலகின் வளர்ச்சிகளுக்குக் கூட மறுமலர்ச்சியில் பெற்ற வெளிச்சம் காரணமாகிறது.

(40 நிமிடம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- கலைத்துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றிய தகவல்களை விளக்குவார்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட கலைப்படைப்புகளின் உயர்வான தன்மையை மதிப்பார்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட கலைத்துறைகளில் எழுச்சி பற்றிய சுவர்ப்பத்திரிகையொன்றுக்குக் கட்டுரை தயாரிப்பார்.
- குழுவுணர்வுடன் செயற்படும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- சரியாகவும் தர்க்க ரீதியாகவும் கருத்துக்களை முன்வைப்பார்.

## இணைப்பு 8.2.1.1

மோனலிசா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.2.1.2

| செயற்பாட்டுப்பத்திரம் இல 01 | செயற்பாட்டுப்பத்திரம் இல 02 |
| --- | --- |
| 1. கலைத்துறை மறுமலர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?<br>I<br>II<br>III<br>2. இக்காலத்தில் இருந்த முக்கியமான எழுத்தாளர்கள் சிலரின் பெயர்களைத் தருக.<br>I II<br>III IV<br>V<br>3. இக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றைப் பெயரிடுக.<br>I II<br>III IV | 1. மறுமலரச்சிக் காலத்தில் ஓவியக் கலையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?<br>I<br>II<br>2. இக்காலத்திற் சிறந்த பிரசித்தி பெற்ற ஓவியர்களினைப் பெயரிடுக.<br>I II<br>III<br>3. மறுமலர்ச்சிக் காலத்தில் உயர்வான படைப்புகளாகக் கருதப்பட்ட ஓவியங்களினை பட்டியலிடுக.<br>I II<br>III IV<br>V VI |
| **செயற்பாட்டுப்பத்திரம் இல 03** | **செயற்பாட்டுப்பத்திரம் இல 04** |
| 1. மறுமலர்ச்சிக் காலத்திற் சிற்பக் கலையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?<br>I<br>II<br>2. சிற்பக் கலையில் முக்கியமான கலைஞர்களைப் பெயரிடுக.<br>I<br>II<br>III<br>3. இவர்களது படைப்புகள் சிலவற்றைப் பெயரிடுக.<br>I<br>II<br>III | 1. மறுமலரச்சிக் காலத்திற் கட்டிடக் கலையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?<br>I<br>II<br>2. மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டிடக் கலைகளை நன்றாக பிரதிபலித்த படைப்புகள் எவை என்பதைப் பெயரிடுக.<br>I<br>II |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.2.2** : உலக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பியச் சக்திகள் தொடர்பில் விசாரணை செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் உலகில் அது வரை நிலவியவற்றை மாற்றியமைப்பதில் பங்களித்த விதத்தினை விசாரணை செய்வார்.

**செயற்பாடு** : "விஞ்ஞான உலகின் திருப்பங்கள்"

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 1 விஞ்ஞானிகள் மற்றும் அவர்களது கண்டுபிடிப்புக்கள் கொண்ட படங்கள்
- இணைப்பு 2 - செயற்பாட்டுப்பத்திரம்
- பாடநூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.2.1** :

- இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள படங்களை வகுப்பறையில் முன்வைத்து பின்வரும் வினாக்களுக்கு விடைகளைக் கோருக.
- இங்கு காட்டப்பட்டுள்ள விஞ்ஞானிகளை நீங்கள் அறிந்திருக்கீறீர்களா?
- இவர்களால் முன்வைக்கப்பட்ட கண்டு பிடிப்புகள் அல்லது கோட்பாடுகள் யாவை?

  போன்ற வினாக்களிற்கு விடைகளைப் பெற்று பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

| |
|---|
| • மறுமலர்ச்சிக் காலத்தில் பல விஞ்ஞானம் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. |
| • பிரபஞ்சம் பற்றிய பழைய கோட்பாடு மாற்றமடைந்து புதிய கோட்பாட்டு முன்வைக்கப்பட்டது. |
| • புவியுட்பட ஞாயிற்றுத் தொகுதி உள்ள கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. |
| • மருத்துவத்துறையில் பல கண்டு பிடிப்புகள் நிகழ்ந்தன. |
| • இக்கண்டுபிடிப்புகள் உலகினைப் புதிய வழியில் செல்வதற்கு காரணமாகின. |

(10 நிமிடங்கள்)

**படி 8.2.2.2** :

- சகல மாணவர்களிற்கும் செயற்பாட்டுப்பத்திரத்தினைப் பகிர்ந்ததளிக்குக.
- இது மாணவர்களினால் தனித்தனியாகச் செய்ய வேண்டிய செயற்பாடு என்பதை அறிவிக்கவும்.
- செயற்பாட்டுப்பத்திரத்திற்கேற்ப தமக்கு வழங்கப்படம் செயற்பாட்டிற்காக பாடல் நூல் மற்றும் ஏனைய மூல நூல்களில் இருந்து தகவல்களைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குக.
- செயற்பாட்டினை இலகுபடுத்தும் வகையில் மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்குக.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசு 8.2.2.3 :

- செயற்பாட்டின் இறுதியில் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்களது விடைகளை முன்வைக்கச் செய்க.
- முன்வைக்கப்பட்ட விடைகளது நன்மை, தீமைகளைக் கலந்துரையாடுக.
- முக்கியமான விடயங்களைப் பாராட்டுக.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- மறுமலர்ச்சிக்காலத்தில் விஞ்ஞானத் துறையில் மலர்ச்சி ஏற்பட்டது.
- புவி கோள வடிவானது. திசையறி கருவி, வட நட்சத்திர அளவுகருவி, போன்ற கண்டுபிடிப்புகளின் காரணமாக ஐரோப்பியர் புதிய நாடுகளை நோக்கி பயணிக்க முடிந்தமை.
- இதனால் இவர்களது தனிமைத்தன்மை இல்லாமல் ஒழிந்ததுடன் இவர்கள் ஏனைய உலகிற்கு அறிமுகமானார்கள்.
- நிக்கலஸ் கொப்பர்ணிகல்ஸ் நவீன வானியல் (நட்சத்திர விஞ்ஞானம்) விஞ்ஞானத்தின் தந்தையாகக் கருப்படுகிறார்.
- இத்தாலி நாட்டு கலிலீயோ கலிலியினால் தொலைக்காட்டிகள் தயாரிக்கப்பட்டன.
- சூரியன், சந்திரன், வியாழக் கோளின் உபகோள்கள் போன்றவற்றை தொலைநோக்கியில் அவதானித்து விடயங்கள் சேகரிக்கப்பட்டன.
- ஜொகன்னஸ் கெப்லர் ஞாயிற்றுத் தொகுதியின் கோள்கள் சூரியனைச் சுற்றி நீள் வட்டப்பாதையில் வலம் வருகின்றன என்பதை கண்டு பிடித்தார்.
- ஐசக் நியூற்றன் மூலம் ஈர்ப்பு விசை கண்டுபிடிக்கப்பட்டமை.
- பெரசல்சஸ் என்பவர் நோய் தொற்றுக்கான காரணிகளையும் அவற்றிற்கான தடுப்புகளையும் பரிசோதித்துப் பார்த்தார்.
- மைக்கல் சர்வேட்ஸ் மற்றும் வில்லியம் ஹார்வே போன்ற மருத்துவர்கள் குருதிச் சுற்றோட்டம் பற்றிய தகவல்களை வெளிக் கொணர்ந்தமை.
- ஜொகன்னஸ் குட்டன் பேர்க் மூலம் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை.
- லியானோ டாவின்சி ஓவியக் கலையில் மட்டுமன்றி, விஞ்ஞானத்துறையில் குறிப்பிடத்தக்க பரிசோதனை களையும் செய்தவர் ஆவார்.

(40 நிமிடம்)




S. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞான மேம்பாடு பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- மறுமலர்ச்சிக் கால மருத்துவத்துறையின் புதிய கண்டுபிடிப்புகளை விளக்குவார்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை மதிப்பார்.
- தொடர்பாடல் திறன்களை வளர்த்துக் கொள்வார்.
- தாம் கண்டுபிடித்தவற்றை ஏனைய மாணவர்களிற்கும் முன்வைப்பார்.

## இணைப்பு 8.2.2.1



கலிலீயோ கலிலியின் தொலைக்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.2.2.2

### *செயற்பாட்டுப்பத்திரம் இல 01*

| | |
|---|---|
| 1. மறுமலர்ச்சிக் காலத்தில் பிரபஞ்சம் பற்றிய கண்டு பிடிப்புகளைச் செய்தவர்களை பெயரிடுக.<br>I<br>II<br>III<br><br>2. இவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஒழுங்குமுறையில் காட்டுக.<br>I<br>II<br>III | 1. மறுமலரச்சிக் காலத்தில் மருத்துவத் துறையில் பரிசோதனைகள் மேற்கொண்ட நபர்களினைப் பெயரிடுக.<br>I<br>II<br>III<br><br>2. இவர்களது கண்டுபிடிப்புக்களைப் பெயரிடுக.<br>I<br>II<br>III |
| 1. மறுமலர்ச்சிக் காலத்தில் ஏனைய விஞ்ஞான படைப்புகளை முன்வைத்த நபர்களைப் பெயரிடுக.<br>I<br>II<br>III<br><br>2. இவர்களது கண்டுபிடிப்புகளை முன்வைக்குக.<br>I<br>II<br>III | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

**அறிமுகம்** **10 பாடவேளைகள்**

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேலைத்தேயவர்களின் வருகையுடன் இலங்கையில் அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பியர்கள் கீழைத்தேய நாடுகள் மீது கவனம் செலுத்துவதற்குரிய காரணிகள், போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது இங்கு இருந்த அரசியல் நிலைமைகள் கோட்டை அரச குடும்பத்தில் இடம்பெற்ற குழப்ப நிலை, போர்த்துக்கேயர் தமது அதிகாரத்தைக் கரையோரப் பிரதேசத்தில் ஏற்படுத்திக் கொள்வதற்கான காரணிகள், போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராசதாணியுடன் ஏற்படுத்திக் கொண்ட அரசியல் தொடர்புகள், சுதந்திரமான ஆட்சி முறை ஒன்று நிலவிய கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் தொடர்புகள், போர்த்துக்கேயரின் ஆட்சியில் ஏற்பட்ட பல்வேறு சவால்கள் என்பன பற்றிக் கற்பதே இவ்வலகில் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி :-**

இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரணை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டங்கள் :-**

- ஐரோப்பியர் கீழைத்தேசத்துக்கு வருவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தேடியறிவார்.
- ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்ட வர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தைப் போர்த்துக்கேயரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விசாரணை செய்வார்.
- போர்த்துக்கேயர் ஆட்சியிலே கரையோரத்தில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றித் தெளிவு படுத்துவார்.

**விடய உள்ளடக்கம் :-**

## 8.3 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

### 8.3.1 ஐரோப்பியரின் கீழைத்தேச வருகை

- வருகைக்கான காரணங்கள்
- வாசனைத்திரவியங்களைப் பெறுவதில் இருந்த தேவை. வாசனைத் திரவியங்கள் அதிகமாகக் காணப்பட்டமை.
- கி.பி. 1453 இல் ஒட்டோமன் துருக்கியர் கொன்ஸ்தாந்து நோபிள் நகரை தமதாக்கிக் கொண்டமை.
- ஐரோப்பியர் தமது சமயத்தைப் பரவச் செய்வதில் மேற்கொண்ட முயற்சி
- ஐரோப்பிய நாடுகள் தமது பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள எடுத்த முயற்சிகள்
- வாணிபத்தின் தாக்கம் (ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம்)
- வர்த்தகத்தை விரிவுபடுத்துவதில் ஐரோப்பியர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நடந்த கிளர்ச்சிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புகழை அடைந்து கொள்ளுவதற்கும் தனித்துவத்தைப் பேணிக் கொள்வதற்கும் அதிகமான நாடுகாண் பயணங்களை மேற்கொண்டமை.
- நவீன கண்டு பிடிப்புக்களும் தொழிநுட்ப வளர்ச்சியும் நாடுகாண் பயணங்கள் விரிவுபடக் காரணமாயின.
- கீழே தேசங்களுக்கு வருகை தந்த இனத்தவர்கள்

| தாய்நாடு | இனம் | கீழைத்தேய தலைமையிடங்கள் |
|---|---|---|
| போர்த்துக்கல் | போர்த்துக்கேயர் | கோவா |
| ஒல்லாந்து | ஒல்லாந்தர்கள் | பத்தேவியா |
| பிரான்சு | பிரான்சியர் | பாண்டிச்சேரி |
| இங்கிலாந்து | ஆங்கிலேயர் | கல்கத்தா |

## 8.3.2 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையின் அரசியற் பின்னணி
- ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்திற் காணப்பட்ட அரசியலின் உன்னத நிலை பின்னடைந்தமை.
- இலங்கையில் நிர்வாகப் பிரிவுகள் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்களாக பிரிக்கப்பட்டிருந்தமை.





16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் அரசியல் பிரிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோட்டை சிங்காசனம் தொடர்பாக அரச குமாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட கிளர்ச்சிகள்.
  உ-ம்: விஜயபாகு கொள்ளை
- கோட்டை ஆட்சியளார்களுக்கு எதிராக பொதுமக்கள் செயற்பட்டமை.
  உ-ம்: சிங்கள சங்கய
- பிராந்திய ஆட்சியாளர்களின் பலம்
  I (உ-ம்: சப்புமல்குமாரன் கோட்டைக் வந்தமையால் யாழ்ப்பாணப் பிரசேதம் கோட்டை
  II அதிகாரத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமை.
  * அம்புளுகல குமாரன் கோட்டைக்கு வந்ததன்பின் மலைநாட்டுப் பிரதேசம் கோட்டை இராச்சியத்தின் அதிகாரத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமை.




**விஜயபாகு கொள்ளையின் பின் இலங்கையின் அரசியல் பிரிவுகள்**

- கோட்டை, கண்டி, யாழ்ப்பாண இராச்சியங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை.
- ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் பின் சிறந்த ஆட்சியாளன் ஒருவன் ஆட்சிக்கு வராமையால் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனினால் கட்டியெழுப்பப்பட்ட இராச்சியத்தை மேலும் தக்க வைத்துக் கொள்ள பிற்பட்ட ஆட்சியாளர்களினால் முடியாமற் போயிற்று.
- இலங்கையரின் ஆட்சிப் பலவீனத்தால் போர்த்துக்கேயரினால் தமது அதிகாரத்தை இலங்கையில் நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.3.3 போர்த்துக்கேயர் கோட்டை இராசதானியில் தமது அதிகாரத்தை நிலைநாட்டல்.

- 1505 இல் VIII ஆம் வீர பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கை வருகை.
- 1517 இல் போர்த்துக்கேயரினால் கொழும்புக் கோட்டை கட்டியெழுப்பட்டமை.
- கொழும்பு கோட்டை போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசமாக இருந்தது.
- 1521 இல் இடம் பெற்ற விஜயபாகு கொள்கையின் பின் கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாக பிரிந்தது.
  - கோட்டை - VII ஆம் புவனேகபாகு
  - இறைகம - இறைகம் பண்டார
  - சீதாவாக்கை - மாயாதுன்னை
- 1524 இல் போர்த்துக்கேயர் கொழும்பு கோட்டையிலிருந்து தாம் விலகிக் கொள்வதற்கு இணங்கிக் கொண்டனர்.
- 1526 இல் VII ஆம் புவனேகபாகு மன்னனின் ஆணைப்படி முஸ்லிம்கள் கோட்டை இராசதானியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.
- கோட்டை இராசதானியில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு சீதாவாக்கையை ஆட்சி செய்து கொண்டிருந்த மாயாதுன்னை பாதுகாப்பளித்தான்.
- 1537 இல் மாயாதுன்னை கள்ளிக்கோட்டை சமோரியனின் உதவியைப் பெற்று புவனேகபாகு மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.
- 1540 இல் VII ஆம் புவனேகபாகு தனது பேரரான தர்மபால குமாரனுக்கு அரசுரிமையை ஒப்படைக்க முடிவு செய்தான்.
- 1543 இல் போர்த்துக்கேய ஆட்சியாளரினால் தர்மபால குமாரனின் சிலைக்கு முடிசூடடப்பட்டது.
- முடிசூட்டல் விழாவின் பின் இலங்கை வந்த குழுவுடன் ஜுவான் என்பவன் றோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு இலங்கைக்கு வருகை தரல்.
- புவனேகபாகு மன்னன் ஞானஸ்னானம் பெற விரும்பாமல் இருந்த போதும் கோட்டை இராசதானிக்குள் றோமன் கத்தோலிக்க சமயத்தை வழிபடும் மக்களுக்கு தங்கிச் செல்வதற்கான அனுமதியை வழங்கினான்.
- 1551 ஆம் ஆண்டில் VII ஆம் புவனேகபாகு மன்னன் இறந்தான்.
- தர்மபால குமாரன் பெரளவில் அரசனாக நியமிக்கப்பட்டதுடன் அவனுக்காக வீதிய பண்டார ஆட்சி நிர்வாகத்தை மேற்கொண்டான்.
- வீதிய பண்டார போர்த்துக்கேயருக்க எதிரான கொள்கைத் திட்டமொன்றை பின்பற்றத் தொடங்கினான்.
- போர்த்துக்கேயருக்கு எதிராகப் படையுதவியை பெற்றுக் கொள்வதற்காக வீதிய பண்டார மன்னன் யாழ்ப்பாணம் சென்ற சமயத்தில் அங்கு அவன் இறந்தான்.
- 1557 இல் தரம்பால மன்னன் தொன்யுவான் பேரிய பண்டார (தொன் யுவான் பிரபென் தார) எனும் பெயரில் ஞானஸ்னானம் பெற்றான்.
- 1562 இல் முல்லேரியா கிளர்ச்சியில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்தனர்.
- 1565 இல் போர்த்துக்கேயரின் கோட்டையிலிருந்து தர்மபால மன்னன் கொழும்புக் கோட்டைக்கு ஆட்சிப் பீடத்தை எடுத்துச் சென்றான்.
- மாயாதுன்னை தர்மபால அரசனை கொல்வதற்கு எத்தனித்த போதிலும் அது கைகூடவில்லை.
- 1587 இல் தர்மபால அரசன் நன்கொடை உறுதி மூலம் கோட்டை இராசதானியை போர்த்துக்கேயருக்கு ஒப்படைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1597 இல் தர்மபால அரசனின் மரணத்தைத் தொடர்ந்து அவனால் வழங்கப்பட்ட நன்கொடை உறுதியின் படி கோட்டை இராசதானி போர்த்துக்கேயர் வசமானது.
- மல்வானை ஒப்பந்தத்தின்படி போர்த்துக்கேய ஆட்சியாளன் கோட்டை இராசதானியின் அரசனாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் உள்நாட்டுச் சட்டதிட்டத்திற்கு அமைய ஆட்சி நடாத்தினான்.

## சீதாவாக்கை இராச்சியத்துடனான தொடர்பு

- 1521 விஜயபாகு கொள்ளையின் பின் சீதாவாக்கை பிராந்திய அரசாக மாறியது.
- மாயாதுன்னை சீதாவாக்கை இராசதானியின் முதலாவது ஆட்சியாளனாக விளங்கியமை.
- சீதாவாக்கை அரசனான மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையொன்றை வகுத்தான்.
- VII ஆம் புவனேகபாகு அரசன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு அனுசரணை காட்டியதால் மாயாதுன்னை அரசனுக்கு அவன் மீது மனக் கசப்பு ஏற்பட்டது.
- 1538 இல் றைகம பண்டாரவின் மரணத்தின் பின் றைகம இராசதானி சீதாவாக்கை இராசதானியுடன் முதன் முதலாக இணைக்கப்பட்டது.
- 1557 இல் தரம்பால அரசன் ஞானஸ்தானம் பெற்றதன் பின் புனித தந்ததாது சீதாவாக்கை இராசதானிக்கு கொண்டு வரப்பட்டது.
- 1562 இல் முல்லேரியக் கிளர்ச்சியில் டிக்கிரி பண்டார இளவரசன் போர்த்துக்கேயரைப் படுதோல்வியடையச் செய்தான்.
- 1565 இல் மாயாதுன்னையும் டிக்கிரி பண்டாரவும் ஒரே நேரத்தில் கோட்டையையும் கொழும்புக் கோட்டையையும் தாக்கினர்.
- போர்த்துக்கேயர் கோட்டையைக் கைவிட்டு தர்மபால அரசனுடன் கொழும்புக் கோட்டையை அடைந்தனர்.
- சீதாவாக்கை இராசதானி இரண்டாந்தடவையாகவும் விஸ்தரிக்கப்பட்டது.
- 1580 இல் டிக்கிரி பண்டார கொழும்புக் கோட்டையை தாக்கினான். எனினும் கொழும்புக் கோட்டையைத் தனதாக்கிக் கொள்ள முடியவில்லை.
- 1580 இல் மாயதுன்னை அரசனின் மரணத்தின் பின் டிக்கிரி பண்டார 1 ஆம் இராசசிங்கன் என்னும் பெயருடன் ஆட்சி பீடமேறினான்.
- 1582 இல் வீர சுந்தர முதலியின் உதவியுடன் 1 ஆம் இராசசிங்கன் மலையகத்தை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து மேலும் சீதாவாக்கை இராசதானி விஸ்தரிக்கப்பட்டது.
- சீதாவாக்கை இராசதானி ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் எழுச்சி பெற்றதுடன் குறுகிய காலத்துக்குள்ளேயே வீழ்ச்சியும் அடைந்தது.
    * 1 ஆம் இராசசிங்க அரசனின் கொடுரமான செயற்பாடுகள்
    * அரசன் இந்து சமயத்தைத் தழுவியமை
    * அரசன் புத்தபிக்குகளுக்குத் துன்பம் இழைத்தமை
    * சீதாவாக்கை இராசதானிக்குப் பொறுப்பான ஒருவர் இல்லாமை.

## மலையக இராச்சியத்துடனான தொடர்பு

- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தரும் போது மலையகம் சுதந்திரமான இராச்சியமாக விளங்கியமை.
- மலையக அரசனான ஜயவீர பண்டார என்பவன் சீதாவாக்கை அரசனான மாயதுன்னையிடமிருந்து மலையகத்துக்கு ஏற்படுத்தப்படும் பயமுறுத்தல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக போர்த்துக்கேயரின் உதவியைப் பெற்றான். இதனால் போர்த்துக்கேயரின் முதலாவது படையணி 1542 இல் மலையகத்தை வந்தடைந்தது.



9. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலையக ஆட்சியாளன் கரலியத்த பண்டார 1 ஆம் இராஜசிங்கனின் அச்சுறுத்தலில் இருந்து தப்புவதற்கு போர்த்துக்கேயரின் உதவியை நாடல்.
  அதன்படி கத்தோலிக்க சமயத்தை தழுவுவதற்கு இணங்கியமை.
- 1582 இல் 1 ஆம் இராஜசிங்கன் மலையத்தை ஆக்கிரமித்த சமயத்தில் மலையகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்து கரலியத்த பண்டார குசுமாசன தேவி, யமசிங்க பண்டார ஆகியோர் போர்த்துக்கேயரின் பாதுகாப்பை நாடினர்.
- 1 ஆம் இராசசிங்கன் வீர சுந்தர முதலியைக் கொலை செய்ததன் பின் அவளின் மகன் கோனப்பு பண்டார போர்த்துக்கேயரின் பாதுகாப்பை நாடியமை.
- போர்த்துக்கேயரிடம் சரணடைந்தவர்கள் அங்கு ஞானஸ்தானம் பெற்றனர்.
  - யமசிங்க பண்டார - தொன் பிலிப்
  - குசுமாசன தேவி - தொனாகதரினா
  - கோனப்பு பண்டார - தொன் யுவான்
- கோனப்பு பண்டாரவின் தலைமையில் போர்த்துக்கேயரின் படையொன்றை அனுப்பி தொன் பிலிப்பை மலையக அரசனாக நியமித்தமை.
- 1 ஆம் இராசசிங்கன் கனேதன்ன எனுமிடத்தில் தோல்வியடைந்தமை.
- தொன் பிலிப்பைக் கொன்று கோணப்பு பண்டார 1592 இல் 1 ஆம் விமலதர்மசூரிய என்னும் பெயரில் மலையகத்திற்கு அரசனானான்.
- மலையகத்தின் அரசனான போது 1ம் விமலதர்மசூரிய போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைப் பின் பற்றினான்.
- 1594 இல் குசுமாசன தேவியை மலையகத்தின் அரசியாக நியமிக்கும் பொருட்டு பேரோ லாஞ்ஜஸ்த சூசா மலையகத்தை ஆக்கிரமித்தான்.
- 1594 இல் தந்துரைக் கிளர்ச்சியில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்தனர்.
- 1 ஆம் விமலதர்மசூரிய தொன் கதரினாவை விவாகம் செய்து கொண்டு மலையகத்தின் ஆட்சியாளனாக தன்னை உறுதிப்படுத்திக் கொண்டான்.
- 1 ஆம் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயரை விரட்டியடிப்பதற்கு உதவி பெறுவதற்காக 1602 இல் ஒல்லாந்தரான ஜோரிஸ்வான் ஸ்பீல்பர்ஜனை ஏற்றுக் கொண்டான்.
- 1602 இல் தொன் பெரனிமோத அஸ்வேசதுவின் தலைமையின் கீழ் மலையகத்தை ஆக்கிரமிக்க வந்த படையினர் பலன எனும் இடத்தில் தோல்வியடைந்தனர்.
- 1630 இல் கொன்ஸ்தாந்தின் - டீ - சூசா தலைமையின் போர்த்துக்கேயர் மலையகத்தைத் தாக்கினர்.
- ஊவா ரன்தெனிவெல கிளர்ச்சியில் மகா அஸ்தான என்பவனிடமிருந்து போர்த்துக்கேயர் தோல்வியடைந்தனர்.
- 1635 இல் இளவரசன் மகா அஸ்தான இரண்டாம் இராஜசிங்கன் எனும் பெயரில் மலையத்தின் ஆட்சியாளனாக நியமிக்கப்பட்டான்.
- இரண்டாம் இராஜசிங்கன் 1638 இல் போர்த்துக்கேயரைத் துரத்தியடிப்பதற்கு அத்மிரால் வெஸ்டர்வோல்ட் எனும் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டான்.
- இரண்டம் இராஜ சிங்கன் 1638 இல் ஒல்லாந்தரை வரவேற்பதற்கு இருந்தபோது அதனை எதிர்ப்பதற்கு தியொகோதமெலோ கஸ்ரோ என்பவன் மலையகத்தை ஆக்கிரமிக்க எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.
- இதன் பின் போர்த்துக்கேயர் மலையகத்தை ஆக்கிரமித்தனர்.
- இரண்டாம் இராஜ சிங்கன் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கை ஒன்றைப் பின்பற்றியதுடன் 1638 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி 1658 இல் ஒல்லாந்தரினது உதவியுடன் போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து விரட்டியடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.3.4 போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்பு

- 1215 இல் பொலன்னறுவை இராசதானியின் மீது கலிங் மாகனின் ஆக்கிரமிப்பால் சிங்கள இராசதானி தென் மேற்கு நோக்கி புலம் பெயரத் தொடங்கியமை.
- இலங்கையின் வட பிரதேசம் சுதந்திரமான ஆட்சியமைப்புடன் காணப்பட்டது.
- கோட்டை அரசனான VI ம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் சபுமல்குமார இளவரசன் யாழ்ப்பாணப் பிரதேசத்தை கோட்டையுடன் இணைத்துக் கொண்டமை.
- VI ஆம் பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின்பின் 1469 இல் சபுமல் இளவரசன் கோட்டை இராசதானிக்கு வரும் வரை யாழ்ப்பாண இரச்சியம் ஒரு சுதந்திரமான இராச்சியமாக விளங்கியது.
- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது யாழ்ப்பாணத்தை பரராசசேகரன் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.
- 1519 இல் சங்கிலியன் (குமாரன்) பரராசசேகரனை கொன்று விட்டு ஆட்சிபீடமேறினான்.
- ஆட்சியின் உரிமையைப் பெற்றிருந்த பிரதாபசிங்கன் போர்த்துக்கேயரிடம் தப்பிச் சென்றான்.
- 1543 இல் 1 ஆம் சங்கிலியனுக்கு எதிராக போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டமை.
- கப்பம் கொடுப்பதற்கும் சமய நடவடிக்கைகளுக்கும் சங்கிலியன் இடமளித்ததால் மறுபடியும் அவனுக்கு ஆட்சி உரிமையானது.
- சங்கிலியனுடன் போர்த்துக்கேயர் செய்து கொண்ட உடன்பாட்டினால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் கத்தோலிக்க சமயத்தை பரப்பினார்.
- இந்து பக்தர்களின் வேண்டுதலின்படி சங்கிலியன் கத்தோலிக்க சமயத்துக்கு எதிராக செயற்படத் தொடங்கினான்.
- மீண்டும் இந்து சமயத்தைத் தழுவிக் கொள்ள மறுத்த 600 கத்தோலிக்கர்களை மன்னாரில் கொன்றான்.
- 1561 இல் சங்கிலியின் செயல்களுக்கு எதிராக கொன்தாந்து டீ பிரகன்சா என்பவன் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தமை.
- போர்த்துக்கேயருடன் இணங்கிய சங்கிலியனுக்கு கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கும் வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மீண்டும் இணங்கினான்.
- சங்கிலியனின் கொடூரமான ஆட்சியை விரும்பாத மக்கள் அவனுடைய மகன் பிரவிராஜன் பண்டாரம் என்பவனை ஆட்சியாளனாக நியமித்தனர்.
- போர்த்துக்கேயர்களின் விரோதியாக இருந்த பிரவிராஜன் பண்டாரம் போர்த்துக்கேயருக்கு எதிராக கள்ளிக் கோட்டை முஸ்லிம்களின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்தான்.
- 1591 இல் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த போர்த்துக்கேய சேனாதிபதி அரசனைக் கொன்று யாழ்ப்பாணத்தைக் கொள்ளையடித்தான்.
- 1591 இல் போர்த்துக்கேய அரசனின் ஆணையை ஏற்றுக் கொண்ட எதிர் மன்ன சிங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.
- 1615இல் எதிரிமான சிங்கம் மன்னின் மரணத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் நடவடிக்கைகள் குழப்பமடைந்து காணப்பட்டன.
- 1617 இல் பிலிப் டி ஒளிவேராவின் தலைமையில் போர்த்துக்கேயர் படையொன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது.
- 1621 இல் நல்லூர் ஒப்பந்தத்தின்படி யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரின் கீழ் வந்தது.
- யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளர்களுக்கிடையில் காணப்பட்ட குழப்ப நிலை போர்த்துக்கேயருக்குத் தங்கள் ஆட்சியைப் பலப்படுத்த உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.3.5 போர்த்துக்கேயரின் நிருவாக, சமூக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகள்

### நிர்வாகம்

- தங்களது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போர்த்துக்கேயர் தேசிய நிர்வாகத் திட்டங்களை மேற்கொண்டார்கள்.
- கோட்டை இராசதானியும, யாழ்ப்பாண இராசதானியும் போர்த்துக்கேயரின் கீழ் வந்த போதிலும் நிர்வாக நடவடிக்கைகள் பெரும்பாலும் தலை நகருக்கு அண்மித்த பிரதேசத்துக்கும், கரையோரப் பிரதேசத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது.
- ஏனைய பிரதேசங்களின் நிர்வாகக் கட்டமைப்பு தேசிய அதிகாரிகளின் (நிர்வாகிகள்) கீழ் செயற்பட்டு வந்தன.
- நிர்வாகத்தின் உயர் பதவிகள் போர்த்துக்கேயரிடமும் ஏனைய பதவிகள் தேசியத் தலைவர்களின் கீழும் இருந்தது.

***போர்த்துக்கேய கபிதான் ஜெனரல்***

⇓

***கபிதான் மேஜர்***
***(கோட்டைக்குப் பொறுப்பான அதிகாரி)***

⇓

***திஸாவை - திஸாவானி***

⇓

***கோறளை - கோறளைக்குப் பொறுப்பான***

⇓

***அத்துக்கோறளை - பற்றுக்குப் பொறப்பான***

⇓

***கம்முலாதான - கிராமம்***
***(கிராம விதானி)***

- விடோர் டி செண்டா - வருமானம் தொடர்பான நடவடிக்கைகள்
- ஒவிடோர் - நீதி தொடர்பான நடவடிக்கைகள்
- போர்த்துக்கேயர் தமது நிர்வாக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு சமயத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார நடவடிக்கைகள்

- போர்த்துக்கேயர் காலத்தில் வியாபாரம் முக்கியத்தும் பெற்றிருந்த போதிலும் விவசாயம் இந்நாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கையாகக் காணப்பட்டது.
- போர்த்துக்கேயர் மோசமான நிர்வாகிகளாகவும் சிறந்த வியாபாரிகளாகவும் இருந்தார்கள்.
- கீழ்த்திசை நாடுகளின் வியாபார பலத்தை தன் வயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கங்கொண்டவர்களாக இருந்தார்கள்.
- கறுவா, ஏலக்காய், கராம்பு, கமுகு, யானைத்தந்தம், முத்து, மாணிக்கம் என்பன பிரதான வர்த்தகப் பொருட்களாகக் காணப்பட்டன.

## சமூக, கலாசார நடவடிக்கைகள்

- இலங்கையின் சமூகங்களுடக்கிடையில் இருந்த ஒற்றுமை பின்னடைந்து விளங்கியமை.
- ரோமன் கதோலிக்க சமயம் அறிமுகப்படுத்தப்படல்.
- ரோமன் கத்தோலிக்க ஆலயங்களினூடாக கிறிஸ்தவக்கல்வி போதிக்கப்படல்.
- போர்த்துக்கேயரின் பெயர்கள் இந்நாட்டில் உபயோகிக்கப்பட்டமை.
  உ-ம்: சில்வா, பெரேரா, பெர்ணாந்து, கொஸ்தா
- போர்த்துக்கேயரின் மொழிப் பயன்பாட்டுக்கு வந்தமை.
  உ-ம்: அலுமாரி, லாச்சி, கக்கூசு
- போர்த்துக்கேயர் பயன்படுத்திய உணவுப் பொருட்களின் பெயர்கள்.
  உ-ம்: பாண், கேக், அச்சாறு, சம்பல்
- போர்த்துக்கேயரின் பழக்க வழக்கங்கள்
  உ-ம்: விருந்து உபசாரம் இருந்தமை.
- போர்த்துக்கேயரினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆடைகளின் பெயர்கள்
  உ-ம்: களிசான், கம்பாயம், மேஸ்
- திருமணம் உறுதி செய்யப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.3.1** : இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரணை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : ஐரோப்பியர் கீழைத்தேசத்துக்கு வருவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தேடியறிவார்.

**செயற்பாடு** : ஐரோப்பியரின் கீழைத்தேச வருகை

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.3.1.1 பாடல்
- இணைப்பு 8.3.1.2 - செயற்பாட்டுப்பத்திரம்
- உலக தேசப்படப்புத்தகம்
- உலக மாதிரித் தேசப்படம்
- பெல்ட் பேனை
- ஏனைய மூலாதாரங்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.1.1** :

- இணைப்பு 8.3.1.1 இல் உள்ள பாடலை வகுப்பறையில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக. பாடலினூடாகப் பின்வரும் வினாக்களை வகுப்பறையில் முன்வையுங்கள்.
  1. இப்பாடலிலே குறிப்பிடப்படுவது எந்நாட்டில் இருந்து வந்தவர்கள் பற்றியதாகும்?
  2. அந்நாட்டின் தலை நகரம் எது?

  உலகப் படத்தினூடாக அந்நாட்டையும், அதன் தலைநகரத்தையும் காட்டுக. பின்வரும் காரணிகள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலை நடாத்துங்கள்.

- போர்த்துக்கேயரின் தாய்நாடு போர்த்துக்கல் என்பது.
- அதன் தலைநகரம் லிஸ்பன் ஆகும்.
- 1498 இல் வாஸ் கொடகாமா எனும் போர்த்துக்கேயக் கடலோடி இந்தியாவுக்கு வந்தமை.
- 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமை.
- 17 ஆம் நூற்றாண்டளவில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் கீழைத்தேச நாடுகளுக்கு வந்தமை.
- இவர்கள் கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்கான காரணங்கள் பல இருந்தமை.

(15 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 8.3.1.2** :

- வகுப்பறையைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
- இணைப்பு 8.3.1.2 இனது செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தில் உரிய தகவல்களை எழுதுவதற்கு அவகாசம் அளியுங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் செயற்பாட்டை முழுமைப்படுத்துவதற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் மேற்கொள்ளுங்கள்.

(25 நிமிடங்கள்)

**படி 8.3.1.3** :

- ஒவ்வொரு குழுவுக்கும் தத்தமது ஆக்கங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- முன்வைக்கப்பட்ட தகவல்கள் பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கு குழுவில் உள்ள ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்குகங்கள்.
- முன்வைக்கப்பட்ட தகவல்கள் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஏனைய குழுக்களுக்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.

பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- ஐரோப்பியர்கள் முஸ்லிம்களினால் கீழைத்தேச நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட வாசனைத் திரவியங்களைப் பெற்றுக் கொள்வதில் பழக்கப்பட்டிருந்தமை.
- சிலுவைப் போரின் விளைவு பற்றி 1453 இல் கொன்ஸ்தாந்து நோபிள் முஸ்லிம்கள் வசமானமை.
- இதனால் கீழைத்தேச நாடுகளில் இந்து கொண்டு வரப்பட்ட வியாபாரப் பொருட்களைப் பெறுவதில் ஐரோப்பியர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை.
- கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்குப் புதிய வர்த்தக மார்க்கங்களைத் தேடுவதில் ஐரோப்பியர்கள் முயற்சி எடுத்தமை.
- அதன் பெறுபேறாக போர்த்துக்கேயர் புதிய கடல் மார்க்கம் ஒன்றைக் கண்டுபிடித்து அதனூடாகக் கீழைத் தேசங்களுக்கு வருவதில் வெற்றிகண்டனர்.
- 1498 இல் வாஸ்கொடகாமா இந்தியாவுக்கு வந்தமை. அதன் பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் அத்தகைய புதிய கடல் மார்க்கமாகவே கீழைத்தேச நாடுகளுக்கு வந்தமை.
- வர்த்தகம் செய்வதும் சமயத்தைப் பரப்புவதுமே கீழைத்தேச நாடுகளுக்கு அவர்கள் வருவதற்கான பிரதான நோக்கங்களாகும்.
- பிற்காலத்தில் குடியேற்ற நாடுகளாக அவற்றை வைத்துக் கொள்வதில் ஐரோப்பியர்களுக்கிடையில் போட்டி நிலவியமை இதன் பிதான நோக்கமாக இருந்தது.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஐரோப்பியர் கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்கான காரணங்களை விளக்குவார்.
- ஐரோப்பியர்களின் வருகையால் கீழைத்தேச நாடுகளின் சமூக, கலாசாரத் துறையில் மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளில் அவர்கள் வந்த பிரதேசங்களின் போக்குவரத்து மார்க்கங்களைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- மூலாதாரங்களில் இருந்து தகவல்களைத் திரட்டும் திறனைப் பெறுவார்.
- சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறனைப் பெறுவார்.

## இணைப்பு 8.3.1.1

**பாடல்**

போர்த்துக் கீசுக் காரராம்
நாடுபிடிக்கும் சூரராம்
பாரே நடுங்கும் வீரராம்
எதிரிகளின் எமனுமாம்

லிஸ்பன் நகரில் இருந்துவே
கொழும்பிற்கு வந்ததாம்
நாம் வந்த பாதையில்
மகிழ்ச்சி எங்கும் பரவுமாம்

உண்ண உண்ண கெட்டியாம்
குடிக்க அதிலும் கெட்டியாம்
எதிரிகளை கொன்று தீர்க்க
மிகவும் கெட்டியாம்

எங்கள் துப்பாக்கி என்றும்
உயர்ந்த துப்பாக்கி
பகைவரைக் பறக்கச் செய்யும்
பண்டம் துப்பாக்கி

***(போர்த்துக்கீசு)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.3.1.2

# செயற்பாட்டுப்பத்திரம்

### குழு 1

- வழங்கப்பட்டுள்ள உலப் புறவுருவப்படத்தில் பின்வரும் ஐரோப்பிய நாடுகளை வர்ணமிட்டுப் பெயரிடுக.
  - போர்த்துக்கேயரின் தாய் நாடான போர்த்துக்கல்
  - பிரான்சியரின் தாய் நாடான பிரான்சு
  - ஒல்லாந்தரின் தாய் நாடான ஒல்லாந்து (நெதர்லாந்து)
  - ஆங்கிலேயர்களின் தாய் நாடான பிரித்தானியா
- பெயர் குறிப்பிடப்பட்ட தேசப்பத்தினூடாக ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளுக்கு வந்த பிரதேசங்கள் பற்றி விளக்கமளிப்பார்.

### குழு 2

- ஐரோப்பியர்கள் கொந்ஸ்தாந்திநோபிள் நகர் ஊடாக கீழைத்தேச நாடுகளுக்கு வந்த மார்க்கத்தை உலகப் புறவுருவப்படத்தில் வரைந்து காட்டுக.
- பிற்பட்ட காலத்தில் இம்மார்க்கத்தினூடாக கீழைத்தேச நாடுகளுக்கு வர முடியாமைக்கான காரணியை விளக்குக. (மேற்குக் கிழக்கு நாடுகளைத் தொடர்பு படுத்திய மார்க்கமான கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்தின் முக்கியத்துவம்)

### குழு 3

- பின்வருவோர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட நவீன கடற்போக்கவரத்து மார்க்கங்களை உலகப்புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
  - வாஸ்கொடகாமா
  - கிறிஸ்தோபர் கொலம்பஸ்
  - பேர்டினன் மகலன்
  - ஆங்கிலேயர்களின் தாய் நாடான பிரித்தானியா
- புதிய கடல் மார்க்கங்களைக் கண்டுபிடிப்பதில் இவர்களின் பங்களிப்பைப் பற்றி விளக்கமளிக்குக.

### குழு 4

- ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளுக்க வருவதற்காக புதிய கடல் மார்க்கங்களைத் தேடுவதில் எடுத்த எத்தனிப்புக்களுக்கான காரணங்களைத் தருக.
- பின்வரும் வர்த்தக மத்திய நிலையங்களை உலக புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| போர்த்துக்கேயரின் கீழைத்தேச மத்திய நிலையம் | - | கோவா |
| ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையம் | - | பத்தேவியா |
| பிரான்சியரின் கீழைத்தேச மத்திய நிலையம் | - | பாண்டிச்சேரி |
| ஆங்கிலேயரின் கீழைத்தேச மத்திய நிலையம் | - | கல்கத்தா |



10. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.3.2** : இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரணை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்டவர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தைப் போர்த்துக்கேயரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விசாரணை செய்வார்.

**செயற்பாடு** : பறங்கியரும் கோட்டையும்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.3.2.1 போர்த்துக்கேயர் பற்றிய வாசகத்தைக் காட்டும் அட்டைகள்
- இணைப்பு 8.3.2.2 - குழு ஒனப்படைப்பத்திரம்
- பாடநூல்
- இலங்கை வரலாறு (சிங்கள மொழி மூலம்) தொகுதி III கல்வி வெளியீட்டுப் பிரிவு

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.2.1** :

- இணைப்பு 8.3.2.1 இற்குரிய வாசகத்தை வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள்.
- பறங்கியர் என்போர் எவ்வினத்தவர்கள்? அவர்கள் எந்நாட்டில் இருந்து வந்தனர்?
- பறங்கியர்கள் அரசனை சந்திக்கச் சென்ற நகரம் எது? ஆகிய வினாக்களை வினவவும்.
- பாடநூலின் துணையுடன் பின்வரும் கருத்துக்கள் வெளிக் கொணரப்படும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

> - 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இராசதானிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தமை (கோட்டை, மலையகம், யாழ்ப்பாணம்)
> - இராசதானிகள் மூன்றிலும் பலம் மிக்க இராசதானியாக கோட்டை இராசதானி விளங்கியமை.
> - VIII வீர பராக்கிரமபாகுமன்னன் அச்சந்தர்ப்பத்தில் கோட்டைக்குப் பொறுப்பாக இருந்தமை.
> - போர்த்துக்கேயர் வர்த்தக நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு கோட்டை மன்னனுடன் நட்புக் கொண்டிருந்தமை.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 8.3.2.2** :

- வினாக்கள் தொடுக்கும்வேலைகளுக்குப் பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகக்குக.
- குழுத்தலைவரையும் நியமித்துக் கொள்க.
- தேவையான புத்தகங்களை மாணவர்களிடம் ஒப்படையுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தின்படி வினாக்களை அமைப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்களினூடாக வேலைத்திட்டம் தொடர்பாக பொருத்தமான வினாக்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 8.3.2.3** :

- ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் வினாக்களை வினவும் வேலைத்திட்டத்தைச் செய்விக்குக.
- வேலைத்திட்டத்தினூடாக மாணவர்களின் இயலுமை, இயலாமைகளை இனங்காண்க.
- மாணவர்களால் முன்வைக்கப்படாத கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.
- போர்த்துக்கேயர் தமது வர்த்தக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கொழும்பில் வர்த்தகக் கோட்டை ஒன்றை அமைத்தனர்.
- 1521 இல் விஜயபாகு கொள்ளையினால் கோட்டை இராச்சியம் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டமை.
- 1526 இல் VII ஆம் விஜயபாகு மன்னன் முஸ்லிங்களை கோட்டை இராசதானியில் இருந்து ஒதுக்கியமை.
- முஸ்லிம்கள் கோடடை இராசதானியில் இருந்து ஒதுக்கப்பட்டதற்கு எதிராக 1537 இல் கள்ளிக்கோட்டை சமோரினின் உதவியைப் பெற்று கோட்டை இராசதானியை தாக்கியமை.
- VII ஆம் புவனேகபாகு மன்னன் தமது பேரப்பிள்ளையை ஆட்சிப் பொறுப்பிற்காக தெரிவு செய்தமை.
- 1543 இல் போர்த்துக்கீச மன்னன் தர்மபால இளவரசனின் தங்கச் சிலைக்கு முடிசூட்டியமை.
- ரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு சமயத் தலைவர்கள் இலங்கைக்கு வந்தமை.
- 1551 இல் VII ஆம் புவனேகபாகு மன்னன் இறந்தமை.
- 1557 இல் தர்மபால அரசன் தொன்யுவான் தர்மபால என்னும் பெயரில் ஞானஸ்தானம் பெற்றமை.
- 1562 இல் முல்லேரியாக் கிளர்ச்சியில் போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1565 இல் போர்த்துக்கேயர் கோட்டை இராசதானியைக் கைவிட்டு விட்டு தர்மபால மன்னனுடன் கொழும்புக் கோட்டைக்கு ஓடினான்.
- 1587 இல் தர்மபால மன்னன் நன்கொடை உறுதியொன்றின் இராச்சியத்தை போர்த்துக்கேயருக்கு ஒப்படைத்தான்.
- 1597 இல் தர்மபால மன்னன் மரணத்தைத் தொடர்ந்து நன்கொடை உறுதியின்படி கோட்டை இராசதானி போர்த்துக்கேயரின் வசமானது.
- கோட்டை இராசதானியில் அரச குடும்பங்களுக் கிடையில் காணப்பட்ட ஒற்றுமையின்மை போர்த்துக்கேயரினால் கோட்டை இராசதானியைக் கைப்பற்றிக் கொள்ள வாய்ப்பாக இருந்தது.

(40 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- போர்த்துக்கேயர் தந்திரமான முறையில் கோட்டையை தமதாக்கிக் கொண்ட முறையை விளக்குவார்.
- அரச குடும்ப இளவரசர்களுக்கு இடையில் விளங்கிய ஒற்றுமையீனம் கோட்டை இராசதானி போர்த்துக்கேயர் வசமாவதற்குக் காரணமாயின என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பிழையற்ற முறையில் வினாக்கள் அமைப்பதற்குப் பழக்கப்படுவார்.
- குழு ஒருமைப்பாட்டினூடாக ஒத்துழைப்புடன் வேலை செய்யும் ஆற்றலைப் பெறுவார்.
- வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெறுவார்.

**பின்வேலை :**

விஜயபாகு கொள்ளையின் பின் இலங்கையின் அரசியல் பிரிவுகளை தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

## இணைப்பு 8.3.2.1

**"பறங்கியர் கோட்டை சென்றது போல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 8.3.2.2**

## மாணவர் ஒப்படைப்பத்திரம்

- உங்கள் குழுவுக்கு ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்க.
- வினாக்கள் அமைக்கும் முறைக்காக போர்த்துக்கேயருக்கும் கோட்டை இராசதானிக்கும் இடையில் தொடர்புகள் எனும் தலைப்பில் வினாக்களை அமைக்குக. (பாடநூல்களினதும், ஏனைய மூலாதாரங்களினதும் துணையுடன்)
- ஒவ்வொரு வினாவிற்கம் பொருத்தமான விடைகளை அவ்வப்போதே எழுதுக.
- அனைத்து மாணவர்களையும் வினா உருவாக்க வழிப்படுத்துக.
- குழுத்தலைவரின் ஆலோசனைப்படி வினாக்களை ஒழுங்குபடுத்துக.
- ஒவ்வொரு குழுவும் குறைந்தபட்சம் 20 வினாக்கள் தயாரிக்க வழிநடத்துக.
- வினாவை உருவாக்கிய மாணவருக்கு அவ்வினாவை வினவும் சந்தர்ப்பத்தை வழங்குக.
- புள்ளி வழங்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொள்க.
- புள்ளிகள் மதிப்பீட்டுக்காக இரு குழுக்களில் இருந்தும் இருவர் வீதம் தெரிவு செய்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.4 இலங்கையும் ஒல்லாந்தரும்

**அறிமுகம்** **10 பாடவேளைகள்**

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்த முதலாவது ஐரோப்பிய இனத்தவர் போர்த்துக்கேயராவர். கி.பி. 405 ம் ஆண்டிலிருந்து சுமார் 150 வருடங்களாக அவர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கததை நிலைநாட்டியிருந்தார்.

பலம் வாய்ந்த சிங்கள மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் குறைவாகவும் பலவீனமான அரசாட்சிக் காலத்தில் அதிகமாகவும் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து வந்த போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றியது இன்னுமொரு ஐரோப்பிய இனத்தவரான ஒல்லாந்தரின் உதவியுடனாகும். சிங்கள மன்னர்களின் பலவீனங்களைப் புரிந்து கொண்ட ஒல்லாந்தர் அவற்றைத் தமது சுய இலாபத்தின் பொருட்டு பயன்படுத்தி 150 வருடங்களாக இலங்கையின் கரையோரப்பகுதிகளில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டனர்.

கீழைத் தேசங்களுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான வாசனைத்திரவிய வர்த்தகத்தைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றுவதற்கு எண்ணிய ஒல்லாந்தர் பத்தேவியாவைத் தமது தலைமையகமாகக் கொண்டு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர். இலங்கை அரசர்களின் உதவியுடன் கரையோரப்பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

சிங்கள மன்னர்களுடன் போர்த்துக்கேயர் கடைப்பிடித்த ஆக்கிரமிப்புக் கொள்கையை விட மாற்றமான தந்திர நட்புக் கொள்கையொன்றை ஒல்லாந்தர் இலங்கையில் கடைப்பிடித்தனர். பொருளாதார ரீதியில் உச்சப் பயனை அடையும் வகையிலேயே அவர்கள் செயற்பட்டுள்ளனர் என்பதை மலையக இராச்சியத்துடன் அவர்கள் வைத்திருந்த தொடர்புகள் மூலம் அறியலாம்.

போர்த்துக்கேயரை விட கடற்படைப்பலம் கொண்ட ஒல்லாந்தருடன் கண்டி மன்னர்கள் அடிக்கடி முரண்பட்டுக் கொண்டாலும் அவர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்றும் சக்தியற்றவர்களாகவே காணப்பட்டனர். எனவே அவர்களும் அதிகமான சந்தர்ப்பங்களில் ஒல்லாந்தருடன் நட்பறவு பாராட்டி வந்தமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இக்காலக் கட்டத்தில் ஏற்றுமதி, இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறை இலங்கையில் வளர்ச்சி கண்டதுடன் கரையோர நிர்வாகம் முற்று முழுதும் ஒல்லாந்தர் மயப்படுத்தப்பட்டது.

அதே போன்ற இலங்கையின் தேசிய சமூக கலாசாரத்துறைகளில் போர்த்துக்கேயர் காலத்தில் ஏற்படத் தொடங்கிய மாற்றம் ஒல்லாந்தர் காலத்தில் மேலும் தொடர்ந்தது.

அதன்படி ஐரோப்பியரின் அதிகார விரிவாக்கத்துடன் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை ஆராய்வதற்கு உதவும் முகமாக இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் ஒல்லாந்தரின் அதிகாரப் பரவல், மற்றும் கண்டி இராச்சியத்துடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புகள், அவர்களின் செயற்பாடுகள் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டிலேற்பட்ட அரசியல், சமூக, கலாசார செல்வாக்குகள் என்பன பற்றிய தெளிவான விளக்கத்தை மாணவர் பெற்றுக் கொள்வதே இவ்வத்தியாயத்தைக் கற்பதன் நோக்கமாகும்.

**தேர்ச்சி :-**

இலங்கையில் ஐரோப்பியரின் அதிகாரப் பரவலுடன் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களை விசாரனை செய்வதுடன் தமது நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்து சக்தி மிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டங்கள் :-**

- ஐரோப்பியர் கீழைத்தேசத்துக்கு வருவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தேடியறிவார்.
- ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்டவர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தை ஒல்லாந்தரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விளக்குவார்.
- ஒல்லாந்தர் ஆட்சியிலே இலங்கையின் கரையோரப் பகுதியில் நிலவிய பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்வார்.

**விடய உள்ளடக்கம் :-**

## 8.4 இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தர் தமது அதிகாரத்தை நிலை நாட்டல்.

### 8.4.1 ஒல்லாந்தர் வரும்போது இலங்கையின் அரசியல் பின்னணி:

- இலங்கையின் நிர்வாகம் இரு அலகுகளாகத் திகழ்ந்தமை
  - * கண்டி இராச்சியம் சுதந்திர இராச்சியமாகத் திகழ்ந்தமை
  - * கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் இருந்தமை.
- கண்டி இராச்சியத்தின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக போர்த்துக்கேயர் அடிக்கடி கண்டி மீது ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வந்தனர்.
- முதலாம் விமலதர்ம சூரியன், இரண்டாம் இராஜசிங்கன் ஆகிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயப் படையெடுப்புகள் அதிகமாக நிகழ்ந்தன.
- போர்த்துக்கேயரை விரட்டியடிப்பது கண்டி அரசர்களின் நோக்கமாக இருந்தது. அதனால் கடற்படைப்பலம் உள்ள மற்றுமொரு நாட்டின் துணை தேவைப்பட்டது.
- இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை அரசியலில் தலையிடுவதற்கான பின்னணி ஒல்லாந்தருக்கு எற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

**ஒல்லாந்தரின் இலங்கை வருகை:-**

- இலங்கையோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக இலங்கை வந்த ஸ்பில்பேஜன், சீபோல் த சார்ட் ஆகியோரின் பயணங்கள் தோல்வியல் முடிந்தன.
- இரண்டாம் இராஜசிங்க மன்னின் ஆட்சிக் காலத்தில் 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.
- இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில்:
  - * போர்த்துக்கேயரை விரட்டுவதற்கான யுத்தச் செலவைக் கண்டி மன்னன் பொறுப்பேற்றல்.
  - * கைப்பற்றப்படும் கோட்டைகளின் உரிமை மன்னனைச் சேரும்.
  - * இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உரிமையை ஒல்லாந்தரிடம் கையளித்தல். அரசன் விரும்பினால் மட்டும் கோட்டைகளைப் பாதுகாப்பதற்காக ஒல்லாந்தர் கோட்டைகளில் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒப்பந்தத்தின் பின்னர் 1639 இல் ஒல்லாந்தர் திருகோணமலை, மட்டக்களப்புக் கோட்டைகளைக் கைப்பற்றினர்.

| | | |
|---|---|---|
| 1640 | - | காலிக்கோட்டை |
| 1652 | - | களுத்துறை, அங்குருவாதொட்ட கோட்டைகள் |
| 1656 | - | கொழும்புக் கோட்டை |
| 1658 | - | மன்னார், யாழ்ப்பாணக் கோட்டைகள் |
| 1659 | - | கற்பிட்டிக் கோட்டை |

- என்பன கைப்பற்றப்பட்டதன் மூலம் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர் வசமாகின.

## 8.4.2 ஒல்லாந்தருக்கும் கண்டி இராச்சியத்திற்குமிடையிலான தொடர்பு:

- போர்த்துக்கேயரைப் போலல்லாது ஒல்லாந்தர் கண்டியுடன் சமாதானப் போக்கிலே நடந்து கொண்டனர்.
- ஒல்லாந்தரின் கொள்கை போர்களைத் தவிர்த்து தமது இலாபத்தைப் பெருக்கிக் கொள்வதாகும்.
- எனவே அரசியல் நடவடிக்கைகளில் ஒல்லாந்தர் சிங்கள மன்னனுக்குச் சார்பாகவே நடந்து கொண்டனர்.
- என்றாலும் ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசங்களின் உரிமையை மன்னனுக்கு விட்டுக் கொடுக்காத வகையில் நடந்து கொண்டனர்.
- 'யுத்தச் செலவுகளைத் தந்த பின்னர் கோட்டைகள் அரசனுக்குச் சொந்தமாகும்' எனும் வாசகம் ஒப்பந்தத்தில் கூறப்பட்டாலும் ஒலலாந்தர் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.
- ஆயினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசனுக்கு மரியாதை செலுத்தி அவெனது மனதை வெல்வதற்கு ஒல்லாந்தர் முயற்சித்தினர்.

  உ-ம் : பர்மாவிலிருந்து உபசம்பதா சடங்கைச் செய்தவற்கான பிக்குமார் வருவதற்கு ஒல்லாந்தர் கப்பலை வழங்கி உதவினர்.
- மலையக இராச்சிய எல்லையில் அமைந்திருந்த பிட்டிகல் கோறனையில் கறுவலாவைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை மன்னன் ஒல்லாந்தருக்கு வழங்கியமை ஒரு நல்லுறவுச் செயற்பாடாகும்.
- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் 1765 இல் கற்பிட்டித் துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சித்த போது ஒல்லாந்த ஆளுநர் அரசனுடன் மோதலைத் தவிர்த்து கற்பிட்டி, கொட்டியாரம், திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய துறைமுகங்களை மன்னமிடம் கையளித்தான்.
- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் காலத்தில் இரு பகுதியினரும் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து கொள்ள முயற்சித்தனர்.
- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனின் ஆட்சிக் காலத்துக்கு முன்னைய அரசர்கள் ஒல்லாந்தரை விரட்டுவதற்கு முயற்சித்தாலும் அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.
- ஒல்லாந்தரை இலங்கையை விட்டுத் துரத்த முடியாத நிலையில் கண்டி ஆட்சியாளர்கள் அப்பிரதேசங்களில் மலையக மக்கள் மூலம் ஒல்லாந்தருக்கு எதிரான கிளர்ச்சிகளை மேற்கொண்டு, கரையோர மக்களை மலையகத்திற் குடியேறுவதற்கு அனுமதித்து அப்பிரதேசங்களை மக்கள் வாழாத சூனியப் பிரதேசங்களாக மாற்றவதற்கு முயற்சித்தனர்.
- வான் - இம் - ஹோப் ஆளுனர் தனது காலப்பகுதியில் அரசனுடன் நட்புறவுடன் செயற்பட்டான்.
- ஸ்ரீ விஜய ராஜசிங்க மன்னன் ஒல்லாந்தர் உனதவியுடன் சீயம் நாட்டுக்கு ஒரு பௌத்த தூதுக்குழுவை அனுப்பினான்.



11. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கி.பி 1766 ம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினால் இரு தரப்பு உறவும் பாதிக்கப்பட்டது.
- 'மலையக இராச்சியம் ஒல்லாந்தரின் கரையோர இராச்சியத்தால் சூழப்பட்டதாகும்' என்ற வாசகம் அந்த ஒப்பந்தத்தில் எழுதப்பட்டமையே உறவு பாதிக்கப்படக் காரணமாயிற்று.

### 8.4.3 ஒல்லாந்தரின் கீழ் நிர்வாக, பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள்:

- நிர்வாக நடவடிக்கைகள்:
    * கொமாண்டரி முறை ஆரம்பமாதல். (கொழும்பு, காலி, யாழ்ப்பாணம்)
    * நிர்வாகம் தொடர்பான அதி உயர் பீடமாக கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் பணிப்பாளர் சபையே செயற்பட்டது.
    * அது ஒல்லாந்தின் ஹேக் நகரில் காணப்பட்டது.
    * கீழைத்தேச நிர்வாக மத்திய நிலையமாக பத்தேவியாவில் ஆளுநரின் பணிப்பாளர் சபை செய்யப்பட்டது.
    * கோட்டைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு உதவியாக தனியானதொரு ஆலோசனைச் சபை செயற்பட்டது.
    * இலங்கைக் கரையோர நிர்வாகத்திற்கு சிங்கள அதிகாரிகளின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.
    * திசாவனிகளுக்குப் பொறுப்பாக ஒல்லாந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
    * திசாவனியைக் கோறளைகளாகப் பிரித்து நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.
    * கோறளைகளைப் பற்றுகளாகப் பரித்து பற்றுகள் முதலிமார்களின் கீழ் நிர்வாகிக்கப்பட்டன.
    * இலங்கையின் நீதித்துறை நடவடிக்கைகளுக்காக ரோமன் டச்சுச் சட்டம் அறிமுகப்படுத்ததப்பட்டது.
    * யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலவி வந்த மரபு ரீதியான நீதி நடவடிக்கைகள் தொகுக்கப்பட்டு தேச வழமைச் சட்டம் எனும் கோவை உருவாக்கப்பட்டது.
    * மூன்று வகையான நீதி மன்றங்களைக் கொண்ட நீதித்துறை அறிமுகப்படுத்தப்பட்டது.
      சிவில் ராத் - சிவில் வழக்குகள்
      லேண்ட் ராத் - காணி வழக்குகள்
      ராத்வான் ஜஸ்டிஸ் - குற்ற வழக்குகள்
    * சிறு வழக்குகள் கிராம மட்டத்தில் தீர்க்கப்பட்டன.

- பொருளாதார நடவடிக்கைகள்:
    * செலவுகளைக் குறைப்பதற்காகத் தேசிய விவசாயத் துறையை மேம்படுத்தல். உ-ம்: நெல், கரும்பு, பருத்தி
    * கறுவாவைச் சேகரிப்பதற்கும் விநியோகிப்பதற்கும் "மஹகபத்தே திணைக்களம்" உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்த்தக ஏகபோக உரிமையை ஒல்லாந்தரே வைத்துக் கொண்டனர்.
* கறுவா, பாக்கு, முத்து, மாணிக்கம், யானைத் தந்தம் என்பன பிரதான வர்த்தகப் பொருட்களாகும்.
* வெற்றிலை, நெல், குரக்கன், தினை, எள், புகையிலை, உப்பு, மிளகு, தேன், மெழுகு என்பன உள்நாட்டு வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றன.
* வரி அறவீட்டை முறைப்படுத்துவதற்காக "தோம்பு" உருவாக்கப்பட்டது.

- சமூக, கலாசார மாற்றங்கள்:
    * பறங்கியர் எனும் இனத்தவர் இலங்கையில் உருவானமை.
    * வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நகரங்களும் துறைமுகங்களும் அபிவிருத்தியடைந்தமை.
      உ-ம்: கோட்டை, காலி, புத்தளம், பேருவளை, வெலிகமை
    * புரட்டஸ்தாந்து சமயம் இலங்கைச் சமுகத்தில் அறிமுகமானமை.
    * பாடசாலை நிர்வாகத்தை முறைப்படுத்துவற்கு "ஸ்கொலாகல் ஆணைக்குழு" அமைக்கப்பட்டமை.
    * ஒல்லாந்து மொழிச் சொற்கள் சுய மொழிகளில் கலத்தல்.
      உ-ம்: ஸ்தோப்பு, விறாந்தை, ஒரலோசு
    * ஒல்லாந்தரின் உடைகள் எமது சமுகத்தில் பிரபல்யமடைந்தமை.
      உ-ம்: தொப்பி, கோட்
    * அச்சுக் கலை அறிமுகமானமை.
    * மேடை நாடகம் அறிமுகமானமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம்** : ஆட்சியில் நிலவிய பலவீனங்களும் உறுதிப்பாடின்மையும் வெளிநாட்டவர் ஆதிக்கஞ் செலுத்துவதற்குக் காரணமாக அமைந்த விதத்தை ஒல்லாந்தரின் இலங்கை வருகையை ஆதாரமாகக் கொண்டு விளக்குவார்.

**செயற்பாடு 8.4.1** : "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல" என்ற பழமொழியின் உண்மையைத் தேடுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.4.1.1 காகிதக் கீலங்கள்
- இணைப்பு 8.4.1.2 தேசப்படம்
- இணைப்பு 8.4.1.3 செயற்பாட்டுப் பத்திரம்
- பாடநூல்
- வேறு உசாத்துணை நூல்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.1.1** :

- "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல" எனும் வாசகத்தைக் காட்சிப்படுத்தவும்.
- மாணவர் உணரும் வண்ணம் வாசகம் தொடர்பான கருத்துக்களைக் கேட்கவும்.
- இது யாரால் கூறப்பட்ட கூற்று என்ற கேள்வியை வினவவும் மாணவர் செயற்பாடுகளை வெளிக் கொணரும் வகையில் கீழ்வரும் அம்சங்களில் ஈடுபடவும்

| |
|---|
| • போர்த்துக்கேயரை விரட்டிவிட்டு ஒல்லாந்தரை வரவழைத்தமை இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போலாகும்.<br>• மலையக மன்னனான இரண்டாம் ராஜசிங்கனின் காலத்தில் உருவான கூற்று.<br>• இரண்டாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை விரட்ட 1638 இல் ஒல்லாந்தருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். |

(10 நிமிடங்கள்)

**படி 8.4.1.2** :

- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- செயற்பாடு பற்றி மாணவரை அறிவூட்டவும்.
- பாடநூலையும் ஏனைய மூலாதார நூல்களையும் குழுக்களுக்கு வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு செயற்பாட்டுப் படிவம் வீதம் வழங்கவும்.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.
- மாணவர் செயற்பாடுகளை மேற்பார்வை செய்த வண்ணம் தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டல் செய்யவும்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.4.1.3 :

- மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- மாணவர்களின் பதில்களைக் குழு ரீதியில் வெவ்வேறாகக் கரும்பலகையில் எழுதவும்.
- மாணவர் விட்ட குறைகளைச் சுட்டிக்காட்டிப் பின்னூட்டல் செய்யவும். கீழ்வரும் விடங்களில் கவனம் செலுத்திப் பொழிப்புரை ஒன்று வழங்குக.

- ஒல்லாந்தர் இலங்கை வருவதற்கு ஏதுவான பிரதான காரணங்கள் முன்றாகும்.
  1. போர்த்துக்கேயர் கீழைத்தேய வர்த்தகத்தில் அடைந்த இலாபத்தை தாமும் அடைதல்.
  2. போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்த வாசனைத்திரவிய வர்த்தக ஏகபோக உரிமையைப் பலவீனப்படுத்தல்.
  3. புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்புதல்.
- மலையகத்தில் சுதந்திரமான அரசொன்று நிலவியமை.
- 1638 இல் இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.
- ஒல்லாந்தரின் செயற்பாடுகள் கண்டி அரசனுக்கு எதிராக அமைத்த சந்தர்ப்பங்களில் அவர்களை விரட்டுவதற்கு நடவடிக்கைகளை மன்னனால் மேற்கொள்ளப்பட்டமை.
- மலையக மன்னனும் ஒல்லாந்தரும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஈடுபாடு கொண்டனர்.
- இயலுமான அளவுக்கு மலையக மன்னனர்களுடன் நல்லுறவோடு செயற்படுவலதற்கு ஒல்லாந்தர் முயன்றனர்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒல்லாந்தர் இலங்கை வந்தமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.
- ஒல்லாந்தர்களுக்கும் கண்டி மன்னர்களுக்கும் இடையிலான தொடர்புகளின் தன்மையை விளக்குவார்.
- இலங்கையில் ஒல்லாந்தரின் கீழிருந்த நிர்வாக எல்லைகளை இலங்கைப் புறவுருவப்படத்தில் குறிப்பார்.
- ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் மலையக இராசதானியின் நிர்வாகக் கட்டமைப்பை ஆராய்வதற்கு தூண்டப்படுவார்.
- குழுச் செயற்பாட்டின் மூலம் மகிழ்ச்சி கொள்வார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 8.4.1.1**

**இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல**

**இணைப்பு 8.4.1.2**

***இலங்கைப்படம்***




இலங்கையும் ஒல்லாந்தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.4.1.3

### *செயற்பாட்டுப்பத்திரம்*

உமக்கு தரப்பட்ட ஒப்படைகளிலிருந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

- ஒல்லாந்தர் இலங்கை வருவதற்கு ஏதுவாயமைந்த பிரதான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
- ஒல்லாந்தர் இலங்கை வரும் போது கரையோரப் பிரதேசங்கள் யாருடைய ஆட்சியின்கீழ் இருந்தன?
- ஒல்லாந்தர் வரும்போது கண்டி இராசதானி மன்னனாக இருந்தவரின் பெயர் என்ன?
- ஒல்லாந்தரை விரட்டுவதற்காகக் கண்டி மன்னன் மேற்கொண்ட தந்திரம் என்ன?
- ஒல்லாந்தர் கண்டி மன்னர்களுடன் நல்லுறவை மேற்கொண்டமைக்கான காரணம் என்ன?
- "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல" எனும் வாசகத்தில் பொதிந்துள்ள பொருள் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :** ஒல்லாந்தர் ஆட்சியிலே இலங்கையின் கரையோரப் பகுதியில் நிலவிய பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்வார்.

**செயற்பாடு 8.4.2 :** ஒல்லாந்தரின் பங்களிப்பை அறிந்து கொள்வோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.4.2.1 கீழைத்தேய ஒல்லாந்த வர்த்தகக் கம்பனியின் இலட்சினையை சித்தரிக்கும் படம்
- இணைப்பு 8.4.2.2 குழு ஒப்படைப் பத்திரங்கள்
- இணைப்பு 8.4.2.3 செயற்பாட்டுப் பத்திரம்
- இணைப்பு 8.4.2.4 தகவற்பத்திரங்கள்
- பாடநூல்
- வேறு மூலாதார நூல்கள்
- டிமை தாள்
- ஏ4 கடதாசி
- பிளாற்றிக்னம் பேனை

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.2.1 :**

- இணைப்பு 8.4.2.1 ஐ வகுப்பில் காட்சிப்படுத்தவும்
- இங்கு சித்தரிக்கப்படும் இலட்சினை எதற்குரியது? அதில் உள்ள 3 ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடும் பெயர் என்ன? முதலிய கேள்விகளுடன் கலந்துரையாடவும்.
- பாடப்புத்தகத்திலுள்ள விடயங்களுடன் கீழ்வரும் விடயங்களும் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடவும்.

> - 1658 இல் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலை நாட்டியமை.
> - 1658 - 1796 கால கட்டத்தில் அவர்கள் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்தமை.
> - கண்டி அரசர்களுடன் சமாதானமான முறையில் நடந்து கொண்டமை.
> - முடியுமான வரையில் யுத்தங்களைக் குறைத்து ஆட்சி புரிந்தமை.
> - தமது ஆட்சிக்காலத்தில் ஒல்லாந்தர் கடைப்பிடித்த நிர்வாக, பொருளாதார, கலாசார செயற்பாடுகள் இன்றும் எமது சமூகத்தில் நிலவுகின்றமை.

(15 நிமிடங்கள்)

**படி 8.4.2.2 :**

- மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.4.2.2 குழு ஒப்படைப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கவும்.
- தகவல் டத்திரங்களையும் குழுவுக்கு ஒன்று வீதம் வழங்கவும்.
- பாட நூலிலிருந்தும் ஏனைய நூல்களிலிருந்தும் மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- செயற்பாட்டுப் பத்திரத்துக்கு ஏற்ப தகவல் திரட்டுமாறு குழுக்களை அறிவுறுத்தவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் உதவியை வழங்கவும்.

(25 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.4.2.3 :

- மாணவர்கள் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 8.4.2.3 ஐ வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவும் திரட்டிய தரவுகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழுக்கள் தரவுகளை முன்வைக்கும் போது அதன் முக்கிய அம்சங்களை ஏனைய குழுக்கள் இணைப்பு 8.4.2.3 பத்திரத்தில் குறிப்பதற்கு வழிப்படுத்தவும்.
- மாணவர் தரவுகளை முன்வைக்கும் போது அவர்களின் பலங்களையும் பலவீனங்களையும் அறிந்து கொள்ளவும்.
- மாணவர்கள் முன்வைப்பதற்கத் தவறிய விடயங்களையும் சேர்த்து கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்கும் வகையில் செயற்பாடு பற்றிய பொழிப்புரையை ஆற்றவும்.

- 1658 - 1796 வரையிலான 1 1/2 நூற்றாண்டுகளாக ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பகுதியை ஆட்சி செய்தமை.
- ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்கள்.
- அரசியல்
    * கரையோரப் பகுதியை கொமான்டரிகளாகப் பிரித்து நிர்வாகம் செய்தமை.
    * கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் எனும் 3 கொமான்டரிகள் காணப்பட்டமை.
    * நிர்வாக நடவடிக்கைகளின் போது திசாவை, கோறளை, அத்துக்கோறளை, விதானை முதலிய சிங்கள உத்தியோகத்தரின் உதவியைப் பெற்றுக் கொண்டமை.
    * ஒல்லாந்தர் காலத்தில் முறையான நீதித்துறையை இந்நாட்டில் அறிமுகப்படுத்தியமை.
    * ரோமன் - டச்சுச் சட்டத்தை இந்நாட்டில் அறிமுகப்படுத்தியமை.
    * சிவில்ராத், லேண்டராத், ராத்வான் ஜஸ்டிஸ் எனும் நீதி மன்றங்களை அறிமுகப்படுத்தியமை.
    * சிறுவழங்குகள் கிராம மட்டத்தில் தீர்க்கப்பட்டமை.
    * யாழ்ப்பாண சட்டங்களை தேசவழமைச் சட்டம் எனும் பெயரில் தொகுத்தமை.
- பொருளாதாரம்
    * ஒல்லாந்தர் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக தேசிய விவசாயத்துறையை மேம்படுத்தியமை.
    * கறுவா, கரும்பு, பருத்தி முதலிய பயிர்களைப் பயிரிட்டமை.
    * தமது வியாபார நடவடிக்கைகளின் போது வரிகளை அறிவிட்டமை.



12. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தமது வரி வருமானக் கணக்குகளைப் பேணுவதற்காக "தோம்பு" எனும் ஆவணங்களைப் பயன்படுத்தியமை.
* கறுவா பிரதான ஏற்றுமதிப் பயிர் என்ற படியால் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை சேகரிப்பதற்காக "மஹபத்த" எனும் திணைக்களத்தைப் பயன்படுத்தியமை.
* வர்த்தகம் அரச உரிமையானமை.
* பணப் புழக்கம் ஏற்பட்டமை.

- சமூக கலாசாரம்
  * புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயம் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டமை.
  * பாடசாலை நிர்வாகத்தை முறைப்படுத்துவதற்காக ஸ்கொலாகல் கமிஷனை அறிமுகப்படுத்தியமை.
  * சுதேச மொழிகளில் ஒல்லாந்து மொழிச் சொற்கள் கலந்தமை.
  * ஒல்லாந்தரின் உணவு, பானங்கள், உடைகள் என்பன இலங்கை மக்கள் மத்தியில் பாவனைக்குள்ளானமை.
  * அச்சுக் கலை எமது நாட்டில் அறிமுகமானமை.
  * பறங்கியர் எனும் இனத்தவர் தோன்றியமை.
  * ஐரோப்பிய மரபுகளைப் பேணும் ஒரு கூட்டம் உருவானமை.
  * மலாயர் (ஜாவா) இங்கு குடியேற்றப்பட்டமை.
  * கோட்டை, காலி, கண்டி, மட்டக்களப்பு முதலிய நகரங்களை மையமாக வைத்து நகரமயமாக்கம் வளர்ச்சியடைந்தமை.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மாற்றங்களை விபரிப்பார்.
- இலங்கை ஆட்சியாளர்களின் பலம், பலவீனம் காரணமாக இலங்கை மக்கள் மீது ஒல்லாந்தரால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பற்றி ஆராய்வார்.
- குழுக்களில் இணைந்து ஒற்றுமையாக வேலை செய்யும் ஆற்றலைப் பெறுவார்.
- தமது முன் வைப்புச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்கு முன்வருவார்.

**பின்தொடர்வேலை:**


- இலங்கையில் ஒல்லாந்தர் நிருவாகப் பகுதிகளை தேசப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.4.2.1

ஒல்லாந்து வர்த்தக இலச்சினையைக் காட்டும் படம்



## இணைப்பு 8.4.2.2

### குழு ஒப்படைப்பத்திரங்கள்

குழு 1

| |
|---|
| ஒல்லாந்தர் ஆட்சி இலங்கை அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களை அட்டவணைப்படுத்துக. |

குழு 2

| |
|---|
| ஒல்லாந்தர் ஆட்சி இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை அட்டவணைப்படுத்துக. |

குழு 3

| |
|---|
| ஒல்லாந்தர் ஆட்சியில் இலங்கை சமூக, கலாசார துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்களை அட்டவணைப்படுத்துக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.4.2.3

### *மாணவர் செயற்பாட்டுப்பத்திரம்*

### *இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி*

| அரசியல் | பொருளாதாரம் | சமூக, கலாசாரம் |
|---|---|---|
| உ-ம்: கரையோரப் பிரதேசம் கொமாண்டரிகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டமை | உ-ம்: தோம்பு முறை அறிமுகமாதல் | உ-ம்: புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயம் அறிமுகமாதல். |

## இணைப்பு 8.4.2.4

### *தகவல் பத்திரம் இல:*

**அரசியல் :-**

- கரையோரப் பிரதேசங்களின் நிர்வாகம் தொடர்பாக கொமான்டரி முறை ஒல்லாந்தரால் ஆரம்பிக்கப்பட்டது.
- கொழும்பு கொமாண்டரி தேசாதிபதியாலும், காலி, யாழ்ப்பாணம் என்பன கொமாண்டரிகள் இருவராலும் நிர்வகிக்கப்படுகின்றன.
- ஒல்லாந்தர் ஆட்சியில் பணிப்பாளர் சபை மூலமே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
- தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை உறுப்பினர் அனைவரதும் கையொப்பங்கள் தேவைப்பட்டன.
- நிர்வாகத்தின் உயர் பீடமாக கீழைத்தேச வர்த்தக மையமான பத்தேவியாவின் அலுவலரே திகழ்ந்தார். அவருக்கு உதவியாக ஓர் அலோசனைச் சபை செயற்பட்டது.
- இலங்கையின் கொமாண்டரிகளிலும் ஒல்லாந்தர் கோட்டைகளிலும் இவ்வாறான ஆலோசனைச் சபைகள் செயற்பட்டன.
- நிர்வாக நடவடிக்கைகளின்போது உள்நாட்டு அலுவலர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.
- கோறளை முதலி, பற்று முதலி, விதானைமார், கம்முலாதனிமார் முதலியோர் அவ்வாறான சுதேச அலுவலர்களாவர்.
- ஒல்லாந்தர் ஆட்சியின் போது முறையான நீதித்துறை அறிமுகமானது.
- அதன் முக்கியத்துவம் ரோமன் டச்சு சட்டம் இலங்கையில் அறிமுகமானமையாகும்.
- இலங்கைக்கு ஒரு நீதிமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ராத்வான் ஜஸ்டிஸ், சிவில்ராத், லேண்ட்ராத் என்பன நீதிமன்றங்களாகும்.
- சுதேச அதிகாரிகளுக்கும் கிராம மட்டத்தில் நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.
- யாழ்ப்பாணத்தில் நிலவிய சட்டமுறைகள் தேசவழமைச் சட்டம் எனும் பெயரில் ஒரு நூலாகத் தொகுதிக்கப்பட்டமை.
- புரோகியுரர், பிஸ்கால் முதலிய புதிய அலுவலர் பதவிகள் நீதித்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் பத்திரம் இல: 2

**பொருளாதாரம் :-**

- ஒல்லாந்தர் ஆரம்பத்தில் தேசிய விவசாயத்தில் ஆர்வங்காட்டாத போதிலும் பிற்காலத்தில் ஆர்வங்காட்டினர்.
- குளங்களைப் புணரமைத்து தேசிய விவசாயத்துக்குப் பங்களிப்புச் செய்தனர்.
- கறுவா, கரும்பு, இண்டிகோ முதலிய பயிர்ச் செய்கைகள் பொருளாதாரத் துறையில் முக்கிய இடம் வகித்தன.
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் போது வரி அறவிடப்பட்டது.
- வரி அறவீடு சம்பந்தமாகத் தோம்புகள் தயாரிக்கப்பட்டன.
- கறுவா கொள்வனவு, விநியோகம் என்பவற்றுக்கான மஹபத்த திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.
- வர்த்தகம் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையானது.
- பணப் புழக்கம் வளர்ச்சியடைந்தது.
- புடைவை, சீனி, அரிசி என்பவற்றின் இறக்குமதி உரிமையும் ஒல்லாந்தரிடமே காணப்பட்டது.

## தகவல் பத்திரம் இல: 3

**சமூக, கலாசாரம் :-**

- இலங்கையில் பறங்கியர் என்ற கலப்பினத்தவர் தோற்றம் பெற்றனர்.
- இலங்கை சமூகத்தில் ஐரோப்பியரைப் பின்பற்றும் குழுவினர் தோற்றம் பெற்றனர்.
- மலாய் மக்கள் இந்நாட்டின் குடிமக்களானமை.
- பொருளாதார முறை மாற்றமுற்றமால் குலமுறையிலும் மாற்றமேற்பட்டது.
- பொருளாதாரப் பெறுமதிக்கேற்ப சமூக முறையின் உயர்வு, தாழ்வு தீர்மானிக்கப்பட்டதால் அது பிற்காலத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வாக மாறியது.
- காலி, புத்தளம், மட்டக்களப்பு, பேருவளை, வெலிகம, நீர்கொழும்பு முதலிய துறைமுகங்களை அண்டி நகர நாகரிகம் வளர்ச்சியடைந்தது.
- கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்துக்குப் பதிலாக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயம் பரவியது.
- பாடசாலை அமைப்பை நெறிப்படுத்துவதற்கு 'ஸ்கொலகல் கமிஷன்' அமைக்கப்பட்டது.
- சுதேச மொழிகளில் ஒல்லாந்துச் சொற்கள் கலந்தன.
- இலங்கைச் சமூகத்தில் ஒல்லாந்தர் நடை, உடை, பாவனை முறைகள் கலந்தன.
- அச்சுக் கலை அறிமுகத்தால் தமிழ், சிங்கள இலக்கியங்கள் வளர்ச்சி கண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள்

**அறிமுகம்** **12 பாடவேளைகள்**

17 ஆம், 18 ஆம் நூற்றாண்டு உலக வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சித் தொடர்களாக இடம் பெற்ற ஆங்கிலேயப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப்போர், பிரான்சியப் புரட்சி என்பன மூலம் அரசியல் உரிமைகள் பல மனித இனத்துக்கு உரிமையாகின. இக்காலக் கட்டத்தில் நிகழ்ந்த கைத்தொழிற் புரட்சி மூலம் பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேற்றமான பயணமொன்றை ஆரம்பித்தது. இந்நிகழ்வுகளின் ஊடாக உலகுக்கு குறிப்பிடத்தக்க அனேக நன்மைகளும் உரிமையாகின.

அரசனின் அதிகாரத்தையும் மீறிப்போய் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியுற ஆங்கிலப் புரட்சியின் மூலம் மக்களின் உரிமைகள் பலவும் உறுதியாகின. பிற்காலத்தைய புரட்சிகர எழுச்சிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஆங்கிலேய புரட்சி மூன்னுதாரணமாக விளங்கியது. பிரித்தானிய அரசின் சட்டப் பிரமாணங்களும், வரி விதிப்பின் மூலமும், அடக்கப்பட்டிருந்த குடியேற்றவாசிகள் ஆரம்பித்த போராட்டத்தின் மூலம், அமெரிக்கா சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதுடன் குடியேற்றவாசிகள் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட அரசியலமைப்பின் மூலம் உலகுக்கு சமஷ்டி ஆட்சி முறையைப் போலவே சுதந்திரத்தின் பெறுமதியையும் உறுதிசெய்துகொள்ள முடிந்தது. சுதந்திரம், சகோதரத்துவம் மற்றும் சமத்துவம் பற்றிய எண்ணக்கருவை அர்த்தமுள்ளதாக ஆக்கியவாறு, ஏற்பட்ட பிரஞ்சுப்புரட்சியின் மூலம் மனித சமூகத்திற்கு அடிப்படை மனித உரிமைகள் பலவும் சொந்தமாகின.

உலகின் போக்கை மாற்றிய உற்பத்தி வளர்ச்சியைப் போலவே வாணிபத்துவம் பரவிச் செல்வதற்குக் காரணமாயமைந்த கைத்தொழிற் புரட்சியின் மூலம் கைகளினால் செய்யப்பட்ட வேலைகள் இயந்திரங்களுக்குச் சொந்தமாகின. உற்பத்தி இரட்டிப்பாகவும் மும்மடங்காகவும் அதிகரித்தது.

மனித சமூகத்தின் வரலாற்று வளர்ச்சிக்குப் பங்களித்த இத்தகைய நிகழ்வுகளை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பளிப்பதே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி :-**

மனித இனத்தின் வரலாற்றின் முன்னேற்றத்தில் முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகர சக்திகளை விசாரணை செய்வார்.

**தேர்ச்சி மட்டங்கள் :-**

- மன்னனின் அதிகாரங்கள் குறைவடைந்து பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வளர்ச்சியடைவதற்கு இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த விதத்தை விளக்குவார்.
- காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அமெரிக்க சுதந்திரப் போராட்டமும் அவர்களின் அரசியலமைப்பும் உலக வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதை விளக்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் மேற் கொண்ட புரட்சியின் விளைவாக மனித இனத்தின் வரலாற்றில் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு பங்களிதத விதத்தை விசாரணை செய்வார்.
- கையால் செய்த வேலையை இயந்திரங்களால் செய்த கைத்தொழில் புரட்சியானது உலகின் வரலாற்றுப் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தியமையை விசாரணை செய்வார்.

**பாட உள்ளடக்கம்**

## 8.5.1 1688 ஆங்கிலேயப்புரட்சி

### புரட்சியின் பின்னணி

- இங்கிலாந்தின் பாராளுமன்ற ஆட்சிமுறை காலங்காலமாக வளர்ச்சியடைந்த ஒன்றாகும்.
- அரசனுக்கும் பாராளுமன்றத்துக்குமிடையே மோதல் அதிகரிப்பு
    - அரசின் செலவின மதிப்பீடுகளைப் பாராளுமன்றம் அங்கீகரித்தமை.
    - அரசன் விரும்பியவாறு வரி அறவிட இடமளிக்காத போது பாராளுமன்றம் கலைக்கப்படல்.
    - 1648 இல் உரிமைகள் தொடர்பான மகஜர் பாராளுமன்றத்தினால் அரசனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டமை.
    - முதலாம் சார்ள்ஸ் (ஸ்டுவர்ட் வம்சம்) மன்னன் தன்னிச்சையாக ஆட்சி செய்தமை. (1625-1649)
    - ஒலிவர் குரொம்வெல்லின் கீழே ஒழுங்கமைக்கப்பட்ட சேனைகளை அமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றியமை.
- 1648 இல் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாதல்.
- பாராளுமன்றத்தில் முதலாம் சார்ள்ஸ் மன்னன் குற்றவாளியாகக் காணப்பட்டு, அவனுக்கு சிரச்சேதம் செய்யக் கட்டளையிடப்பட்டமை.

### புரட்சி இடம்பெற்ற விதம்

- அரசனுக்கு அதிகாரம் கிடைத்தபோதிலும் முன்பிருந்தவாறே கடமைகள் செய்ய நேர்ந்தமை.
- பாராளுமன்றத்துடன் ஏற்படுத்திக் கொண்ட மோதல்களின் மத்தியில் II ம் ஜேம்ஸ் மன்னன் (1688) அரசுரிமையைக் கைவிட்டுத் தப்பியோடியமை.
- பாராளுமன்றத்தில் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டபின் மேரி இளவரசிக்கும் ஒரேஞ்சு விலியம் இளவரசனுக்கும் அரசுரிமையை வழங்கியமை.

### புரட்சியின் விளைவுகள்

- அரசனின் அதிகாரத்தையும் மேலோங்கிப் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியுற்றமை.
- சனநாயக அரசியலமைப்பு தொடர்பாக முக்கியத்துவம் பெறும் பிரதம மந்திரிப் பதவி, அமைச்சரவை முறை முதலிட்ட ஏனைய அமைப்புக்களின் வளர்ச்சிக்கு பாராளுமன்றம் வழிகோலியமை.
- பொதுமக்களின் உரிமைகள் தொடர்பான மசோதாக்கள் உறுதிப்படுத்தப்படல்.
    - மக்கள் பிரதிநிதிகளின்றி வரிவிதிக்கலாகாது.
    - பாராளுமன்றத்தின் அனுமதியின்றி நிரந்தரமான இராணுவமொன்றை வைத்துக் கொள்ளவியலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாராளுமன்றத்தினுள் பிரதிநிதிகளின் பேச்சுச் சுதந்திரத்திற்கு இடையூறு செய்தல் கூடாது.
- கொடிய, மனிதத்தன்மையற்ற தண்டனைகள் வழங்கப்படக்கூடாது.

- புரட்சியின் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரிவினருக்கு வாக்குரிமை கிடைத்ததும் பிற்காலத்தில் (20ம் நூற்றாண்டில்) அது சர்வசன வாக்குரிமையைப் பெற்றுக் கொள்ளல் வரை விரிவாகியமை.
- பிற்காலத்திய புரட்சிகளில் தாக்கமேற்படுத்தியமை
  உ-ம்: அமெரிக்கப்புரட்சி

## 8.5.2 அமெரிக்க சுதந்திரப்போர்

### குடியேற்றங்களின் தோற்றம்

- ஐரோப்பியர்களின் நாடுகாண் பயணங்களும் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தலும்.
- ஸ்பானிய, ஒல்லாந்த, பிரான்சிய, பிரித்தானிய நாட்டவர்கள் அமெரிக்காவில் குடியேறியமை.
- 18 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியாகும் போது பிரித்தானியர்கள் 13 குடியேற்றங்களை நிறுவியமை அவை,

  வேர்ஜீனியா, ஜோர்ஜியா, பென்சில்வேனியா, மரிலாந்து, நிவ்யோர்க், நியூஜேர்ஸி, டெலாவெயார், மெசகூஸட்ஸ், கணக்ரிக்ட், நியூஹம்ப்ஷயர், றோட் ஐலண்ட், வடக்கு கரோலினா, தெற்கு கரோலினா
- குடியேற்றங்களிலிருந்து பெருமளவுக்கு பயனடைந்தமை.

### சுதந்திரப்போரின் பின்னணி

- பிரித்தானிய அரசினால் குடியேற்றவாத ஆட்சி நடாத்திச் செல்லப்படுவதற்காக செலவிடப்பட்ட நிதியின் பகுதியொன்றைக் குறைநிரப்ப செய்துகொள்ள நடவடிக்கை எடுத்தமை.
  - நடைமுறையிலிருந்த வர்த்தக/ கடற்படை சட்டபிரமாணங்களை அமுல் செய்தமை.
  - அமெரிக்க உற்பத்திகளைப் பிரித்தானியச் சந்தைகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டுமென்பதுடன் அதற்கென தமது விருப்பத்துக்கு அமையவே விலை நிர்ணயத்தையும் பிரித்தானியர் மேற்கொண்டனர்.
  - அமெரிக்காவில் புதிய வரிவிதிப்பு முறை அறிமுகஞ் செய்யப்பட்டமை.
  - 1765 இல் முத்திரை வரி அறவிடப்பட்டமை.
  - முத்திரை வரிக்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை.
  - முத்திரை வரியை இரத்துச் செய்து பிரகடனம் ஒன்றை வெளியிட்ட பிரித்தானிய பாராளுமன்றம், குடியேற்றங்களின் மீது எந்த ஒரு மசோதாவையும் நிறைவேற்ற தமக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறியமை.
- அமெரிக்காவுக்கு கொண்டுவரப்படும் தேயிலை, கண்ணாடி என்பவற்றுக்காகச் சுங்க வரி அறவிடப்பட்டமை. (டவுண் சென்ட் மசோதா)
- சுங்க வரிக்கு எதிராக குடியேற்றவாசிகள் எழுச்சியுற்றமை.
- தேயிலை வரியைத்தவிர ஏனைய வரிகளை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை.
- இந்த நிலைமையிலே பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுபடுவதற்கு குடியேற்றவாசிகள் தீர்மானித்தமை.



13. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரமடைதல்

- அமெரிக்கா பூராவும் சுதந்திரக்கருத்துக்கள் பரவுதல்.

  உ-ம்: ரூசோ, மொன்டெஸ்கியூ, வோல்டேர் போன்றோரின் கருத்துக்கள்

  1688 ஆங்கிலேயப் புரட்சி - 'பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை' எனும் சுலோகம்

- 1773 - பிரித்தானியர் ஆட்சிக்கெதிராக குடியேற்றவாசிகளின் எதிர்ப்பு உருவாதல்.
- குடியேற்றவாசிகளின் பிரதிநிதிகள் ஒழுங்கமைதல்
- குடியேற்றவாசிகளின் பிரதிநிதிகள் ஜோர்ஜ் வோஷிங்டனின் தலைமையில் குடியேற்ற இராணுவமொன்றை அமைத்து சுதந்திரப்போரை ஆரம்பித்தல்.
- அமெரிக்காவில் கிளர்ச்சிக் கும்பலொன்று பொஸ்டன் துறைமுகத்தில் கப்பலொன்றுக்குள் பிரவேசித்து அதிலிருந்த தேயிலைப் பெட்டிகளைக் கடலுக்குள் வீசியதைத் தொடர்ந்து சுதந்திரப்போர் ஆரம்பமாதல். (பொஸ்டன் தேநீர் விருந்து)
- போரில் வெற்றிபெறலும் 1776 இல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனமும்

## புதிய அரசியலமைப்பு யாப்பு

- 1783 இல் சுதந்திர அரசாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்டு ஜோர்ஜ் வோஷிங்டன் தலைமையில் அமெரிக்க ஐக்கிய குடியேற்றவாசிகள் சுதந்திரமடைதல்.
- 1787 இல் பிலடெல்பியா சம்மேளனத்தில் சுதந்திர அமெரிக்கர், அமெரிக்க அரசியல் அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளல்.

## விளைவுகள்

- ஒட்டுமொத்தமான மனித சமூகத்துக்கும் சுதந்திரத்தின் பெறுமதியை வெளிப்படுத்திக் காட்டியமை.

  உ-ம்: பிற்காலத்தில் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சிக்கு வழிகாட்டியாக அமைந்தமை.

- உலகத்தில் முதலாவது எழுத்து மூலமானதும் சமஷ்டி ஆட்சி முறையானதுமான அரசியல் அமைப்பு எனும் சிறப்புப் பெற்றமை.

  உ-ம்: பிற் காலத்தில் பிரான்சு, இந்தியா போன்ற நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை ஏற்பட்டமை.

> **"சகல இனத்தவர்களும் சமமானவர்கள்"**
>
> **- அமெரிக்க சுதந்திரப்பிரகடம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5.3 பிரான்சியப் புரட்சி (சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்)

### வரலாற்றுப் பின்னணி

- பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் பிரான்சில் நிலவிய நிலப்பிரபுத்துவவாதத்தின் பண்புகளுடனான பழமை வாய்ந்த அரச ஆட்சி முறை
  - (Ancient Regime - பழமை முறை)
- சட்ட, நிருவாக, நீதித்துறை அதிகாரங்கள் அரசனிடம் குவிந்திருந்தமை.
- XIV ஆம் லூயி மன்னன் : "அரசு என்பது நானே"
- அரசனதும், பிரபுக்களினதும் இடாம்பீகமான வாழ்க்கை, பிரான்சிய மக்களின் அருவருப்புக்கு ஆளாகியமை.
- அரசனின் அரசாங்க நிர்வாகம் ஊழல் மலிந்ததாக இருந்தமை.
- சமூக மட்டங்கள்

  பிரபுக்களும் மதகுருமாரும் - 4%
  மத்திய வகுப்பார் - 4%
  விவசாயிகளும் தொழிலாளிகளும் - 92%
  - விவசாயிகளதும் தொழிலாளிகளதும் வரிப்பளு காரணமாக அதிகளவு நெருக்கடிக்குள்ளாதல்.
  - மத்திய வகுப்பாரின், வர்த்தக, கைத்தொழில் முன்னேற்றத்தின் விளைவாக மிகவும் செல்வந்தராகவிருக்கும் மத்திய வகுப்பாரின் தோற்றம்.
- பிரான்சியப் புரட்சியின் தத்துவரீதியிலான அடிப்படை ரூசோ, வோல்டேயர், மொன்டெஸ்கியூ
  - ரூசோ - "மனிதன் பிறந்த நாள் தொட்டு தளைகளால் பிணைக்கப்பட்டிருக்கிறான்"
  - வோல்டேயர் - "நீங்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகள் ஏனையோரும் அனுபவிக்க இடமளியுங்கள்"
  - மொன்டெஸ்கியூ - "அரசாங்கத்திடமிருக்கின்ற அதிகாரங்கள் சட்ட, நிர்வாக, நீதி என்றவாறாகப் பிரிக்கப்படல் வேண்டும்"

### புரட்சி

- பிரான்சு பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தமை.
- பதினாறாம் லூயி மன்னன் வரிச்சீர்த்திருத்தம் செய்வதற்காக 175 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரான்சுப் பாராளுமன்றத்தைக் (Status General) கூட்டியமை.
- பாராளுமன்றத்தில் நெருக்கடி மேலும் அதிகரித்ததுடன் மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலிருந்து விலகிச் சென்று கூட்டம் நடாத்துதல் (டென்னிஸ் மைதானத்தில் உறுதியெடுத்தல்)
- ஆயுதந்தரித்த பொதுமக்கள் 1789 ஜுலை 14 ஆந் திகதி அரசியற் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்த பஸ்ரீல் சிறைச்சாலையைத் தாக்கியமை.
- பிரான்சியப் புரட்சி வெற்றியடைதல்.
- பதினாறாம் லூயி மன்னனும் மாரி என்டனயிட் அரசியும் சிரச்சேதத்திற்குட்படல்.

### புரட்சியின் விளைவுகள்

- 1791 இல் மனித உரிமைகள் பற்றிய பிரகடனம்
- பிரான்சில் அரச ஆட்சி முறை இரத்துச் செய்யப்படல்
- மெற்றிக் முறை பயன்பாட்டுக்கு வருதல்.
- நில உடமையுள்ள சிறியளவிலான விவசாய வகுப்பின் தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 8.5.4 கைத்தொழிற் புரட்சி

- "கைத்தொழிற் புரட்சி எனப்படுவது மனிதன் உடல் உழைப்புக்குப் பதிலாக அதே உழைப்பைக் கொண்டு, பாரிய அளவு வேலையை இயந்திராதிகளிடம் ஒப்படைத்துப் பொருள் உற்பத்தியல் ஏற்படுத்திய மாற்றமாகும்."

- கைத்தொழிற் புரட்சி பெரிய பிரித்தானியாவில் ஆரம்பமாகியமை. (கி.பி. 1750-1850)
  - கைத்தொழிற் புரட்சி பெரிய பிரித்தானியாவில் ஆரம்பமாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

  (அ) மூலப்பொருட்களை இலகுவாகப் பெறக்கூடியதாயிருந்தமை.
  (ஆ) மலிவான கூலியாட்கள்
  (இ) ஓரளவு பயிற்றப்பட்ட தொழிலாளர்
  (ஈ) வர்த்தக வளர்ச்சி
  (உ) வளர்ச்சியடைந்த வங்கி முறை

- கைத்தொழிற் புரட்சி முக்கியமாக ஏற்பட்ட துறைகள்
  - புடவைக் கைத்தொழில்
  - நிலக்கரிக் கைத்தொழில்
  - இரும்பு உருக்குக் கைத்தொழில்

  இத்துறைகளுக்குரியதான புதிய கண்டுபிடிப்புக்கள்:

***துணிக்கைத்தொழில்***

| | | |
|---|---|---|
| ஜோன்கே | - | ஓடும் நாடா 1733 |
| ஜேம்ஸ் கிறீவ்ஸ் | - | நூற்கும் சென்னி 1767 |
| ரிச்சர்ட் ஆக்ரியிட் | - | நீர்ச்சட்டகம் 1769 |
| சாமுவெல் குறொம்ப்டன் | - | டியூல் இயந்திரம் 1779 |
| எட்மண்ட் கர்ட்ரயிட் | - | நெசவு இயந்திரம் 1785 |

***இரும்புருக்குக் கைத்தொழில்***

| | | |
|---|---|---|
| ஏப்ரஹாம் டாபி | - | இரும்பை உருக்குவதற்காக நிலக்கரியைப் பயன்படுத்தல் - 1730 |
| ஹென்றி பெஸ்மர் | - | இரும்பை உற்பத்தி செய்வதற்காக துரிதமானதும் இலாபகரமானதுமான முறையொன்றைக் கண்டுபிடித்தல் - 1856 |

***நிலக்கரிக் கைத்தொழில்***

| | | |
|---|---|---|
| நியூகொமன் | - | நீராவியால் இயங்கும் இயந்திரம் (சுரங்க நீரை அகற்றுவதற்காக) - 1735 |
| ஜேம்ஸ் வாட் | - | நீராவி இயந்திரத்தை விருத்தி செய்தல் - 1774 |
| ஹம்ப்றீ டேவி | - | பாதுகாப்பான விளக்கு (சுரங்கத் தொழில்)- 1815 |

- கைத்தொழிற் புரட்சி விவசாயத்துறைக்கும் வியாபித்தல்
  - இயந்திராதிகளை விவசாய நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தல்
  - சுழற்சிப் பயிர்ச்செய்கை
  - பெற்றோலின் வரிசையாக நெல் விதைக்கும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கைத்தொழில் புரட்சி போக்குவரத்துத்துறைக்கு வியாபித்தல்
  - றொஸட்புல்டன் - நீராவிப் படகு - 1807
  - ஜோர்ஜ்ஸ்டீவன்சன் - றொக்காட் புகையிரதம் - 1830
  - பெரிய பிரித்தானியாவின் புகையிரப் பாதைகள்
  - பெரிய பிரித்தானியாவின் வீதப் போக்குவரத்து விருத்தி
  - மெக்கடம் முறை
  - கில்பர் றைட் சகோதரர்கள் - ஆகாய விமானம் 1903
- கைத்தொழிற் புரட்சியானது தொடர்பாடல் துறையில் வியாபித்தல்
  - சாமுவேல் மோர்ஸ் - மின் செய்தி முறை - 1844
  - அலெக்சாண்டர் கிரஹம்பெல் - தொலைபேசி - 1876
  - மார்க்கோணி - வானொலி - 1895
  - லாகீ பெயர்ட் - தொலைக்காட்சி - 1940
- கைத்தொழிற் புரட்சியின் முக்கியத்துவம்
  - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்கள் தமது வளர்ச்சிப் பாதையை வகுத்துக் கொள்வதில் இந்நிகழ்வு பெரும்பங்களித்தது.
  - கைத்தொழில் புரட்சியின் செயற்பாடுகள் அன்றிலிருந்து இன்றுவரை நடைமுறையிலுள்ளமை.
- கைத்தொழிற் புரட்சி - ஏனைய நாடுகளிலும் வியாபித்தல்
  - பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ரஷ்யா, யப்பான்
- கைத்தொழில் புரட்சியின் விளைவுகள்
  - நன்மையைப் போலவே தீமையான விளைவுகளும் காணப்படல்
  - மக்களின் சாதாரண வாழ்க்கை நிலை நன்மையாக அமைதல்
  - முதலாளித்துவ வாதம் வலுவடைதல்
  - தொழிலாளர்கள் அதிகளவு அழுத்தங்களுக்குள்ளாதல்

    (நாளொன்றுக்கு கூடியளவு மணித்தியாலம்வேலை செய்தல் (12 மணித்தியாலங்கள்) அவ்வாறு செய்தாலும் குறைந்த சம்பளமே கிடைத்தல்)
  - தொழிலாளர் வாழ்ந்த பிரதேசங்கள் பெருமளவு அசுத்தமாகவே இருத்தல்.
  - சூழல் மாசடைதல்
  - வீட்டுக் கைத்தொழில் மதிப்பிழந்தமையால் பாரம்பரிய நுட்ப முறைகள் அருகிப்போனமை.
  - முதலாளித்துவ வாதத்துக்கு எதிரான அரசியல் சித்தாந்தங்களின் வளர்ச்சி உ-ம்: கார்ள் மாக்ஸ் ஏஞ்கள்ஸ் ஆகியோரின் கம்யுனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிடப்பட்டன.
  - தொழிற் சங்க இயக்கங்கள் தோன்றியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :** ஏகாதிபத்திய பிடியிலிருந்து சுதந்திரம் அடைவதற்காக செய்த போராட்டமும் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு யாப்பின் காரணமாக அமெரிக்க சுதந்திரப் போராட்டம் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தை ஆய்வு செய்வார்.

**செயற்பாடு 8.5.1 :** அமெரிக்க சுதந்திரப்போராட்டம்

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.1.1 அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொடி
- இணைப்பு 8.5.1.2 அமெரிக்காவில் பிரித்தானிய குடியேற்றங்களின் படம்
- இணைப்பு 8.5.1.2 செயற்பாட்டுப் பத்திரம்
- பாடநூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.1.1 :**

- இணைப்பு 8.5.1.1 இலுள்ள கொடியை வகுப்பில் காட்சிப்படுத்திக் கீழ்வரும் வினாக்களை மாணவரிடம் வினவவும்.
  1. இது எந்த நாட்டின் கொடி?
  2. அந்நாட்டைப் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?
- மேற்படி வினாக்களின் மூலம் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடவும்.

> - ஐரோப்பியரன் நாடுகாண் பயங்களின் பிரதிபலனாக அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டமை.
> - அதன் பின் ஐரோப்பியர் அங்கு குடியேறியமை (ஸ்பானியர், ஒல்லாந்தர், பிரான்சியர், பிரித்தானியர்)
> - இறுதியில் பிரித்தானியரால் அமெரிக்கா குடியேற்ற நாடாக்கப்பட்டமை.
> - தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக போராட்டமே அமெரிக்க சுதந்திரப் பேறாக அறியப்படுகின்றது.

(10 நிமிடங்கள்)

**படி 8.5.1.2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.5.1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை குழுவுக்கு ஒன்று வீதம் பிரித்துக் கொடுக்கவும்.
- உரிய மூலாதாரங்களைப் பரிசீலித்து தகவல் சேகரிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.5.1.3 :

- குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தவும்.
- செயற்பாடுகளின் இடையே தேவையான வழிகாட்டல்களை மாணவருக்கு வழங்கவும்.
- செயற்பாடுகளின் இறுதியில் குழுக்களுக்கு தமது தகவல்களை வகுப்புக்குச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- தகவல்களைச் சமர்ப்பித்தபின் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும் வகையில் பொழிப்புரையை ஆற்றவும்.

> - அமெரிக்காவினுள் பிரித்தானிய குடியேற்றங்கள் 13 இருந்தமை. (இணைப்பு 8.5.1.3 தேசப்படத்தைப் பயன்படுத்தி)
> - பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் அமெரிக்காவினுள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சட்டப் பிரமாணங்கள் அமுலாக்கப்பட்டமை.
> - உதாரணம்: வருமான வரி விதிக்கப்பட்டமை, முத்திரை வரி
> - புதிய சுங்கவரிகள் விதிக்கப்பட்டமை - டௌன் செண்ட்வரி
> - அமெரிக்காபூராவும் சுதந்திரக் கருத்துக்கள் பரவியமை
> - பிரித்தானிய ஆட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக குடியேற்றவாசிகள் எதிர்ப்பு தெரிவித்தமை.
> - பொஸ்ரன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த தேயிலைப் பெட்டிகள் கடலுக்குள் வீசி எறிந்ததுடன் முதலாவது மோதல் வளர்ச்சியடைந்தமை.
> - குடியேற்ற இராணுவம் வெற்றியடைந்தமை.
> - 1776 இல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வெளியாகியமை.

(80 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குவார்.
- அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தினால் உலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற அரும் நன்கொடை குறித்து வினவுவார்.
- குழுவில் செயற்படும் பரிச்சயம் பெறுவார்.
- ஒற்றுமையாகத் தொழிற்படப் பழகுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.5.1.1



அமெரிக்காவின் தேசிய கொடி

## இணைப்பு 8.5.1.2




வட அமெரிக்காவின் ஆங்கிலக் குடியேற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.5.1.3

***செயற்பாட்டுப்பத்திரம் இல 01***

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற் செல்வாக்குச் செலுத்திய விடயங்கள் யாவை?

*
*
*
*


***செயற்பாட்டுப்பத்திரம் இல 02***

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள் யாவை?

*
*
*
*

## இணைப்பு 8.5.1.4

வழங்கப்பட்டுள்ள தென்னமெரிக்கத் தேசப்படத்தில் 13 குடியேற்றங்களையும் குறித்துப் பெயரிடுக.






14. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :** மனித இனத்தின் வளர்ச்சிக்கு பிரான்சியப் புரட்சி அடிப்படையான விதத்தை ஆராய்ச்சி செய்வார்.

**செயற்பாடு 8.5.2 :** மனிதத்ததுவத்தினூடாக வெற்றி கொள்ளப்பட்ட பிரான்சியப் புரட்சியைப் பற்றிக் கற்போம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.2.1
- இணைப்பு 8.5.2.2 செயற்பாட்டுப்பத்திரம்
- உலகப்படம்
- பாடநூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.2.1 :**

- இணைப்பு 8.5.2.1 இல் தரப்பட்டுள்ள வாசகத்தைக் கரும்பலைகையில் எழுதவும். இந்த வாசகத்தை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா என வினவவும். பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடவும்.

> - இது பிரான்சிலிருந்த மேரி அந்தோனியிட் இராணியின் கூற்று.
> - இவள் பதினாறாம் லூயியின் இராணியாவாள்.
> - லூயி மன்னன் பலவீனமான மன்னன் ஆவான்.
> - லூயி மன்னன் பொதுமக்களின் நலனை அலட்சியம் செய்தான்.
> - மக்கள் பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாகி இருந்தமை.
> - இதனால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் சுலோகங்களை எழுப்பியவாறு மக்கள் எழுச்சி பெற்றமை.
> - இது பிரான்சியப் புரட்சி என அழைக்கப்படுகின்றது.

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.2 :**

- மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.5.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை குழுவுக்கு ஒன்று வீதம் பிரித்துக் கொடுக்கவும்.
- சம்பந்தப்பட்ட கற்றற் சாதனங்களைப் பயன்படுத்தியவாறு தகவல்களைச் சேகரிப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.5.2.3 :

- குழுக்கள் தமது செயற்பாடுகளை வகுப்பில் சமர்ப்பிக் வாய்ப்பளிக்கவும்.
- ஏனைய குழுக்களிற்கும் அது தொடர்பான தமது கருத்தினைக் கூறவும் இடமளிக்கவும்.
- குழுக்களின் திறமைகளைப் பாராட்டவும்.
- பலவீனங்களைக் குறைத்துக் கொள்வதற்காகக் கலந்துரையாடவும்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திப் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் மீளாய்வில் ஈடுபடவும்.

- அரசனின் தன்னிச்சையான, ஆடம்பரமான நடத்தையினால் மக்கள் கஷ்டத்துக்கு உள்ளாகியமை.
- 14 ஆம் லூயி மன்னனிலிருந்து 16 ஆம் லூயி மன்னன் வரையிலான காலத்தில் அரசாங்கத் திறைசேரியின் நிதி நிலைமைகள் மிகவும் மோசமடைந்தமை.
- அனாவசியமான வெளிநாட்டு யுத்தங்களிற் பங்குபற்றச் சென்றதன் மூலமும் திறைசேறி காலியாகிப் போனது.
- பிரபுக்கள் சமூகத்தில் சிறப்புரிமைகளை அனுபவித்தவாறு சாதாரண மக்களை நசுக்கிப் பிழிந்து சேவையைப் போலவே அவர்களது வரிகளையும் பெற்றமை.
- சாதாரண மக்கள் தமது வருமானத்தில் 60 சதவீத்தினை விட அதிகமாக வரியாகச் செலுத்தியமை.
- உப்பு வரியினால் மக்கள் பெருங் கஷ்டத்துக்கு உள்ளாகியமை.
- எந்தவிதமான நீதிமன்ற விசாரணைகளுமின்றி சாதாரண மக்கள் பஸ்ரீல் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டனர். இவை அரசன் மீது மக்களுக்கு விரக்தி அதிகரிப்பதற்கு காரணமாகின.
- மத்திய வகுப்பார் தமது கல்வியறிவினாலும் செல்வத்தினாலும் தனவந்தர்களான போதிலும் ஆட்சியில் தமக்கு பங்களிப்புக்கு வாய்ப்பு கிடைக்காமையினால் அதிருப்திக்கு ஆளாகியிருந்தமை.
- ரூசோ, வோல்டேயர், மொன்டஸ்கியூ போன்ற தத்துவ ஞானிகள் மனிதத்துவத்தின் பெறுமானத்தை மதித்தவாறு (நூல்களையும், ஏடுகளையும் மக்கள் முன் கொண்டு சென்றமை) மக்கள் அறியச் செய்தமை.
- அரசின் நிலைபேறுக்கு தேவையான ஏகாதிபத்தியத்துக்குப் பதிலாக ஏராளமான கருத்து மோதல்களால் பிரஞ்சுச் சமுகம் சீரழிவுக்குட்பட்டமை.
- புரட்சியின் காரணமாக, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் எண்ணக்கரு உலகம் முழுவதும் வியாபித்தமை.

(80 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பிரான்சியப் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணிகளை விளக்குவார்.
- பிரான்சியப் புரட்சி மனிதத்துவத்தின் வெற்றி என ஏற்று தமது கருத்துக்களை கூறுவார்.
- சுதந்திரப் பிரகடனத்தின் மூலம் உலகெங்கிலும் மனித நேயக்கருத்துக்கள் வியாபித்த விதத்தை விளக்குவார்.
- குழுவாகச் செயற்படும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- கருத்து வெளிப்பாட்டுத் திறமையை விருத்தி செய்து கொள்ள முன்வருவார்.

## இணைப்பு 8.5.2.1

***பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்***

## இணைப்பு 8.5.2.2

- பிரான்சியப் புரட்சிக்கு அரசனின் நடத்தை செல்வாக்குச் செலுத்திய 4 விடயங்களைக் கூறுக.
- பிரபுக்களின் நடத்தையினால் புரட்சிக்கு வழிகோலிய 3 விடயங்களைக் கூறுக.
- சாதாரண பொதுமக்கள் பிரான்சியப் புரட்சியில் பங்கு பற்றி அதில் ஈடுபடுவதற்கு ஏதுவான 3 காரணங்களைக் கூறுக.
- கல்வியறிஞர்கள் - தத்துவஞானிகள் பிரான்சியப் புரட்சியில் பங்கேற்பதில் செல்வாக்குச் செலுத்திய 3 காரணிகளைக் கூறுக.
- பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் 3 ஐக் கூறுக.
- இந்த அனைத்து விடயங்களுக்குமான விடைகளை வகுப்பறையினுள் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி மட்டம் :** உலகின் போக்கை மாற்றமடையச் செய்வதற்கு கைத்தொழிற் புரட்சி பங்களிப்புச் செய்த விதத்தை விபரிப்பார்.

**செயற்பாடு 8.5.3 :** தொடருகின்ற புரட்சியை அறிந்து கொள்வோம்

**நேரம் :** 160 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.3.1
- இணைப்பு 8.5.3.2
- சுவர்த்தேசப்படம்
- பாடநூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.3.1 :**

- இணைப்பு 8.5.3.1 ஐ மாணவருக்கு காட்சிப்படுத்தவும். படத்தில் காண்பவற்றைப் பற்றி மாணவரை வினவவும். பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துரையாடவும்.

> - 18 ஆம் நூற்றாண்டில் உடல் உழைப்புக்குப்பதிலாக இயந்திராதிகளைப் பயன்படுத்தியமையால் கைத்தொழிற் புரட்சி நிகழ்ந்தமை.
> - முதலில் இங்கிலாந்திலும் அதனைத் தொடர்ந்து மேலும் பல நாடுகளிலும் கைத்தொழில் புரட்சி வியாபித்தமை.
> - நெசவுக் கைத்தொழிலின் உடாக கைத்தொழிற் புரட்சி ஆரம்பமாகியமை.
> - இரும்பு, உருக்கு, நிலக்கரிக் கைத்தொழில் போன்ற துறைகளுக்கு அது பரவியமை.
> - புதிய உற்பத்திகள் பெருந்தொயையாக உருவாகியதுடன் அரசியல், பொருளாதார, சமூக விளைவுகள் ஏராளமாக ஏற்பட்டமை.

(15 நிமிடங்கள்)

**படி 8.5.3.2 :**

- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.5.3.2 இல் செயற்பாட்டுப்பத்திரத்தைப் பொருத்தமானவாறு மாணவர்களுக்கு வழங்கவும்.
- மாணவருக்குத் தேவையான வளங்களை வழங்கவும்.
- தேவையான அறிவுறுத்தலைக் கொடுத்தவாறு வழிகாட்டவும்.

(25 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8.5.3.3 :

- தமது செயற்பாடுகளை முன்வைப்பதற்கு குழுக்களுக்கு வாய்ப்பளித்தல்.
- ஏனைய குழுக்களுக்கும் அது தொடர்பாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல்.
- குழுக்களின் திறமைகளைப் பாராட்டவும்.
- பலவீனங்களைக் குறைத்துக் கொள்வதற்காகக் கலந்துரையாடவும்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்திப் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் மீளாய்வில் ஈடுபடவும்.

| |
|---|
| • கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தின.<br>• கைத்தொழிற் புரட்சியுடன் ஏராளமான புதிய கண்டுபிடிப்புக்களும் நிகழ்ந்தன.<br>• சுரங்கக்கைத்தொழிலும், இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழிலின் வளர்ச்சி<br>• போக்குவரத்து, தொலைத்தொடர்பாடல் துறைகளில் துரித முன்னேற்றம்.<br>• கைத்தொழிற் புரட்சியின் காரணமாக உற்பத்திப் பரிமாணம் அதிகரிப்பு<br>• கைத்தொழிற் புரட்சியின் பின் பண்டங்களின் தரம் அதிகரித்தமை.<br>• கைத்தொழிற் புரட்சியின் தொழிலாளர் வகுப்பும் முதலாளித்துவ வகுப்பும் தோற்றுதல்.<br>• கைத்தொழிற் புரட்சியுடன் நகர்புற, குடிசை, சேரிக் குடியிருப்புகள் தோன்றியமை.<br>• கைத்தொழிற் புரட்சியுடன் சுற்றாடல் மாசடைதலும் ஆரம்பமாகியமை.<br>• ஐரோப்பிய நாடுகளுக்கிடையே மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளல், சந்தைகளைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றுக்கான போட்டிகள் உலக மகா யுத்தம் வரை பரவியமை. |

(120 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**


- கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாவதற்கான காரணங்களை விபரிப்பார்.
- கைத்தொழில் புரட்சி ஆரம்பமாகிய இங்கிலாந்தையும் அது பரவிய ஏனைய நாடுகளையும் உலகப் படமொன்றில் நிழற்றிப் பெயரிடுவார்.
- நெசவுக் கைத்தொழில், நிலக்கரிக் கைத்தொழில், இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழில்களில் உண்டான புதிய உற்பத்திகளைப் பெயரிடுவார். தேவையான படங்களைச் சேகரிப்பார்.
- தைத்தொழிற் புரட்சியின் விளைவுகளை அட்டவணைப் படுத்துவார்.
- கூட்டாகச் செயற்படுவதன் மூலம் அனுபவம் பெறுவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 8.5.3.1

### செயற்பாட்டுப்பத்திரம்







## இணைப்பு 8.5.3.2

### செயற்பாட்டுப்பத்திரம்

*குழு 1*

உங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதானது, ஐரோப்பாவின் மாதிரித் தேசப்படமொன்றாகும்.

கைத்தொழிற்புரட்சி ஆரம்பமாகிய நாட்டையும் பரவிய நாடுகளையும் அடையாளமிட்டுப் பெயரிடுக. இதற்கென தேசப்படப்புத்தகமொன்றைப் பயன்படுத்தவும்.

*குழு 2*

கைத்தொழிற் புரட்சியினால் ஏற்ற மாற்றங்களைப் பின்வரும் தலைப்புகள் ஊடாக குறித்துக் கொள்வது உங்களுக்கான ஒப்படையாகும்.

- நெசவுக் கைத்தொழில்
- இரும்பு மற்றம் உருக்குக் கைத்தொழில்
- நிலக்கரிக் கைத்தொழில்

*குழு 3*

கைத்தொழிற் புரட்சியினால் ஏற்ற மாற்றங்களைப் பின்வரும் தலைப்புகள் ஊடாக குறித்துக் கொள்வது உங்களுக்கான ஒப்படையாகும்.

- போக்குவரத்து
- தொலைத்தொடர்பு

*குழு 4*

கைத்தொழிற் புரட்சியினால் ஏற்ற மாற்றங்களைப் பின்வரும் தலைப்புகள் ஊடாக குறித்துக் கொள்வது உங்களுக்கான ஒப்படையாகும்.

- நன்மையான விளைவுகள்
- தீமையான விளைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பகுதி

# கணிப்பீடும் மதிப்பீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீடும் மதிப்பீடும்

## அறிமுகம்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாக பின்னூட்டல் (Feed Back) முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தியாக்குவதற்கு பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத் திட்டத்தினூடாக மாணவர்கள்

நடைமுறைப்படுத்தப்படும் இக்கலைத் திட்டம் கற்றல்- கற்பித்தல், கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றுடன் ஒன்றிணைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டினதும் படி 2இன் மாணவர்கள் குழுவாகக் கண்டறிதலில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும், படி 3இன் போது குழுக்கள் தமது பெறுபேற்றை முன்வைக்கும் போதும் விரிவாக்கம் செய்யும் போதும் அவர்களை மதிப்பீடு செய்யவும் ஆசிரியருக்கு முடியுமாகும். மாணவர்கள் தேடலில் ஈடுபடும் போது மாணவர்களை அணுகி அவர்கள் செய்யும் பணிகளை அவதானித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான வசதியும், வழிகாட்டலும் வழங்குவது ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும வகையில் ஐந்து நியதிகளை முன்மொழியப்படுகின்றது. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்களை ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.



15. S. P. C. 080688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடு - மதிப்பீடு பற்றி வேலைத் திட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை விரிவுபடுத்த முடியும். இவ்வாறு கற்றல்- கற்பித்தலை நீடிப்பதற்கு முதலில் செய்ய வேண்டிய செயற்பாட்டுத் தொகுதியில் உள்ள செயற்பாடுகளை சில பிரிவுகளாக வகுத்துக் கொள்வதாகும். மாணவர் கற்றலை மலரச் செய்யக் கூடிய சில பிரிவுகளை ஒவ்வொரு செயற்பாடுடனும் தொடர்புபடும் பாடப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளை நீடிக்கும் உபகரணங்களைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாக இருப்பதுடன் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இவ்வுபகரணங்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தலும் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் நீடிப்பதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில வகைகள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடன் பேச்சு (Impromptu Speeches)
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்ச்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாட்காட்டி, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதி கற்றல்-கற்பித்தல் நீடிப்புச் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய உபகரணங்கள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் உள்ளேயும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கு மேலும் விரிவடைவதுடன், ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கு முடியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் - கற்பித்தல் செயன்முறை விரிவுபடுத்தற் கருவிகள்

## தரம் : 08

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 01**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- கண்டி இராசதானியின் ஆரம்பம், பரம்பல் பற்றிய தகவல்களை விசாரணை செய்வார்.
- கண்டி இராசதானியின் நிர்வாகக் கட்டமைப்பை விசாரணை செய்வார்.
- கண்டி இராசதானியின் சமூகப் பொருளாதார, கலாசாரத் தகவல்கள் தொடர்பில் விசாரணை செய்து தேசிய அருஞ்செல்வங்களையும் தேசிய தனித்துவத்தையும் பாதுகாப்பார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

- 8.1 அலகு

**4.0 கருவியின் இயல்பு**

தகவற் கோவையொன்றைத் தயாரித்தல்

**5.0 கருவியின் நோக்கம்**

- கண்டி இராசதானியின் ஆரம்பம் தொடர்பான தகவல்களைக் கற்றலில் ஈடுபடுத்தல்.
- கண்டி இராசாதானி யுகத்தின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார தகவல்களை கற்றலுக்குட்படுத்தல்.

**6.0 கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- வகுப்பு மாணவரின் எண்ணிக்கைக்கு அமைய பொருத்தமான குழுக்களாக அமைக்கவும்.
- மதிப்பீட்டு நியதிகள் பற்றி மாணவர் அறியச் செய்யவும்.
- பின்வரும் தலைப்புகளின் கீழ் தகவற் கோவையொன்றைத் தயாரிக்க வேண்டும் என மாணவருக்கு அறிவிக்கவும்.
  - கண்டி இராசதானியின் ஆரம்பமும் பரவலும்
  - நிர்வாக ஒழுங்கமைப்பு
  - பொருளாதார அமைப்பு
  - சமூக, கலாசாரத் தகவல்கள்
- இது தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய வேறு மூலாதாரங்களைப் பெற்றுக் கொள்ள மாணவருக்கு உதவவும்.
- சித்திரங்கள், தேசப்படங்கள், படங்கள் என்பவற்றை உள்ளடக்கி தகவற் கோவையை ஆக்கபூர்வமாகத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கவும்.
- பெற்றுக் கொண்ட தகவல்களை ஏ4 தாள்களில் எழுதிக் கோவையை பூரணப்படுத்துவதற்கு அறிவுரை வழங்கவும்.
- மேலுறையை ஆக்கபூர்வமாகத் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவினது தகவல்களை முழு வகுப்பிற்கும் சமர்ப்பிப்பதற்கு அறிவுரை வழங்கவும்.
- சரியானவற்றை, தவறானவற்றை ஏற்றுக் கொள்ள மாணவருக்கு வழிகாட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- பாடநூலின் 8.1 அலகை நன்கு கற்கவும்.
- ஆசிரியர்/ ஆசிரியை அறிமுகஞ் செய்த வேறு மூலாதாரங்களைக் கற்பதற்கு முயற்சியெடுக்கவும்.
- தமக்கு ஒப்படைக்கப்பட்ட தலைப்புக்குரிய படங்கள், தேசப்படங்கள், சித்திரங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- தகவற் படிவங்களுக்கு ஏற்றவாறு ஏ4 தாள்களில் நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்களை அறிக்கைப்படுத்தவும்.
- வகுப்பின் ஏனைய மாணவருக்கு நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்களைச் சமர்ப்பிக்கவும்.
- பிழையானவற்றைச் சரிசெய்து தகவற் கோவைக்குள் உள்ளடக்கவும்.
- பொருத்தமான மேலுறையொன்றை அமைக்கவும்
- ஓய்வான சந்தர்ப்பங்களில் தகவற் கோவையை வாசித்து, சம்பந்தப்பட்ட பகுதிகளை குறித்துக் கொள்ளவும்.

## 7.0 மதிப்பீட்டு நியதிகள்

- தொனிப்பொருளுக்கு ஏற்றது.
- ஆக்கபூர்வமானது
- தகவல்கள் சரியானவை
- ஆசிரியர் அறிவுரைகளை ஏற்றலும் உரிய காலத்துக்குள் பூர்த்தி செய்தலும்
- ஒட்டு மொத்தமான நேர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் கற்பித்தல் செயன்முறை விரிவுபடுத்தற் கருவிகள்

## தரம் : 08

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம்**

தவணை 02

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச் சிக்கு அடிப்படையாய் அமைந்த வரலாற்றுப் பின்னணியை விசாரணை செய்வார்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் உலகில் அது வரை நிலவியவற்றை மாற்றியமைப்பதில் பங்களித்த விதத்தினை விசாரணை செய்வார்.
- புதிய கடல்மார்க்க வர்த்தகப் பாதைகள் பற்றிய விபரங்களையும் அவற்றைக் கண்டறிந்தமையால் உலகில் தனித்துக் காணப்பட்ட நாடுகள் உலகிற்கு அறிமுகமான விதத்தை உசாவுவார்.
- நாடுகாண் பயணங்களைக் காண்பிக்கும் உலகப் புறவுருப்படத்தில் பிரதான பாதைகள், நாடுகள், இடங்களைக் குறித்துப் பெயரிடும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

8.3 ஆம் அலகு

**4.0 கருவியின் தன்மை**

- புத்தகமொன்றைத் தயாரித்தல்

**5.0 கருவியின் நோக்கம்**

- ஐரோப்பியர் கீழ்த்திசைக்கு வருகை தருவதில் தாக்கஞ் செலுத்திய காரணிகளை ஆராய்வார்.
- உள்ளூர் ஆட்சியாளர்களின் கருத்து வேறுபாடுகள் போரத்துக்கேயருக்கு இலங்கையில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளப் பங்களித்தமையை ஆய்வு செய்தல்.
- போர்த்துக்கேயரின் ஆட்சியைக் காரணமாகக் கொண்டு இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ள வாய்ப்பளித்தல்.
- போர்த்துக்கேயர் ஆட்சியின் காரணமாக இலங்கையில் நிகழ்ந்த விளைவுகளிடையே இன்றுவரை நடைமுறையிலுள்ள சமூக, கலாசார அம்சங்களை அறிந்து கொள்ளச் செய்தல்.

**6.0 கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.**
**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- வினாக்கொத்தொன்றைத் தயாரிப்பது தவணை முழுவதும் செயற்படுத்தப்படும் என மாணவர் அறியச் செய்யவும்.
- வினாக்களைத் தயாரிப்பதற்காக வகுப்பை ஏற்ற வித்தில் குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் வினாக்களைத் தயாரக்கும் பொருட்டு பயன்படுத்தக் கூடிய உப விடய அலகுகளைப் பகிர்ந்து கொடுக்கவும்.
- தயாரிக்கப்பட்ட எல்லா வினாக்களுக்குமுரிய விடைகளை அவ்வினாவுக்கு அருகிலேயே எழுதும்படி மாணவருக்கு அறிவுரை வழங்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழுக்களுக்கமைய உப விடய அலகுகளை இவ்வாறாகப் பகிர்ந்து கொடுக்கலாம்.

  குழு 1 - 8.3.1
  குழு 2 - 8.3.2
  குழு 3 - 8.3.3
  குழு 4 - 8.3.4
  குழு 5 - 8.3.5

- வினாக்களைத் தயாரிக்கும் விதம் தொடர்பாக மாணவரை அறியச் செய்யவும்.
  உ-ம்:
  - தயாரிக்கப்படும் வினா தமது குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயம் தொடர்பாக இருத்தல்.
  - ஒவ்வொரு வினாவுக்கும் உரியதான குறுகிய விடையை தெளிவாக சமர்ப்பிக்கக் கூடியதாயிருத்தல்
  - வினாக்களைத் தயாரித்துக் கொண்டு வரவேண்டிய இறுதித் தினம் தொடர்பாக மாணவரறியச் செய்யவும்.
  - ஒவ்வொரு குழுவும் தயாரத்த வினாக்களை வாசித்துத் தேவையான திருத்தங்களைச் செய்யவும்.
  - தர உள்ளீட்டின் மூலம் ஏ4 தாள்களை மாணவருக்கு வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்குமுரிய தலைப்புடன் தாம் தயாரித்த வினாக்களை ஏ4 தாளின் தனிப்பக்கத்தில் பிரதி செய்து அதற்கான விடையை குறிக்கும்படி அறிவுத்தவும். (வினாக்களை ஒரு நிறத்தையும் விடைகளைக் குறித்துக் கொள்ள வேறு நிறத்தையும் பயன்படுத்தும்படி அறிவுறுத்தவும்.)
- எல்லாக் குழுக்களும் தமது பணிகளைச் செய்து முடித்ததும் விடய உள்ளடக்கத்தின் ஒழுங்கு வரிசையின் படி தயார் செய்த வினாக்கொத்தைக் கோவை செய்யவும்.
- எல்லாத் தலைப்புக்களையும் சேகரித்த பின்னர் புத்தகமாகக் கோத்து மாணவர் பயன்படுத்துவதற்காக வகுப்பில் வைக்கவும்.

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஆசிரியர் ஆசிரியையின் அறிவுறுத்தலின்படி தமது குழுக்குக கிடைத்த தலைப்புக்காக சுருக்கமான வினாக்களையும் அதற்குரிய விடைகளையும் தயார் செய்யவும்.
- பாடப்புத்தகத்தில் காணப்படும் எல்லா முக்கியமான விடயங்களையும் ஏற்ற விதமாக வினாக்களாகத் தயாரிக்கவும்.
- அலகுக்கான எல்லா வினாக்களையும் தயாரித்தபின் ஆசிரியர் ஆசிரியையின் அறிவுறுத்தலின்படி புத்தகத்தைத் தயாரிக்கவும்.
- தேசப்படங்களையும், படங்களையும் உள்ளடக்கி, ஆக்க பூர்வமாக வினாக்களைத் தயாரிக்கவும்.
- ஏற்ற தலைப்பையும் படங்களையும் பயன்படுத்திப் புத்தகத்தை பூரணப்படுத்தவும்.
- சம்பந்தப்பட்ட தலைப்புத் தொடர்பாக கற்கைச் செயற்பாடுகளுக்காக அப்புத்தகத்தை வகுப்பில் அனைத்து மாணவரும் பயன்படுத்தக் கூடிய விதமாக வகுப்பில் வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் கற்பித்தல் செயன்முறை விரிவுபடுத்தற் கருவிகள்

### தரம் : 08

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 03**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- அரசனது அதிகாரத்தையும் மேலோங்கிச் சென்ற பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட போராட்டம், மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த வித்ததை விபரிப்பார்.
- ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு யாப்பின் காரணமாக அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த விதத்தை விபரிப்பார்.
- தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பிரான்சிய மக்கள் கொண்டு சென்ற புரட்சியின் விளைவுகள் மனித இனத்தின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்த விதத்தை ஆராய்வார்.
- உடல் உழைப்பினால் செய்யப்பட்ட வேலைகளை இயந்திரங்களிடம் ஒப்படைத்த கைத்தொழில் புரட்சி உலகின் போக்கை மாற்றியமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஆய்வு செய்வார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

- 8.5 அலகு

**4.0 கருவியின் இயல்பு**

வினா - விடை நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்

**5.0 கருவியின் நோக்கம்**

- 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மனிதனால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாக கற்கச் செய்தல்.

**6.0 கருவியை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- வகுப்பு மாணவரின் எண்ணிக்கைக்கு அமைய வகுப்பை நான்காகப் பிரித்து 8.5.1, 8.5.2, 8.5.3, 8.5.4 உப அலகுகளாக ஒவ்வொரு குழுவுக்கும் பகிர்ந்து கொடுக்கவும்.
- பினாக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர் அறியச் செய்யவும்.
  - குறுகிய விடையுடனான வினா தயாரித்தல்
  - தேசப்படங்கள், படவரைபுகள், படங்கள் என்பனவற்றைக் கொண்டு ஆக்கபூர்வமான வினாக்களைத் தயாரித்தல்.
  - ஒவ்வொரு உப அலகுக்கும் 3 வினாக்கள் (முப்பது) வீதம் தயார் செய்வித்தல்.
- தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தைக் கொண்டுவர வேண்டிய தினத்தை அறிவிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வினா - விடை நிகழ்ச்சி நடாத்த முன் மாணவர் தயரித்த வினாக்களை ஏற்றவாறாக திருத்திக் கொள்ளவும்.
- குழுப்போட்டியாக இது நடத்தப்பட்டாலும் எல்லா மாணவருக்கும் தனித்தனியாக விடையளிக்கக்கூடியவிதமாக வாயப்பு கிடைக்குமாகையால் உப அலகு 4 ஐயும் நன்கு கற்று ஆயத்தமாகும் படி அறிவுறுத்தவும்.
- மதிப்பீட்டு நியதிளைப் பற்றி மாணவர் அறியச் செய்யவும்.
- நிகழ்ச்சி நடாத்தப்படும் நாள்/ பாடநேரம் என்பவற்றை அறியச் செய்க. 4 வினாக் கொத்துக்களையும் இலக்கத்துண்டுகளை எழுத்தி பெட்டிக்குள் இடவும்
- குழுக்களை வெவ்வேறாக அமரச் செய்யவும்.
- குறைந்த பட்சம் ஒவ்வொரு மாணவருக்கும் 3 வினாக்களுக்காவது விடையளிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் விதமாக போட்டியை 3 சுற்றுக்களை நடாத்தவும்.
- மாணவர் தொகை குறைவாயின், பயன்படுத்தக்கூடிய நேரத்துக்கமைய போட்டிச் சுற்றுக்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கவும்.
- வினாக்களுக்கு விடையளித்த பின் தேவையான சந்தர்ப்பங்களில் பிழைகளைத் திருத்தவும் விளக்கங்கொடுப்பதற்காகவும் தலையீடு செய்யவும்.

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- இந்த வினா - விடை நிகழ்ச்சியின்போது 8.5 அலகுக்குரிய உப அலகுகளிலிருந்து தயார் செய்யப்படும் வினாக்களுக்கு தனித்தனியாக விடையளிக்க வேண்டியிருப்பதால் இந்த அலகை நன்கு கற்று போட்டிக்கு ஆயத்தமாக்கவும்.
- தமது குழுவுக்கு ஒப்படைக்கப்படும் உப அலகையும் நன்கு கற்கவும்.
  - பாடப்புத்தகம், மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மூலாதாரங்களையும் கற்று உரிய வினாத்தொகையைத் தயார் செய்யவும்
  - தேசப்படம், படம், சித்திரம் போன்றவற்றைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக வினாக்களைத் தயார் செய்யவும்.
- உரிய தினத்தில் ஊக்கமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்ளவும்.

## 7.0 மதிப்பீட்டு நியதிகள்

- தொனிப்பொருளுக்கு ஏற்றது.
- ஆக்கபூர்வமானது
- தகவல்கள் சரியானவை
- சரியான விடையைத் தருதல்
- குழுவினுள் ஒற்றுமையைச் செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ඉතිහාසය 8 - ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය (දෙ)

ISBN 978 - 955 - 654 - 243 - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover Design by: Sandya Atapattu